47

திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

வாங்கல் சுப்பிரமணியசுவாமி

GAZETTEER UNIT
411/60
17 JUN 1965
RECORD OFFICE BUILDINGS

மாலை ௨] சார்வரி வைகாசி ஜூன் 1960 [மணி ௯

ரதி.

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

திருவாரூர்க் கமலாலயத்திருக்குளத்தில் தெப்பம்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை -6.

பொருளடக்கம்

1. வைணவ ஆலயத் திருவிழாக்கள்
2. திருக்களிற்றுப்படியார்
3. வைணவம்
4. வாழைத் தோட்டத்து அய்யன்கோயில்
5. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
6. கிருஷ்ணவதாரம்
7. கண்ணப்பநாயனர்
8. நவதிருப்பதி அநுபவம்
9. திருஏடகம்
10. திருவலிதாயம்
11. திருவாதவூர்
12. துறைமங்கலம்-சிவப்பிரகாசர்
13. அழகிய மணவாளதாசர்

47

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] சார்வரி வைகாசி - 1960 ஜூன் [மணி 9

GAZETTEER UNIT
4/11/60
RECORDS OFFICE MADRAS

வைஷ்ணவ ஆலயத் திருவிழாக்கள்

தஞ்சைமாவட்டத்திலுள்ள மன்னார்குடி வைஷ்ணவ ஆலயத்தில் நடைபெறும் பதினெட்டு நாள் உற்சவத்தின் விளக்கத்தில் வைஷ்ணவ ஆலயங்களில் உபயோகிக்கப்பெறும் பல்வேறு வாகனங்களைப்பற்றியும் அவற்றின் தத்துவங்களைப்பற்றியும் குறிப்புக்கள் சென்ற இதழில் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. அந்த வாகனங்களில் பல மற்ற வைஷ்ணவ கோயில்களிலும் சிற்சில மாறுதல்களுடன் உபயோகிக்கப்படுகின்றன.

ஸ்ரீ கள்ளழகர் கோயில் என்று வழங்கும் திருமாலிருஞ் சோலைமலை ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில் சித்திரை மாதத்தில் நடைபெறும் திருவிழா மிகவும் பிரசித்திபெற்றது. இதைச் 'சித்திரா பௌர்ணமித் திருநாள்' என்று சிறப்பாகச் சொல்வதுண்டு. மதுரை ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவும் அழகர்கோயிலில் நடக்கும் சித்திரா பௌர்ணமித் திருவிழாவும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன. ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் நடைபெறும் உற்சவம் மாசி வீதிகளில் நடைபெறுவதால் இது முன் காலத்தில் மாசித் திருவிழாவாக இருந்ததாகவும், திருமலை நாயக்க மன்னன் காலத்தில் இரண்டு விழாக்களையும் ஒரே காலத்தில் நடத்த ஏற்பாடு செய்ததாகவும் சொல்வதுண்டு. புராணங்களிலோ சாத்திரங்களிலோ ஆதாரம் இல்லாத ஒரு கதை சாதாரணமக்களிடையே நிலவி வருகிறது; ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் தன் தங்கை மீனுட்சியம்பாள் திருக்கல்யாணத்திற்காக மதுரையை நோக்கி வந்ததாகவும் வையையாற்றின் கரையில் வந்தபோதே திருக்கல்யாணம் நடைபெற்று விட்டதாகத்தெரிந்து ஆற்றின் அக்கரைக்குச் செல்லாமலே திரும்பிவிட்டதாகவும் கதை சொல்லப்படுகிறது. திருமலைநாயக்கர் இந்த இரண்டு திருவிழாக்களையும் ஒரே சமயத்தில் நடத்த ஏற்பாடு செய்ததால் இரண்டு உற்சவங்களுமே சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

முன்பெல்லாம் ஸ்ரீகள்ளழகர் அலங்காநல்லூர், தேனூர் முதலிய கிராமங்களின் வழியாக வந்து வையையாற்றில் இறங்கி வண்டியூரில் தங்கியிருந்து திரும்புவது வழக்கம்; இப்போது சித்திரா பௌணமிக்கு முதல் நாள் பெருமாள் தங்கப்பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்துடன் அழகர் கோயிலிலிருந்து புறப்பட்டு கல்லந்திரி, அப்பன் திருப்பதி முதலிய ஊர்களிலும் வழி நெடுகிலும் உள்ள பல மண்டபங்களில் தங்கி, மதுரை தல்லாகுளத்திலுள்ள ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு வந்து தங்குவார். அதற்கு முன் மூன்று நாட்கள் அழகர் கோயில் கல்யாண மண்டபத்திலேயே திருவிழா நடைபெறும். அந்த மூன்று தினங்களிலும் அழகர் தோளுக்கினியாலில் எழுந்தருளுவார். மதுரைக்கு எழுந்தருளும்போது அவரை எதிர்கொண்டழைக்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சுமார் மூன்று கல் தூரம் சென்று மூணுவாமடி என்னுமிடத்தில் வழிபட்டு உடன் வருவார்கள். இதற்கு எதிர்சேவை என்று பெயர். தல்லாகுளத்திலுள்ள அம்பலகாரர் மண்டபத்தில் அன்றிரவு வாண வேடிக்கைகள், கூத்துக்கள், மேளதாளங்கள் சிறப்பாக நடைபெறும்.

சித்திரா பௌர்ணமியன்று ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் திருமஞ்சனம் ஆகி குதிரை வாகனத்தில் எழுந்தருளி ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வரும் ஸ்ரீஆண்டாளுடையதிருமாலையைச்சாத்திக்கொண்டுவெட்டிவேர் சப்பரத்தில் வையைநோக்கி எழுந்தருளுவார். ஸ்ரீ கறுப்பண்ண சுவாமி கோயிலில் ஆயிரம் பொன் சப்பரம் என வழங்கும் பிரமாண்டமான அலங்காரச் சப்பரத்தில் எழுந்தருளி வையையை அடைவார். அழகர் வையையாற்றில் இறங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். 'ஆற்றைக் கண்டாயா, அழகரைச் சேவித்தாயா' என்ற பழமொழியும் இந்த திருநாள் நினைவாகவே எழுந்தது. அழகர் ஆற்றில் இறங்கியதும் மதுரையிலிருந்து ஸ்ரீவீரராகவப் பெருமாள் அவரை எதிர்கொண்டு சங்

158340

திக்கும் காட்சி இத்திருவிழாவில் மிகவும் சிறப்புடைய பகுதி. ஸ்ரீ கள்ளழகர், வையாழியான வுடன் ஸ்ரீ வீரராகவப் பெருமாளுக்கு மாலை சாதித்தருளி விடைபெற்றுக் கொள்வார். பல்லாயிரக் கணக்கான மக்கள் இக்காட்சியைக் கண்டுகளிப்பார்கள். இந்த உற்சவத்தில் இதுவே பெரிய விழா. ஏராளமான மக்கள் ஆற்றின் இருகரைகளிலும், ஆற்றின் உட்பகுதியிலும், மண்டபங்களிலும் இரவும் பகலும் கூடியிருக்கும் காட்சி ஒரு அரும்பெருங் காட்சி. அதன் பின்பு அழகர் குதிரை வாகனத்திலேயே பலமண்டபங்களில் சேவை சாதித்துப் பகல் பனிரெண்டு மணிக்கு இராமராயர் மண்டபத்தைச் சேர்வார். அன்றிரவு வண்டியூர் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளித் தங்குவர். அதிகாலையில் அங்கு திருமஞ்சனம் கண்டருளி, சைத்தியோபசாரம் செய்துகொண்டு பத்தியுலாவுதல் நடைபெறும். பின்பு சூரியோதய காலத்தில் திருமஞ்சனமாகி சேஷவாகனத்தில் தேனூர் மண்டபத்திற்கு எழுந்தருளுவார். அங்கு மறுபடியும் திருமஞ்சனமாகி கருடவாகனருடாய் மண்டூக மகரிஷிக்குப் பிரசன்னமாகி அவர் சாபத்தைத் தீர்த்து மோட்சம் அருளுவர். அன்றிரவு இராமராயர் மண்டபத்தில் தங்கி, தசாவதார அலங்காரத்துடன் சேவை சாதிப்பார். கடைசியாக மோகனவதார கோலத்தில் பத்தியுலாவுதல் நடைபெறும். பின்பு திருமஞ்சனமாகி ஆனந்தராயர் பல்லக்கில் இராஜாங்கத் திருக்கோலத்துடன் மைசூர் மண்டபத்துக்கு எழுந்தருளுவர். அங்கு திருமஞ்சனம் கண்டருளி மீண்டும் கள்ளர் திருக்கோலத்துடன் புஷ்பப் பல்லக்கில் ஸ்ரீ கறுப்பண்ணசுவாமி சந்நிதிக்கு எழுந்தருளி வையாழியானவுடன் திருமாலிருஞ் சோலைக்குத் திரும்பவும் எழுந்தருளுவார். மறவர் மண்டபம், அப்பன் திருப்பதி, கல்லந்திரி இந்த மூன்று இடங்களிலும் திருமஞ்சனம் நடைபெறும். இவ்வாறு ஒன்பதாம் நாள் காலையில் ஸ்ரீ கள்ளழகர் மீண்டும் ஆஸ்தானம் சேருவார். இதில் முதல் மூன்று நாட்கள் உற்சவம் கோயிலிலுள்ள கல்யாண மண்டபத்தில் நடைபெறும். மூன்று நாட்கள் மதுரைக்குப்போவதிலும் வருவதிலும் வழி நெடுக உள்ள மண்டபங்களில் திருமஞ்சனம், திருவாராதனம் நடைபெறும். மீதிமூன்று நாட்களும் அழகர் வையையாற்றில் சேவை சாதிப்பார். அந்த மூன்று நாட்களிலும் தான் சேவார்த்திகள் கூட்டம் மிகவும் அதிகமாக இருக்கும். விளையாட்டுக்களும், ஆரவாரங்களும், கேளிக்கைகளும், வாணவேடிக்கைகளும் ஏராளமாக இருக்கும். அழகர் கோயிலில் நடக்கும் உற்சவங்களில் இதுதான் பிரதானமானது.

இந்தத் தலத்தில் நடைபெறும் மற்ற திருவிழாக்கள் வைகாசி வசந்தம், ஆடி பிரமோற்சவம், ஐப்பசித் தொட்டியுற்சவம், கார்த்திகைக் கைசிகம், மார்கழித் திரு அத்தியயன உற்சவம், மாசித்தெப்பம், பங்குனித் திருக்கல்யாணம் முதலியன. வசந்தோற்சவம், வசந்த மண்டபத்திலேயே பத்து நாட்கள் நடக்கும். ஆடி பிரமோற்சவமும் பத்து நாட்கள் நடைபெறும். ஒன்பதாம் நாள் ஆடிப் பௌர்ணமியன்று இரதோற்சவம் நடைபெறும். சித்திரைத் திருவிழாவுக்கு அடுத்த பெரிய உற்சவம் இந்த பிரமோற்சவம் தான் மார்கழி மாதத்தில் இராப்பத்து, பகல்பத்து உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். இதில் எட்டாவது நாள் தங்கக் குதிரை வாகன சேவை முக்கியமானது. பங்குனி உத்திரத்தன்று கள்ளகழருக்கும் ஸ்ரீ ஆண்டாளுக்கும் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெறும். விநாயக சதுர்த்தி பிருதுவித் திருவிழாவாகவும், ஆடி பதினெட்டாம்பெருக்கு அப்புத்திருவிழாவாகவும், கார்த்திகைத்தீபம் அக்கினித் திருவிழாவாகவும், சரஸ்வதி பூசை வாயுத்திருவிழாவாகவும், மகரசங்கராந்தி ஆகாசத்திருவிழாவாகவும், பஞ்சபூதத்திருவிழாக்களாக நடைபெறுகின்றன. இந்த திருக்கோயிலின் முன் பக்கமுள்ள பதினெட்டாம் படிக் கறுப்பண்ணசாமிக்கு ஆடி அமாவாசையன்றும், பௌர்ணமியன்றும் சிறப்பாக விழா நடைபெறும். இவ்வமயம் மதுரையிலிருந்து பூசாரிகள் வந்து விசேஷ பூசைகள் செய்வார்கள். பிரமோற்சவ காலத்தில் சக்கரத்தாழ்வார் வரும்போது இந்தப் பதினெட்டாம் படிக்கதவு ஆண்டுக்கொருமுறை திறக்கப்படுகிறது. சில சமயங்களில் பிரமாணம் செய்கிறவர்களுக்காகவும் திறக்கப்படும். ஒவ்வொரு நாளும் நூபுரகங்கையிலிருந்து கொண்டு வரப்படும் திருமஞ்சனம் பதினெட்டாம்படிக் கறுப்பரிடம் முதலில் வைக்கப்பட்டுப் பிறகுதான் அழகர் திருமஞ்சனத்திற்காக எடுத்துச் செல்லப்படுகிறது. ஸ்ரீ கள்ளழகர் சித்திரா பௌர்ணமிக்கு மதுரை நோக்கிச் செல்லும்போது அவர்மீதுள்ள நகைகளின் பட்டியலை இந்த காவல் தெய்வமாகிய பதினெட்டாம்படி கறுப்பண்ணசாமியிடம் படித்துக் காண்பிப்பதும், பிறகு திரும்பி வரும்போது அவர் முன் அந்தப்பட்டியலை வாசித்துச் சரிபார்ப்பதும் வழக்கமாக இருக்கிறது. அழகர் மலையிலுள்ள நூபுர கங்கை முதலிய தீர்த்தங்களுக்கும் தலங்களுக்கும் அதி தேவதையான இராக்காயி அம்மன் உருவம் கோயிலின் மூன்றுவது பிரகாரத்தில் வடமேற்கு திசையில் வடபுறமாக இருக்கிறது. அமாவாசை தோறும் இந்த அம்மனுக்கு விசேஷ பூசை நடைபெறும்.

(தொடரும்)

திருப்பனந்தாள், *அருணஜடேசுவரசுவாமி கோவிலில் சைத்ரமகோற்சவம் 29-4-60 முதல் 13—5—60 வரை நடைபெற்றது. 6—5—60 முதல் 9—5=60 திருமுறை மாநாடு நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றது.*

திருமுண்டீச்சரம் என்னும் கிராமம், *சிவலோகநாதசுவாமி கோயிலில் அப்பர் திருவிழா 21—4—60-ல் கொண்டாடப்பட்டது. சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.*

திருக்களிற்றுப்படியார்

[திரு. K. வச்சிரவேல் முதலியார் பி.ஏ., எல்.டி.,]

ஆசிரியரும் காலமும்

சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுவது திருக்களிற்றுப்படியார் என்பது. இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் ஆவர். இவர் திருவுந்தியார் அருளிச்செய்த திருவிசலூர் உய்யவந்த தேவநாயனாருடைய மாணாக்கருக்கு (திருவிசலூர் ஆளுடைய தேவ நாயனாருக்கு) மாணாக்கர் ஆவர் என்பது முன்னரே விளக்கப்பட்டது. திருக்களிற்றுப்படியார் இயற்றப்பட்ட காலம் கி. பி. 1177 எனக் கொள்ளப்படுகின்றது.

நூலின் இயல்பு

இந்நூல் திருவுந்தியாரின் உட்கருத்தை மரபு மாத்திரையால் மேற்கோள்கள் காட்டி விளக்கும் வழி நூலாகும். இது 100 நேரிசை வெண்பாக்களால் ஆயது. வெண்பாக்கள் எல்லாம் சொல் நயமும் பொருளாழமும் இழுமென் ஓசையும் உடையவையாய்க் கற்போர்க்கு இன்பம் பயப்பனவாய் உள்ளன.

நூற் பெயர்க் காரணம்

இதன் ஆசிரியர் இந்நூலைத் தம் மாணாக்கர் பொருட்டுத் திருவருள் சார்பாகத் தலைநின்று இயற்றியருளி, தில்லையில் கனக சபைக்குச் சென்று வணங்கி, இதனைத் திருக்களிற்றுப்படியின்மீது வைத்தருளினார். உடனே, கூத்தப்பெருமான் திருவருளால், திருக்களிற்றுக்கை நிமிர்ந்து, இதனை வாங்கிக் கூத்தப் பெருமான் திருவடியிற்கொண்டு உய்த்தது. இக்காரணம்பற்றி இது **திருக்களிற்றுப்படியார்** என்னும் பெயர்பெற்றது. இவ் வரலாற்றிலிருந்து நாம் இதன் சிறப்பை உணரலாகும். திருக்களிற்றுப்படி என்பவை பிரணவத்தோடு கூடிய திருவைந்தெழுத்தைக் குறிப்பவை. ஆதலால், அவை பஞ்சாக்கரப்படி எனவும் வழங்கப்படும். பிரணவம் யோக நெறியைக் குறிக்கும். திருவைந்தெழுத்து யோகத்தில் விளையும் ஞானநெறியைக் குறிக்கும். திருவம்பலம் ஞானநெறியால் எய்தப்படும் நாலாம் நிலை எனப்படும் துரிய அருணிலையைக் குறிக்கும். கூத்தப்பெருமானது எடுத்த திருவடி பரமுத்தி நிலையாகிய துரியாதீத ஆநந்த நிலையைக் குறிக்கும். குறித்தலின், இந்நூல், தன்னைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவோரை யோகம் ஞானம் என்னும் படிவழியால் துரிய அருள்நிலை, துரியாதீத ஆநந்தநிலை என்னும் நிலைகளில் உய்க்கும் சிறப்பினை உடையது என்பது நூற்பெயர்க் காரணத்தால் உணர்தற்குரிய நுண்பொருள் ஆகும்.

பொருணிலை

இந்நூலுள் முதல் மூன்று வெண்பாக்களால் முறையே (i) முதல்வன் இயல்பும், (ii) முதல்வனை அடைதற்கு உரிய ஞான நெறியின் பொதுவியல்பும், (iii) அந்நெறி கலை ஞான (நூல்) வடிவில் வந்த பாரம்பரியமும் உணர்த்தப்படுகின்றன. இம் மூன்று பாட்டுக்களையும் உபோற்காதம் எனப்படும் பாயிரம் எனக் கூறலாம்.

பின்வரும் 97 வெண்பாக்களும் திருவுந்தியாரை அடியொற்றிச் சென்று, அதன்கண் குறிப்பாக உணர்த்தப்பட்ட பொருள்களை விரித்தும், விளக்கியும், விதந்தும், தலையாய பிரமாண நூல்கள் அனுபவம் என்பவற்றிலிருந்து மேற்கோள் காட்டியும் தெளிவிக்கின்றன. ஆகலின், அவற்றின் பொருணிலையை முதனூலில் வகுத்து எடுத்துக் கொண்டதுபோல, (1) குருவருள், (2) சாதனம், (3) அணைந்தோர்தன்மை என மூன்று கூறுபடுத்தி ஆராய்வது பொருத்த

பாயிரம் :

(1) முதல்வன் இயல்பு

அம்மையப்பரேஉலகுக்
கம்மையப்பர் என்றறிக;
அம்மையப்பர் அப்பரிசே
வந்தளிப்பர்—அம்மையப்பர்
எல்லா உலகுக்கும்
அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர்

என்பது முதற்பாட்டு.

இதன் பொருள் : காணப்படும் உலகுக்குக் காரணமாய், அஃது உருவாய்ப் புலப்பட்டுத் தோன்றுதற்கு முன் இருந்த பொருளே முதற்பொருள் எனப்படும். அதன் இயல்பைக் காணப்படும் உலகைக் கொண்டே ஊகித்து அறிதல் வேண்டும். அங்ஙனம் அறியின், உலகுக்குச் சார்பாய் நின்று தொழில்படுத்தும் கருவியாயிருப்பது திருவருளும், தொழிற்படுத்துவோன் முதல்வனும் ஆம் என்பது விளங்கும். அஃதாவது, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றதற்கு இணங்க, உலகிற்கு அன்னையும் அப்பனுமாய் முன்னின்று உபசரிப்பவர் திருவருள் எனப்படும் சத்தியோடுகூடிய சிவபெருமானே என்பது அறியப்படும் என்றபடி. அவ் வம்மையப்பர் நாம் பிறப்பிறப்புக்களுள் உழலும்போது நம் அறிவுக்கு அறிவாகி உடன்வந்து, பக்குவ முதிர்ச்சியில், அருளும் அருளுக்கு முதலுமாம் ஒருமையின் இருமையாந்தன்மை தோன்றும்படி எதிர்ப்பட்டு மெய்யுணர்வைத் தந்தளிப்பர். அவர் நம் உணர்வின் முதலாய் உடன் நிற்பினும், நம்மனோர் உணர்வுக்கு அப்பாற்பட்டுக் காணப்படாமல் கடந்து நிற்பர். நிற்பினும் எல்லாப் பொருளும் அவராலே செயற்படுதலின், அவர் உலகத்தில் தொடக்குறாது, உலகெலாமாகி நிற்பர் எனக்கொள்க.

(2) முதல்வனை அறியும் நெறி

மேலே முதல்வன் இயல்பு உணர்த்தும்போது, அவன் நம் உணர்வுக்கு முதலாய் உடன்வந்து அளிப்பன் (அம்மையப்பர் அப்பரிசே வந்து அளிப்பர்) என்றமையின், அவனை நம் உணர்வின்கண் தலைப்படும் நெறியே ஈண்டுக் கூறப்படும் ஞானநெறியாவது என இரண்டாம் பாட்டால் கூறுகின்றார் :—

தம்மில் தலைப்பட்டார்
பாலே தலைப்பட்டுத்
தம்மில் தலைப்படுதல்
தாம்உணரின்—தம்மில்
நிலைப்படுவர் ஓரிருவர்
நீக்கிநிலை யாக்கின்
தலைப்படுவர் தாம் அத் தலை

என்பது இரண்டாம் பாட்டு.

முதல்வனை முன்னர்க் கலைஞானங் கொண்டு உய்த்துணர்ந்து அவன் இயல்பு இன்னது என உணர்கின்றோம். இது கேள்வி ஞானம். இங்ஙனம் கேட்டுத் தெளிந்தோர் அம் முதல்வனைத் தம் அறிவின்கண் தலைப்பட்டு உணர்தல் வேண்டும். முதல்வன் தம் அறிவுக்கறிவாய் நின்று உணர்த்திவரும் உபகாரத்தை விளங்க உணர்தலே அவனைத் தலைப்பட்டு உணர்தல் ஆகும். தம்மில் தலைப்பட்டு உணர்ந்தார்க்கு, அம்முதல்வன் புறத்தே உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஒளியுமாய் நின்று எல்லாவற்றையும் தன் ஐந்தொழிலிற் படுத்தி நடாத்தும் முதன்மை தெளியப்படும். இவ்வாறு முதல்வன் இயல்பை அனுபவமாய் உணரும் உணர்வே மெய்யுணர்வு எனப்படும். மெய்யுணர்வை இவ்வாறு உணருமாறும் அதன் பயனும் இவ்விரண்டாம் பாட்டால் தொகுத்துக் கூறப்படுகின்றது:

அம்மையப்பரைத் தம்மில் அனுபவமாய்த் தலைப்பட்டுணர்ந்த அனுபூதிமானாகிய சற்குருவனை அடைந்து, அவன் உணர்த்திய குறிவழி நின்று, முதல்வன் தம் உணர்வின் முதலாய் உடனாகி நிற்குமாற்றை ஒருவன் சிந்தித்து உணரின், அங்ஙனம் உணர்பவனது உணர்வில் பேரறிவு வடிவாகிய திருவருளும், அத்திருவருளுக்கு முதலாக ஞான ஆனந்தமயமாகிய சிவமும் நிலையாக இருத்தல் விளங்கும். அவ் விளக்கம் சலியாதபடி தற்போதம் கெடுதற்குரிய உபாயங்களை ஆசிரியன் உணர்த்தும் நெறியாற் சாதித்துத்

துரிய அருணிலைக்கு மேற்பட்டதாகிய அதீத ஆனந்த நிலையை எய்தி அதனினின்றும் கீழ் இழியாது நிற்பின், அங்ஙனம் நிற்போன் அவ்விடத்து முதல்வனைத் தலைப்பட்டோன் ஆவன் — என்பது பாட்டின் பொருள்.

(3) நூல் வந்தவழி

ஓர் ஆசிரியர் (திருவிசலூர் உய்யவந்த தேவர்) தற்போதம் நீங்கிய நிலையில் யான் நின்று அறிந்தபடி தற்போதம் நீங்கப்பெற்றோர் கேட்க எனச் சொன்னார்; அவர் சொன்னபடி சொல்லக்கேள் என்று ஒருவன் (திருவிசலூர் ஆளுடைய தேவர்) எனக்கு அதனைச் சொன்னான் (திருவுந்தியாரை உபதேசித்தார்). யான் (திருக்கடவூர் உய்யவந்த தேவர்) உனக்கு (தம் மாணக்கர் ஒருவருக்கு) அச்சொல்லைச் சொல்லக் கேள் — என உரை நடை அமைய நூற்பொருளின் பாரம்பரியம் மூன்றும் பாட்டால் உணர்த்தப்படுகிறது இதன் விளக்கம் திருவுந்தியார் பற்றிய முதற் கட்டுரையிலேயே கொடுக்கப்பட்டது.

(தொடரும்)

செய்திகள்

தர்மபுரி கோட்டை, பரவாசுதேவசுவாமி கோயிலில் ஸ்ரீராமநவமி பத்தாவது ஆண்டு உற்சவ விழா 5—4—60 முதல் 14—4—60 வரை நடைபெற்றது.

குறிச்சி, கோதண்டராமசுவாமி கோயிலில் ஸ்ரீராமநவமி உற்சவ விழா 5-4-60ல் நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

திருக்கடவூர், குங்குலியக்கலய நாயனார் திருமடாலயத்தில் 21—4—60-ல் சிவபூஜை மாநாடு, திருமுறைக்கோயில், நூல்நிலையத்திறப்பு விழா, திருநாவுக்கரசுநாயனார் குருபூஜை முதலிய விழாக்கள் 21—4—60ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையில் நடைபெற்றன. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

◆ ◆ ◆ ◆

சோளசிம்மபுரம், இலட்சுமிநரசிம்மசுவாமி கோயிலில் பிரம்மோற்சவ விழா 30-4-60 முதல் 14—5—60 வரை நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

தேரழுந்தூர், ஆமருவிப்பெருமாள் கோயிலில் கம்பர்விழா 10—4—60 முதல் 12—4—60 வரை நடைபெற்றது. முதல்நாள் ஓய்வுபெற்ற டிப்டி கலெக்டர் திரு. ஸ்ரீரங்காச்சாரியார் தலைமையில் மாணவர்களுக்கு கம்பராமாயணப்பாடல் போட்டி நடைபெற்றது. இரண்டாம்நாள் விழாவை துவக்கிவைத்தது திருமருவாய் எஸ்டேட் ஸ்ரீ டி. எஸ். சுந்தரம் அய்யங்கார் அவர்கள். தலைமைவகித்தது மாயவரம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் திரு. சண்முகசிகாமணி, எம்.ஏ., அவர்கள். திருவாளர்கள் டி. எஸ். சுந்தரம் அய்யங்கார், வித்துவான் கே. வெள்ளைவாரணனார், சென்னை இராகவாச்சாரியார் ஆகியோர் முறையே 'வேள்விகாத்தல்', 'கம்பர் புலமைத்திறம்' 'இராமாவதாரதத்துவம்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். மூன்றும்நாள் விழாவிற்கு திரு. ம பொ சிவஞானகிராமணியார் தலைமை வகித்தார்கள், "கம்பன் இன்பம்" என்னும் பொருள்பற்றி வித்துவான் திரு. செ. வெங்கடராம செட்டியார் அவர்கள் சொற்பெருக்காற்றினார்கள்.

◆ ◆ ◆ ◆

திருநாகேஸ்வரம், நாகநாதசுவாமி கோயில் 14—1—60 முதல் நடைபெற்றுவந்த இலட்சார்ச்சனை 14—4—60ல் பூர்த்தியடைந்தது. அன்றையதினம் ரூ. 5000/- மதிப்புள்ள வெள்ளிக்கவசம் ஒன்று செய்விக்கப்பட்டு தஞ்சை உதவி ஆணையர் திரு. விவேகானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்,டி., அவர்கள் தலைமையில் அம்பிகைக்கு அணிவிக்கப்பட்டது. புதியதாக சண்முக சபையும், திருப்பள்ளியறையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

விசுவரூபம் - 3

(வில்லிபாரதத்திலே)

(பி. ஸ்ரீ.)

பெருந்தேவனார் பாரதத்தில் கண்ணனது விசுவரூபக் காட்சி வருணிக்கப்படுவது போல் வில்லிபாரதத்திலும் வருணிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். கிருஷ்ணபக்தரான வில்லிபுத்தூரர் தமது பாரதத்திலே 27-ஆம் சருக்கமாகிய 'கிருட்டிணன் தூதுச் சருக்கத்'தில் கண்ணபிரான் துரியோதன சபையில் விசுவரூபம் கொண்டதைத் தமது பக்தியும் மனோபாவமும் நன்கு புலப்பட வருணித்திருக்கிறார். பெருந்தேவனார் பாரதத்தில் இந்தச் சந்தர்ப்பத்திலே நாம் காணும் கவித்திறனை இங்கே நாம் காண்பதற்கில்லை; ஆனால் இந்த விசுவரூப வருணனையும் வைஷ்ணவ தத்துவத்தில் தோய்ந்து உருவாகியது தான்.

சகாதேவன் கண்டது விசுவரூபமா ?

ஐவருள் முதல்வனான தருமன் கண்ணனை நூற்றுவரிடம் தூதுவிடத் தீர்மானிக்கிறான், 'தூது பயன்படாது' என்று பீமன் முதலிய தம்பிமார் சொல்லுகிறார்கள். சகாதேவன் மட்டும் கண்ணனுடைய திருவுள்ளத்தை நன்குணர்ந்தவனாகி, போரில் ஐவரையும் கண்ணன் காப்பாற்ற வேணுமென்று வரம் கேட்கிறான். அந்தச் சகாதேவன் முன் கண்ணன் பல வடிவுகொண்டு காட்சியளிப்பதாகவும், அவன் மூல வடிவை உணர்ந்து தன் கருத்தினால் கண்ணனைக் கட்டிவிடுவதாகவும் மகாபாரதம் தெரிவிக்கிறது. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் கண்ணன் காட்டியது விசுவரூபக் காட்சியா?

பதினாறாயிரம் வடிவங்களைக் கண்ணன் காட்டியதாக வில்லி சொல்லுகிறார்.

தூயவனும் மூலமாம்
தோற்றம்உணர்ந்(து), எவ்வுலகும்
தாய அடியிணைகள்
தன்கருத்தி னால்பிணித்தான்.

[தாய-தாவிய. அடியிணைகள்-இரண்டு திருவடிகளையும். பிணித்தான்-கட்டினான்.] என்கிறார் வில்லிபுத்தூரர்.

சகாதேவனின் பக்திநிலையைச் சோதித்து அறிந்துகொள்வதற்காகப் பல வடிவங்களைக் காட்டிய கண்ணன், அந்தப் பன்மையில் மயங்காது சகாதேவன் அன்பால் தன்னைப் பற்றிப் பிணித்துக்கொண்டதற்காக அந்தப் பக்தனைப் பாராட்டுகிறான் என்றே வில்லி தெரிவிக்கிறார். விசுவரூபமோ பல உருவங்களாகப் பிரிந்து தோன்றும் காட்சி அல்ல; பன்மையெல்லாம் ஒருசேர ஓர் உருவில் தோன்றும் காட்சிதான். இத்தகைய விசுவரூபத்தைக் கருத்தினால் பிணித்தல் இயலுமா?

சூழ்ச்சியும் காட்சியும்

இதயசோதனைக்காரனாகிய கண்ணன் துரியோதனனையும் ஒருவகையில் சோதிக்கத்தான் செய்கிறான். அத்தினபுரியின் தென்புறத்துச் சோலை ஒன்றில் கண்ணன் அமர்ந்திருக்க, துரியோதனனுக்குத் தூதுவர் செய்தி தெரிவிக்கிறார்கள். கண்ணனுக்காக இடம் முதலிய வசதிகளை அமைக்குமாறு கட்டளையிடுகிறான் துரியோதனன். பீஷ்மன் முதலியோர் எதிர்கொள்ளக் கண்ணன் நகருள் வந்து விதுரன் மனையில் தங்குகிறான்.

தான் அமைத்துக் கொடுத்த ஓர் அரண்மனைபோன்ற இடத்தில் தங்காமல் கண்ணன் விதுரன் வீட்டில் தங்கியது துரியோதனனுக்குக் கோபத்தை மூட்டுகிறது. கண்ணன் சபைக்கு வரும்போது யாரும் எதிர்கொள்ளக் கூடாது என்று கட்டளையிடுகிறான். 'ஈ இருக்கும் இடமும் கொடேன்' என்று மறுத்து விடுகிறான், கண்ணன் சபையை நீங்கி விதுரன் மனைக்குத் திரும்புகிறான்.

அன்று இரவு துரியோதனன் ஒரு சூழ்ச்சி செய்து கண்ணனைச் சிறைப்படுத்த

வேண்டுமென்று தீர்மானிக்கிருன். அந்தத் திட்டத்தின்படி ஒரு நிலவறையை அமைத்து அதனுள் அரக்கர் முதலியோரை மறைத்து வைத்து அந்த அறையை மூடி அதன்மேல் இரத்தினமயமான ஆசனமும் அமைத்து வைக்கிருன்.

நின்று நிமிர்ந்த நெடுமால்

பொழுது புலர்ந்ததும் துரியோதனன் தூதுவரை விதுரன் மாளிகைக்கு அனுப்பிக் கண்ணனை அரசவைக்கு அழைக்கிருன். வந்த கண்ணனை நோக்கிப் பொய்யாசனத்தைக் காட்டி, 'அதன்மேல் வீற்றிருக்க' என்கிருன்.

கண்ணன் அமர்ந்ததுதான் தாமதம், நெறுநெறு என்ற சத்தம் ஒருகணம்—அடுத்த கணமே ஆசனம் நிலவறைக்குள்ளே போகிறது ஆனல் கண்ணனும் தான் வீற்றிருந்த அந்த ஆசனத்துடன் உள்ளேதான் போய்க் கொண்டிருக்கிருனு?

நெறுநெ றெனக்கொடு
நிலவறை யில்புக,
நெடியவன் அப்பொழுதே...

என்று பாடுகிருர் வில்லிபுத்தூரர்.

அப்பொழுதே நெடியவனுகிருன் கண்ணன். அடி கீழேதான் போய்க்கொண்டிருக்கிறது. ஆனல் முடியோ மேலே போகிறது.

கீழே கீழே - இன்னும் கீழே - போகிறது கண்ணன் திருவடி. திருமுடியோ மேலே மேலே - இன்னும் மேலே-போய்க்கொண்டேயிருக்கிறது. முடி விண்ணில் முட்டுகிறது; அடியோ அதல - பாதாளத்தில் புதைந்து போகிறது 'அடி அதலத்துஉற, முடி ககனத்து உறவே' என்பது வில்லிபுத்தூரர் வாக்கு.

'அஞ்சினேம், அஞ்சினேம்' என்று விண்ணவர்கள் பணிகிருர்களாம். பாதாளத்தில் உள்ளவர்களோ 'செத்தோம் இன்று!' என்று துன்பப்படுகிருர்களாம். 'இவ்வஞ்சனை நன்று!' என்று நெடியவன் நெஞ்சிலே சினம் எழுகின்றது. இந்த நிலையில் இப்பெருமான் 'உலகு ஒன்றுபடும்படி நின்று நிமிர்ந்தனனே!' என்கிறது வில்லிபாரதம்.

உலகம் ஒன்றுபட நிமிரும் உருவம் ஒன்றுதான். ஆனல் கால்கள் எத்தனை முளைத்துவிடுகின்றன! எத்தனை கைகள் முளைத்தெழுகின்றன!

நிலவறைக்குள்ளே கண்ணனை விலங்கிட்டுச் சிறைப்படுத்த வேண்டுமென்று காத்திருந்த வாளினரும் வேலினரும் வில்லினருமாகிய துஷ்டர்கள் பல கால்களின் பல உதைகளையும் தாங்க முடியாமல் தத்தளிக்கிருர்கள். உடல்கள் தலைகளை இழக்கின்றன. கைகளை இழக்கின்றன. ஒரே நாசக்காடு. என்ன பயங்கர அழகு!

விசுவரூபக் கண்களில் பறக்கிறது நெருப்பு. பெருவாய் பிளந்து சிரிக்கிறது. அந்தக் கண்களில் தான் என்ன அழகு! அவை சொரியும் நெருப்பின் அழகை உய்த்துணரவிட்டு வில்லிபுத்தூரர்,

அண்ட முகட்டுற
நின்று சிரித்தனன்,
அங்கண் நெருப்பெழவே!

[அண்டமுகடு - அண்டத்தின் உச்சி, அங்கண் - அழகிய கண்கள்.]
என்று பாடுகிருர்.

கைகள் பலவும் எத்தனை பயங்கரமான தொழில்களைப் புரிகின்றன! எட்டுத் திசைகளிலும் உள்ள குன்றுகளையும் யானைகளையும் தாக்குகின்றனவாம் ஒருகணம். அடுத்த கணத்திலே விண்ணுலகத்துக் கற்பக தருக்களை முறித்தெறிகின்றனவாம்.

சில கைகள் சங்குகளை வாய்க்குக் கொண்டுபோக, அந்தப் பவள இதழ்கள் பயங்கரமாக முழக்குகின்றனவாம் அந்தச் சங்குகளை.

சில கைகள் வில்லை வளைத்து அம்பு தொடுக்க, வேறு சில கைகள் வச்சிராயுதம் முதலிய எத்தனையோ கொலைக் கருவிகளைத் தரித்துக் கொள்கின்றனவாம். அந்தக் கைகளிலும் அழகு சொட்டுகிறது என்கிருர் புலவர்:

சூலமொ(டு) ஓங்கின,
பாசமொ(டு) ஓங்கின
சூழ்சில பூங்கரமே!

பூங்கரங்களில் பூத்துச் சொரிகின்றன கொலைக் கருவிகள்!

விசுவரூப பயங்கரங்களிலும் அழகு கொஞ்சுகிறது. சில கைகள் வீரக்கழலைக் கால்களில் கட்டிக்கொள்கின்றனவாம். சில கைகள் அழகான மார்பில் ஆபரணங்களைத் திருத்தி அணிந்து கொள்கின்றனவாம். சில கைகளில் விரல்கள் தப்பியுள்ள எதிரிகளைச் சுட்டிக் காட்டுகின்றனவாம்.

சிலசில கைத்தலம்
அணிகொள் உரத்திடை
பணிகள் திருத்தினவே!

சிலசில கைத்தலம்
விரல்கொடு சுட்டின,
செறுநர் திகைத்திடவே!

[உரத்திடை - மார்பிலே. பணிகள் - ஆபரணங்கள். விரல்கொடு - விரலைக் கொண்டு. செறுநர் - பகைவர்.]
என்ற வாக்கைத்தான் பாருங்கள்.

நாமும் திகைத்துப் போகிறோம் இத்தனை முரண்பாடுகளையும் ஒரே உருவத்தில் கண்டு! ஆம். இந்த உருவத்திலே பயத்திற்கும் அழகிற்கும் எல்லா முரண்பாடுகளுக்கும் இடையே ஒற்றுமைதான், ஒருமைதான்!

எங்கும் ஒரே பயங்கரம், ஒரே அழகு—ஒரே நிறமும் கூட!

மாஇரு ஞாலம்
எலாம்வெயில் போய்ஒரு
மரகத சோபையுற

[மாஇரு ஞாலம் - உலகம்.]

என்ற வருணனையைப் பாருங்கள். வெயில்-சூரிய ஒளி - முற்றும் மறைந்து போகிறதாம், இந்த விசுவரூப மரகத சோபையில்.

விசுவரூபத்திற்கு வணக்கம்

விண்ணவர்களும் முனிவர்களும் நான்மறைபாடி வியந்து பணிந்து புகழ்கிறார்களாம். இந்தப் பேருருவத்தின் ஒருமைநிலை உணர்ந்து,

ஆரணனே! அரனே!

[ஆரணன் - பிரமன். அரன் - சிவபெருமான்.]

என்று அழைக்கிறார்கள். 'நாரணனே!' என்கிறார்கள். 'கோபித்துக் கொள்ளாதே, கோபித்துக் கொள்ளாதே' என்று பணிந்து வேண்டுகிறார்கள்.

துரியோதன ராஜசபையிலுள்ள பீஷ்மர் முதலானவர்களும் எழுந்துநின்று தலைமேல் கைகுவித்து வணங்குகிறார்கள்.

'எங்கள் பிழைப்பினை
இன்று பொறுத்தருள்'
என்று பணிந்தனரே.

'கண்ண! பொறுத்தருள்' என்கிறார்கள். 'கார்வண்ண! பொறுத்தருள்' என்கிறார்கள். அன்புடன் இறைஞ்சுகிறார்கள். ஆயிரம் திருப்பெயர்களும் எண்ணி இறைஞ்சுகிறார்கள். இப்படி யாவரும் துதித்து வேண்டக் கண்ணன் தன் விசுவரூபத்தைச் சுருக்கிக் கொள்ளுகிறான். 'அண்டம் உறும் திருமேனி ஒடுங்கினன்' என்கிறார் கவிஞர்.

பேருருவத்தின் உட்பொருள்

இந்த விசுவரூபத்தின் பெரும்பொருள் ஒருமைதான்—தெய்வ ஒருமைதான்—என்பது வில்லிபுத்தூரரின் தேர்ந்த கொள்கை எனக் கருதலாம். திருமேனியை ஒடுக்கிக் கொள்ளும் நிலையில் இப்பெருமானைக் கவிஞர்,

மூவரும் ஒன்றென
நின்றருள் நாதனும்

என்று குறிப்பிடுவதும் கூர்ந்து கவனிக்கத் தக்கது.

இறைவனது விசுவரூபத்திற்கு உலகமெல்லாம் இடம் தருவதுதான் சாத்தியமா? இப்பேருருவின் ஒரு சிறு பகுதியே-சின்னஞ் சிறு பகுதியே—போதும் உலகமெல்லாம் வியாபித்துக் காப்பதற்கு என்ற பெருங்கருத்தைப் பகவத்கீதை முதலான நூல்களில் காணலாம். இதே கருத்தை இந்த ஆசிரியர்,

எந்நில மும்திரு
அடியில் மறைந்திட
இப்படி நின்றிடவும்
என்ற வாக்கில் வெளியிடுகிறார்.

திருவருளுக்கு அறிகுறி திருவடி. திருவடிக்குள்ளே உலகம் அடக்கம். அப்படியானால் பெருவடிவம் (விசுவரூபம்) எப்படியோ? இத் திகைப்பும் ஒருமை யுணர்வும் எல்லாம் விசுவரூபத்தின் உட்பொருள்தான்,

வாழைத்தோட்டத்து அய்யன்கோயில்

மஞ்செனத் திகழும்தூயக்
கிளுவைமரச் சோதியாகி
தஞ்சமென் றடைந்தபேர்க்குத்
தனிப்பெரும் கருணையினுல்
அஞ்சேலென அருள்புரிய
வாழைவனத் தய்யன்திருக்
கஞ்சமொத் தலர்ந்ததாளைக்
கணம் மறவாதேத்துவோமே.

மக்கள் தொண்டே கடவுள் தொண்டு எனக்கொண்டு தம் வாழ்நாட்களைப் பயன் படுத்தி மாண்பு பெற்ற பல பெரியோர் நம் திருநாட்டிடையே இருந்தனர். அத்தகையோரில் ஒருவர் வாழைத்தோட்டத்து அய்யன் என்பவர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம் பகுதியிலுள்ள அய்யன்பாளையம் என்ற ஊரில் வேளாளக்கவுண்டரான செங்காளியப் பருக்கும் அவர் மனைவியாருக்கும் பிறந்தவர் சின்னையன் என்பவர். எட்டு பெண்களுக்குப் பின் ஒன்பதாவது ஆண்மகவாக சக. 1699 (கி பி, 1777-78)ல் தோன்றினர். ஆறு வயதில் பள்ளிக்குச் சென்று பன்னிரண்டு வயது வரையில் கல்வி கற்றார். பின்னர் தந்தையார் விருப்பப்படி மாடுகளை மேய்க்கும் வேலையில் ஈடுபட்டார். மாடுகளை மேய்க்கும்போதே கற்களைச் சேர்த்து உருவமாக்கி மலரிட்டு வழிபடுவதை வழக்கமாகக் கொண்டார். அப்படிப் பூசை செய்துகொண்டிருந்த ஒருநாள் துறவி யொருவர் அவரிடம் வந்தார். சின்னையன் அவரை வணங்கினர். அப்போது பாம்பு ஒன்று அப்பக்கம் போக, துறவியார் சின்னையனை அதைப் போக வேண்டாம் என்று சொல் என்றார். சின்னையனும் அப்படியே சொல்ல அரவம் அசையாமல் இருந்தது. பின்னர் அதைப் போகும்படி சொல்லச் சொல்ல சின்னையன் அப்படியே செய்ய நாகமும் போய்விட்டது. உடனே சின்னையன் துறவியாரின் திருவடிகளில் வீழ்ந்து, நச்சுப்பிராணிகளால் மக்கள் துன்பம் அடைவதினின்றும் மீளும் வழியைச் சொல்லியருள வேண்டும் என்றார். அச்சான்றோர் சின்னையனுக்கு சர்வ விஷ மகாமந்திரத்தையும், பஞ்சாட்சரத்தையும் உபதேசித்தருளினர். சின்னையன் இல்லத்துக்கெழுந்தருளி, ஒரு அறையில் சிவபெருமான் உமாதேவியாருடன் வீற்றிருக்கும் அற்புதக்கோலத்தைக்காட்டி மறைந்து விட்டார். சின்னையன் அவரைத் தேடியலைந்தார். ஆனல் மாடு மேய்த்தலையும் சிவபூசை செய்வதையும் விடாமல் செய்தார். ஒருநாள் அப்பெரியார் திடீரென்று தோன்றி, சின்னையனை இல்லறத்து வாழ்ந்து, மக்கட்தொண்டு செய்யும் படி பல அறிவுரைகளைக் கூறியகன்றார்.

ஆன்றோர் ஆணையின்வண்ணமே சின்னையவேள் திருமணம் புணர்ந்து, மக்களைப் பெற்று, தம்மை நாடி வந்த நோயாளர்களின் தீராப்பிணிகளையும், பாம்பு, தேள் முதலிய நச்சுப்பிராணிகளால் மக்கள் துன்பமடைந்தையும் திருநீற்றாலும் திருவைந்தெழுத்தாலும் தீர்த்துவருவாராயினர். கைம்மாறு எவரிடமும் வேண்டாத கடப்பாட்டை மேற்கொண்டொழுகினர். அவருடைய புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது. அவிநாசி சேவூர் தாசில்தார் மனைவிக்குள்ள வெண்குட்ட நோயைத் திருநீறு பூசச்செய்து குணமாக்கினர். தாசில்தார் ஒரு ஆயிரம் வெண்பொற் காசுகளை ஏற்றுக்கொள்ளும்படி சின்னையனை வேண்ட, ஆண்டவன் அருள் செய்ததற்குத் தாம் கைக்கூலி பெறுவது தகாது என்று சொல்லி கடவுளுக்கே பொருளைச் செலுத்தச் சொன்னர்.

சின்னையவேளின் நிலங்களைக்குத்தகைக்குப் பயிரிட்ட ஒருவன், நன்றாக விளையாமல் துன்பப்பட பண உதவி செய்தார் சின்னையன். அதுவும் பயன்படாமற்போக தன்னுடைய கால் நடைகளையும் உழவுக் கருவிகளையும் அவருக்குச் சேர வேண்டிய தொகைக்காக எடுத்துக்கொள்ளும்படி வேண்டினன். அவைகளை வேண்டாமென்று சொல்லி விடை கொடுத்தனுப்பினர். கால்நடைகளுடன் வெளியேற முயன்ற அவ்வுழவாளியை சின்னையபூபதி மக்கள் தடுத்தனர்; சின்னையன் அவர்களைக் கண்டித்து அவனைக் கால்நடைகளுடன் போகுமாறு செய்தனர்.

சின்னையன் தங்கை சமையல் செய்து கொண்டிருந்த அறையில் ஒரு பெரிய பாம்பு வர, அவள் அலறினாள். எல்லோரும் தடியெடுத்து அடிக்க விரைந்தனர். சின்னையன் அதைத் தடுத்து பாம்பை அழைத்துத் தன்னுடன் வரச்செய்து ஊருக்கு வெளியில் கொண்டு போய் விட்டனர்.

சின்னையன் ஒவ்வோராண்டும் மார்கழித் திருவாதிரைக்குத் திருப்பேரூர் சென்று நடராஜப் பெருமானை வணங்கி வழிபட்டு வருவது வழக்கம். அவருடைய 72-ஆவது வயதில் திருவாதிரைக்கு முதல்நாள் அவருடைய மக்கள் திருப்பேரூர்க்குப் போக அழைத்தனர். "நான் நாளைக் கயிலாயநாதரைச் சென்று தரிசிக்கிறேன். நீங்கள் இன்றுபோய் வாருங்கள்" என்று சின்னையச் செர்மல் விடை கொடுத்தனுப்பினர். மறுநாள் தாம் அன்புடன் வளர்த்து வந்த காளை மாட்டைத்தேடிக் கொண்டு தோட்டத்திற்கு வந்தார். அம்மாடு அவருடனேயே இருக்கும்; அவர் படுக்கைக் கருகில் படுத்திருக்கும். அந்த எருது திடீரெனப் பாய்ந்து சின்னையனின் அடிவயிற்றைக் கொம்புகளால் குத்தித் தூக்கி யெறிந்தது. அவர் இறைவன் திருவடி சேர்ந்தார். அது இன்றைக்கு 100 ஆண்டுகளுக்கு மேலாயிற்று.

அவர் மறைந்தபின், அவருடைய பண்ணையாளின் கனவில் தோன்றித் தாம் பூசித்த இலிங்கம், நந்தி இவைகள் மறைந்திருக்கும் இடத்தைச் சொன்னர். சின்னையரின் மக்கள் அதை எடுத்துவந்து அவர்நட்ட ஒரு கிளுவை மரத்தின் அடியில் வைத்து வழிபாடு செய்து வந்தனர். அதன் பக்கத்தில் ஒரு பாம்பு புற்று வளர்ந்தது. அப்புற்று மண்ணையெடுத்துப் பல நோய்களையும், நச்சுப்பிராணிகள் கடித்ததையும் மக்கள் போக்கிக் கொள்ளலாயினர். பல அற்புத நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இப்போது செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபட்டுப் புற்றுமண் எடுத்துச் செல்கின்றனர்.

கிளுவை மரத்தடியில் இருக்கும் இலிங்கம் மிகச் சிறியது; ஆவுடையார் இல்லை. நந்தியும் மிகச் சிறியதே. கிளுவைமேல் தழைத்திருப்பது இச்சியாக இருக்கிறது. கர்ப்பக் கிரகத்தைச் சுற்றுச் சுவர்கள் மூடியிருந்த போதிலும் மேலே மரச்சட்டத்தில் மூங்கில்பாய்களே போடப்பட்டிருக்கிறது. நடராஜர், தண்டபாணி, விநாயகர் முதலிய உற்சவ மூர்த்திகள் இருக்கின்றனர். சின்னையரின் உற்சவமூர்த்தியும் அழகாகத் திகழ்கிறது. வந்து தங்குகிறவர்களுக்குப் பெரிய கூடங்கள், பொங்கல்சாவடிகள், இலவச அறைகள், வாடகை அறைகள், குளிக்கும் அறைகள், மின்சார விளக்குகள் முதலிய எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

சின்னையன் இளமையில் வாழைத்தோட்டம் குத்தகைக்குப் பயிரிட்ட காரணத்தால் **வாழைத்தோட்டத்து அய்யன்** என்றே அவர் பெயர் வழங்கலாயிற்று. கோயில் இருக்குமிடம் அய்யன்பாளையத்திற்குத் தெற்கேயுள்ள **பெருந்தோட்டம்** என்ற இடம். ஈரோடு-போத்தனூர் இருப்புப் பாதையில் **சோமனூர்** என்ற நிலையத்திலிருந்து தென்கிழக்கே சுமார் மூன்று கல் தொலைவில் அய்யன் கோயிலிருக்கிறது. கோவை - அவிநாசியிலிருந்து பஸ் வழியில் கருமத்தம்பட்டி என்ற இடத்திலிறங்கினல் ஐந்து கல் தொலைவிலுள்ளது. **கதலிவன நாதன் சரிதம்** என்ற நூலும், கோவை சி. கு. நாராயணசாமி முதலியார் எழுதிய வரலாறும் இக்கோயிலைப்பற்றியன.

நற்குணங்கள் செழித்தோங்க
    நலிந்தவர்கள் துயர்நீங்க
புற்றுமண் நீறளித்துப்
    புவியிலுளோர் புண்துடைத்து
கற்பிதமாம் வையமிதில்
    கருணைமிகு மன்பினெரு
வெற்பெனத் துலங்குநல்
    அய்யனடி வாழ்த்துவமே.

மதுரை, கள்ளழகர் கோயிலில் சௌந்திரராஜப்பெருமாளின் சைத்திரோற்சவம் (சித்திரை விழா) 7—5—60 முதல் 15—5—60 வரை நடைபெற்றது.

சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, முல்லாசாயபு தெரு, அரங்கநாதசுவாமி கோயிலில் பாஷ்யக்காரசுவாமி என வழங்கும் உடையவருக்கு 22—4—60 முதல் 2—5—60 வரை சைத்ரோற்சவ விழா நடைபெற்றது.

மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

[மகா்வித்துவான் திரு, P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றில் திருவித்துவக்கோடு, திருநாவாய், திருமூழிக்களம், திருக்காட்கரை ஆகிய நான்கு திருப்பதிகளை யனுபவித்தோம் கீழ். இப்போது திருவண்வண்டூர்ப்பதியை யநுபவிக்கப் புகுகின்றோம். இப்பதி நம்மாழ்வாரொருவரால் மட்டும் பாடப்பட்டது. திருவாய்மொழி ஆறும்பத்து முதற்பதிகம் 'வைகல் பூங்கழிவாய்' என்று தொடங்குவது. இதுதான் திருவண்வண்டூர்ப்பதியைப் பற்றினது. கீழ் ஐந்தாம்பத்தில் 'நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்' என்கிற பதிகந் தொடங்கி அடைவே நான்கு பதிகங்களில் ஆழ்வார் அடுத்தடுத்து எம்பெருமான் திருவடிகளில் சரணகதி செய்தார். பலன் பெறுவித்தே தீரக்கடவதான அந்த சரணகதியும் ஆழ்வார்க்குப் பலிக்கவில்லை.

இராமபிரான் சித்திரகூட மலைச்சாரலில் எழுந்தருளியிருந்தபோது பரதாழ்வான் பரிவாரங்களோடுங்கூடவந்து பண்ணின சரணகதியானது தேவர்களின் பாக்கியமே காரணமாகப் பலிக்கவில்லை யன்றோ. அதுபோலவே நம்முடைய பாக்கியமே காரணமாக ஆழ்வாருடைய சரணகதியும் பலியாதொழிந்தது. ''தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்'' என்றருளிச் செய்தவரன்றோ ஆழ்வார். தொண்டர்களான நம்போல்வார் வாழ்வதற்கென்றே பாசுரங்கள் பாடத் தோன்றியவர் ஆழ்வார். அவருடைய திருவாக்கில் நின்றும் இன்னமும் பாசுரங்களை வெளியிடுவித்து உலகத்தை வாழ்விக்கத் திருவுள்ளம்பற்றின எம்பெருமான் நம்முடைய பாக்கியமே காரணமாக ஆழ்வாருடைய சரணகதியை நிஷ்ப்பலமாக்கினனென்னத்தகும்.

கீழே ஐந்தாம்பத்தின் முடிவில் 'பிறந்தவாறும் வளர்ந்தவாறும்' என்று தொடங்கும் பதிகத்தில் 'உன்னை யென்றுகொல் சேர்வதுவே!' என்றும், 'உன்னை யென்று தலைப்பெய்வனே!' என்றும் 'உன்னை யென்று கொல் கூடுவதே!' என்றும், இங்ஙனே பல வாறு கதறி எம்பெருமான் திருவடிகளிலே கடுகச்சென்று சேரப் பெறவேணுமென்று பாரித்த ஆழ்வார், அப்பெருமான் திருவண்வண்டூரென்னும் மலைநாட்டுத் திருப்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்படியை நோக்கி அங்கே தாம் சென்று சேரமாட்டாதே தம்முடைய நிலைமையை அப்பெருமானுக்குத் தெரிவிக்குமாறு சில புள்ளினங்களை இரந்து தூது விடுகிறார் இப்பதிகத்தில். அதாவது, ஆழ்வார் தாமான தன்மையை யிழந்து பெண்ணிலைமை யெய்திச் சில பறவைகளை எம்பெருமான் பக்கலிலே போகவிடுகிறாரென்கை.

இவ்வாழ்வார் முதற்பிரபந்தமான திருவிருத்தத்தில் வண்டுகளைத் தூது விடுமிடத்து ''எம்மீசர் விண்ணோர்பிரானார் மாசின் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே!'' என்று அவற்றை விளித்திருக்கின்றார். இதனால் எம்பெருமான் திருவடிவாரத்திலே கொண்டு சேர்க்கவல்ல ஆசிரியர்களை வேண்டிக் கொள்வதுதான் தூது விடுவதன் கருத்தென்பது தெற்றென விளங்கும்.

திருவாய்மொழியாயிரத்தில் தூதுவிடும் பதிகங்கள் நான்கு: முதற்பத்தில் 'அஞ்சிறைய மட நாராய்!' என்பது. ஆறும்பத்தில் இப்பதிகமும், மேலே 'பொன்னுலகாளீரோ' என்னும் பதிகமும். ஒன்பதாம்பத்தில் 'எங்கானலகங்கழிவாய்' என்கிற பதிகம். எம்பெருமான் பரம் வியூஹம் விபவம் அந்தர்யாமி அர்ச்சாவதாரம் என்று ஐந்து நிலைமைகளைக் கொண்டிருப்பவனாதலால் அவனது வியூஹநிலையை நோக்கியது முதல் தூது என்றும், விபவாவதாரத்தை நோக்கியது [இப்பதிகத்திலாகின்ற] இரண்டாந் தூது

என்றும், பரத்துவத்தையும் அந்தர்யாமித்வத்தையும் நோக்கியது மூன்றாந் தூதென்றும், அர்ச்சாவதாரத்தை நோக்கியது நான்காவது தூதென்றும் முன்னோர்கள் வகுத்த முறை.

இத்தூது விபவாவதாரத்தை நோக்கியதென்பது, இப்பதிகத்தில் "மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க்கு என்னையு முள ளென்மின்களே" என்றுள்ள பத்தாம் பாசுரத்தினால் விளங்கும். மணவாள மாமுனிகளும் நூற்றந்தாதியில் "வைகல் திருவண்வண்டூர் வைகுமிராமனுக்கு" என்று விபவ மூர்த்தியைக் குறிப்பிட்டேயருளிச் செய்தார். இப்பதிகம் திருவண்வண்டூரிலே தூது விடுவதாகையாலே 'இது அர்ச்சாவதாரத்தில் தூது' என்று நிர்வஹிக்கலாகாதோ? என்னில், சொல்நரம்பைப் பிடித்து ஆசாரியர்கள் நிர்ணயிப்பது அசைக்க முடியாதது. ஒன்பதாம்பத்தில் 'எங்கானலகங்கழிவாய்' என்கிற பதிகத்தினால் தூதுவிடுகையில் "திருமூழிக் களத்தார்க்கே" என்று சொல்லுகையாலே அது அர்ச்சாவதாரத்தூதென நிர்ணயிக்க நின்றது.

தூதுவிடும் போது இரண்டு விஷயங்கள் நோக்கப்பட வேண்டும்; இயற்கையின்னருள் கொண்ட எம்பெருமான் அடியார்களைக் காத்தருளத் தானே பதறி ஓடிவர வேண்டியிருக்க, தூது விடவேண்டும்படி அவன் வாராமைக்குக் காரண மென்ன? என்பது ஒன்று. இப்போது அவன் அவசியம் வந்தே தீரவேண்டும்படி அவனுக்கு என்ன திருக்குணம் நினைப்பூட்டப் படுகின்ற தென்பது மற்றொன்று. இவ்விரண்டும் இப்பதிகத்தில் நன்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. இதில் மூன்றும் பாட்டில் 'சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூருறையும்" என்றுள்ளது. எம்பெருமான் ஆழ்வார் தமக்குக் காட்சி தந்தருளுகைக்காகப் பதறி வாரா நிற்கையில் வழியிடையே திருவண்வண்டூர் நேர்பட்டதாகவும், அங்குச் சிறந்த செல்வம் மிக்கிருக்கையாலே எம்பெருமான் அதிலே பராக்காயிருந்து விட்டதாகவும் நினைத்துத் தூதுவிடுகிறார். இத்தூதில் அவனுக்கு என்ன திருக்குணம் நினைப்பூட்டப் படுகிறதென்னில், ஐந்தாவது பாட்டில் "புணர்த்தபூந்தண்டுழாய் முடி நம்பெருமானைக்கண்டு, புணர்த்த கையினராய் அடியேனுக்கும் போற்றுமினே" என்னப்படுகிறது. 'அடியாரைக் காத்தருள்வதற் கென்று நீர் திருத்துழாய்மாலை அணிந்து கொண்டிருக்கிறீரே; என்னை நோக்காவிடில் இந்த மாலையணிதல் பயனற்றதாகுமே' என்று தெரிவிக்கும் முகத்தால் 'ஆச்ரிதரக்ஷண தீக்ஷிதத்வம்' என்னுந் திருக்குணம் நினைப்பூட்டப்பட்டதாகிறது. ஆக, அடியார்களைக் காத்தருளத் தனிமாலை யிட்டிருக்கிற நீ ஒரு தலத்தில் சிறந்த செல்வங்களைக் கண்டு கொண்டு தாமதித்திருப்பது தகுதியன்றென்று தெரிவிப்பதாக முடிந்தது.

இனி, பாசுரங்களை அடைவே அனுபவிப்போம், (1) "வைகல்பூங்கழி வாய்வந்து மேயுங் குருகினங்காள்!, செய்கொள் செந்நெலுயர் திருவண்வண்டூருறையும், கைகொள் சக்கரத் தென் கனிவாய்ப் பெருமானைக்கண்டு, கைகள் கூப்பிச் சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையே." இதில் முதலடியில், தூதுவிடப்படும் பறவைகளின் நலம் தெரிவிக்கப்படுகிறது. இரண்டாமடியில் இப்போது உத்தேச்யமான திருப்பதியின் வாய்ப்பு பேசப்படுகிறது. மூன்றாமடியில் அத்திருப்பதியிலுறையும் பெருமானுடைய பெருமை உணர்த்தப்படுகிறது. ஈற்றடியில், விண்ணப்பம் செய்ய வேண்டிய விஷயமும் விண்ணப்பம் செய்யும் முறையும் கூறப்படுகின்றது. குருகினங்கள் தூது விடப்படுகின்றன. அவை வெண்ணிற முடையனவாயிருக்கும். திருப்பல்லாண்டில் "நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமுமத்தாணிச் சேவகமும், கையடைக்காயுங் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும், மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிராக்கவல்ல" என்றருளிச் செய்தபடியே சுத்தாத்மாக்களாகவுள்ள ஆசிரியர்கள் இங்கு விளிக்கப்படுபவர்கள். குருகினங்கள் வாழ்வது நீர்க்கரையிலேயாகையாலே 'பூங் கழிவாய் வந்து மேயும்' என்று அவற்றுக்கு அடைமொழி கொடுக்கப்பட்டது. கடலையடுத்த நீர்ப்பரப்புக்குக் கழியென்று பெயர். பூங்கழி யென்பதனால் ரமணீயமாயிருக்குந் தன்மை சொல்லப்படுகிறது. குருகினங்கட்கு உணவு கிடைக்குமிடம் அது. அதுபோல ஆசிரியர்கட்கு உணவு கிடைக்குமிடம் காலக்ஷேப கோஷ்டி. "கண்ணாணில் ஓவாத்

தொழில் சார்ங்கன் தொல் சீரை நன்னெஞ்சே! ஓவாதவூணாக வுண்'' என்று இவ்வாழ்வார்தாமேயருளிச் செய்தபடி எம்பெருமானுடைய திருக்குணங்களே ஆசிரியர்கட்கு உணவாதலால் அவ்வுணவு கிடைக்குமிடம் காலக்ஷேப கோஷ்டியேயாகும். கார்கலந்த மேனியானுடையவும் கைகலந்தவாழியானுடையவும் சீர்கலந்த சொல் நினைந்து போதுபோக்கும் ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடைய சுத்தாத்மாக்களே! என்று விளித்தவாறு. [வைகல் வந்து மேயும்.] எப்போதும் நீங்கள் உங்களுடைய உணவை மட்டுமேயோ நோக்குவது? பிறர் காரியமும் சிறிய செய்ய வேண்டாவோ? என்பது குறிப்பு. எம்பெருமான் என்கைக்கு எட்டாதே போனாலும், அவனைப் பெறுவிக்குமவர்களான நீங்களாவது எப்போதும் என் கண் வட்டத்திலே வாழ்கின்றீர்களே; எனக்கு இதுவொரு பாக்கியமல்லவா? என்று காட்டுகிறபடியுமாம். குருகுகளே! என்னை மல் குருகினங்காள்! என்கையாலே ''தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே'' என்கிறுப்போலே நீங்கள் துணைபிரியாதே வாழ்கிற இவ்வாழ்ச்சி என்காரியம் செய்வதற்காகவே யென்றிருக்கிறேன் என்று காட்டுகிறபடி.

இனி இரண்டாமடியினால் திருவண்வண்டூர்க்குத் தூது போகவேணு மென்பது தெரிவிக்கலாகிறது. அப்பதிக்குச் செய்கொள் செந்நெலுயர் என்று அடைமொழி கொடுத்தது, உங்களுக்கு வேண்டிய உணவு அங்குங் கொள்ளைகொள்ளையாகக் கிடைக்குங்காணும் என்று தெரிவிக்க. இது மேலெழுந்த கருத்து. அர்ச்சாவதாரங்களில் (அதாவது ஆலயங்களில்) எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு நிவேதனம் செய்ய அமுதுபடி வேணுமே. அதற்குச் செந்நெற் பயிர்கள் இன்றியமையாதவை. வயல்களைக் கொள்ளை கொண்டு செந்நெற்பயிர்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றனவென்று ஆழ்வார் திருவுள்ளம் பூரித்து அருளிச் செய்கிறபடி.

அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானை (மூன்றாமடியில்) கைகொள் சக்கரத்தனைக் கூறுவதற்குப் பல கருத்துக்களுண்டு. சக்கரத்தைச் சொன்னது சங்கையும் சொன்னபடியாகி, திருவாழி திருச்சங்கும் கையுமான வழகை முந்துற முன்னம் நீங்கள் காணப் பெறுவீர்கள்; என்காரியம் செய்வது கிடக்கட்டும்; முன்னம் உங்களுக்கன்றோ பெருப் பேறுவாய்க்கப் போகின்றது! என்று தெரிவித்தவாறு. அன்றியே, ''எப்போதும் கை கழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்'' என்கிறபடியே பகை துணிக்கவல்ல படைகள் அவனது திருக்கைத் தலங்களில் திகழ் கையாலே விரோதிகளைப்பற்றி நீங்கள் அஞ்ச வேண்டா என்று குறிப்பித்தவாறுமாம். அன்றியும், இப்பதிகத்தின் கீழ்ப்பதிகத்தில் ''பிறந்தவாறும் வளர்ந்தவாறும்'' என்று கிருஷ்ணாவதாரத்தை அநுஸந்தித்து ஆறுமாதம் மோஹித்திருந்த ஆழ்வாராகையாலே அவ்வவதாரத்தில் 'ஜாதோஸி தேவ தேவேச! சங்கசக்ரகதாதர!' என்னும்படி கையுந் திருவாழியுமாக அவதரித்தமை திருவுள்ளத்திலே படிந்திருக்கையாலே முதலிலே அவ்வடையாளத்தைக் கூறுகின்றபடியுமாம். 'பிறந்தவாறும்' என்றதற்குப் பிறகு 'வளர்ந்தவாறும்' என்றது திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளினபடியை நினைத்தாகையாலே அங்கு அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர் பெண்டிர்க்கு அணுக்கனுக் கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் கூழைமை செய்தபடிகளெல்லாம் திருவுள்ளத்திலே நிழலிட்டுத் தோற்றியிருக்கையாலே 'கனிவாய்ப் பெருமான்' என்று இதுவும் ஓரடையாளமாகக் கூறப்படுகின்றதென்க.

இனி ஈற்றடியில், வினையாட்டியேன் காதன்மையைச் சொல்ல வேணும், கைகள் கூப்பிச் சொல்லவேணும் என்கிறது. ஆழ்வாருடைய காதல் என்றால் அது சாமான்யமன்றே. தம்முடைய காதலைப்பற்றித் தாமே சொல்லுமிடத்து முதலில் 'காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி' என்று கடல்போன்றது தம் காதலென்றார். பிறகு 'காதல் கடலில் மிகப் பெரிதால்' என்று கடலினும் பெரிதென்றார். அதன் பிறகு 'கொண்டவென் காதலுரைக்கில் தோழீ! மண்டிணி ஞாலமு மேழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதால்' என்று அக்காதல் எல்லை கடந்து விஞ்சினபடி கூறினார். ஆக இவ்வளவு பெருமையையும் 'ஆழ்வார் காதல்' என்றவாறே அவன் தெரிந்து கொள்ளக் கூடுமென்றெண்ணி 'வினையாட்டியேன் காதன்மை சொல்லீர்' எனப்பட்டது. வினை

யென்னுஞ் சொல் நல்வினை தீவினை யிரண்டுக்கும் பொதுவாதலால் தீவினையாட்டியே னென்று மேலெழச் சொல்லுவதால் நல்வினை யாட்டியே னென்று உள்ளுறச் சொல்லுகிற படி. எம்பெருமான் திறத்துக் காதல் கொண்டிருப்பது ஜன்மாந்தரஸஹஸ்ர நற்றவப் பயனன்றோ.

'குருகினங்காள்!' என்று விளித்துக் 'கைகள் கூப்பிச் சொல்லீர்' என்றது கவனிக்கத் தக்கது. குருகுகளுக்குக் கைகளில்லை யென்பது ஆழ்வாரறியாததன்றே. அறிந்து வைத்தும் 'கைகள் கூப்பி'யென்கையாலே கைவிரகர்களான ஆசாரியர்களையே கருதிச் சொன்னமை விளங்கிற்று. [தொடரும்]

திருப்புகலூர்க்கோயில் திருநாவுக்கரசர் விழா திருமுறை மாநாடு.

சாமிநாதபுரம், நட்டாற்றீசன் கோயில் மகா சங்காபிடேக விழா 13—4—60ல் நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருச்சிராப்பள்ளி, மலைக்கோயில், தாயுமானசுவாமி கோயில் சித்திரைத்தேர் பெருந் திருவிழா 29—4—60 முதல் 14—5—60 வரை சிறப்பாக நடைபெற்றது.

திருக்கடவூர், அமிர்தகடேசுவரசுவாமி கோவில் சைத்ர மகோற்சவ விழா 16-4-60 முதல் 15—5—60 வரை நடைபெற்றது.

பிட்சாண்டார்கோயில், உத்தமர்கோயில் 2—5—60 முதல் 13—5—60 வரை பிரம்மோற்சவ விழா நடைபெற்றது.

கிருஷ்ணுவதாரம்: அபூர்வமான செய்திகள்

கண்ணன் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் துவாபரயுகம் முடிந்துகலியுகம் தொடங்கிய அந்த யுக் சந்தியில் தோன்றியதாகவும், 125 வயது வாழ்ந்ததாகவும் பாகவத புராணம் சொல்லுகிறது. அர்ச்சுனனைக் காட்டிலும் கண்ணன் மூன்று மாதம் பெரியவன் என்றும் தெரிவிக்கிறது.

தரும புத்திரன் 108 வயது வாழ்ந்தாளும். தம்பி பீமன் ஓராண்டு இளைஞன். அர்ச்சுனன் ஈராண்டு இளமையானவன் என்றும், நகுல சகதேவர் என்ற இரட்டையர் மூன்ருண்டு இளமையானவர் என்றும் மகா பாரதத்து ஆதி பருவம் (கும்பகோணப் பதிப்பு) தெரிவிக்கிறது. கண்ணன் மறைந்ததைக் கேள்விப்பட்டபின் ஐவரும் தங்கள் பேரனுகிய பரீட்சித்து என்பவனுக்கு முடி சூட்டினூர்களாம். இந்தக் கணக்கிலே கண்ணன் 105 அல்லது 106 வயது வாழ்ந்ததாகவே ஏற்படுகிறது.

தீமையை ஒழிக்கப் பிறந்தான்

இந்த ஆயுட் காலத்தின் பெரும் பகுதியும் துஷ்ட நிக்கிரகத்திலேயே கழிந்தது. பிறந்த சில வாரங்களுக்குள்ளே பெற்றதாய் போல் வந்த பேய்ப் பெண்ணுகிய பூதனையைக் கண்ணன் கொன்ருெழித்தான் என்பது புராணப் பிரசித்தம். மாமனுகிய கம்சனைக் கண்ணன் வதைத்த கதையும் எல்லாரும் அறிந்ததே. இந்த மாமனையும் அசுரனுகவே குறிப்பிடுகிறது புராணம்.

கண்ணன் தோன்றிய காலத்தில் உலக மக்களை அசுர பலமும் ஆவேசமும் கொண்டிருந்தவர்கள் அடக்கி ஒடுக்கி ஹிம்சித்து வந்ததாகப் புராணங்களிலிருந்தும் பகவத் கீதையிலிருந்தும் தெரிந்து கொள்கிருேம். அசுரர் அரசராகப் பிறந்து கண்ணன் உறவினராகவும் பிறந்து - அதிகார வெறிகொண்டிருந்ததாகவும், காமம், குரோதம் (பகைமை) லோபம் (பேராசை) என்ற மூன்று வாசல்கள் வழியாக நரகத்திற்குள் புகுந்துவிட அவர்கள் வழிகண்டு, காட்டி வந்ததாகவும் தெரிந்து கொண்டிருக்கிருேம். இவர்களில் கம்சனைப் போல் கம்சனுடைய மனைவியின் தந்தையாகிய -அதாவது பெண் கொடுத்த மாமனுகிய- ஜராசந்தனும் பிரசித்தமானவன். மகத நாட்டை ஆண்டுவந்த ஜராசந்தன் யவனர் தலைவன் ஒருவனைத் துணையாகக் கொண்டு கண்ணனைக் கொல்ல முயன்ருன். கண்ணன் தந்திரமாக முசுகுந்தனுல் அந்தத் துஷ்ட யவனன் வதமாகுமாறு செய்துவிட்டான். இந்த யவனன் யார்? 'கிரேக்க யவனனு?' என்று ஐயப்படுவோரும் உண்டு, அப்படியானுல் கண்ணன் காலத்திலேயே இந்தியாவுக்கும் கிரேக்க நாட்டுக்கும் தொடர்பு இருந்ததா என்பது ஆராய்ச்சிக்குரியது. எப்படியும் அசுர சுபாவமுள்ளவரே அசுரர் என்பது தெளிவு.

கண்ணனும் துவாரகையும்

வட மதுரையைக் கைவிட்டுக் கண்ணன் மேற்குக் கடற்கரையிலுள்ள துவாரகைக்குத் தன் மக்களை அழைத்துச் சென்று அங்கே குடியேறச் செய்ததும் கண்ணன் கதைகளில் பிரசித்தமாய்க் குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும். துவாரகாபுரிவாசன் என்று பக்தி நூல்களிலும் பக்திப் பாடல்களிலும் கண்ணன் குறிக்கப்படுவதை அறியாதார் யார்?

பாஞ்சாலியைத் துச்சாசனன் துகில் உரித்தபோது அவள் கண்ணனை நோக்கி முறையிட்டுக் கொண்டபோது 'அநாதைகளின் இரட்சகனே! துவாரகையின் காவலனே' என்று விளித்ததாகப் பாரதம் கூறுவதும் பிரசித்தமே.

பாஞ்சாலியும் பாரதப்போரும்

பாஞ்சாலி துகில் உரியப்பட்டதும் கண்ணன் அருளால் துகில் வளரப்பெற்றதும் பக்தர் உலகில் மிகவும் பிரசித்தமான கதையா

கும். சரணாகதி தருமத்தை விளங்குவதற்கு மிகவும் பொருத்தமான கதைகளில் ஒன்றாக இதுவும் வைணவர்களால் மதிக்கப்படுகின்றது.

இக்கதையை அண்மையில் தேசபக்த கவியான பாரதியார் உரிமை இழந்த இந்தியா மீண்டும் அதைப் பெறுவது நிச்சயம் என்ற நம்பிக்கையைத் தேசபக்தர்களுக்கு உண்டாக்க உபயோகித்துக் கொண்டு 'பாஞ்சாலி சபதம்' என்ற பெயரால் ஒரு புதிய இதிகாசத் துணுக்கு ஒன்றைப் படைத்துத்தந்திருக்கிறார் என்பதை இன்றைய தமிழர்கள் அறிந்திருக்கிறார்கள். பக்தியை வளர்த்துப் பயன்பட்ட கதையைத் தேச பக்தியை வளர்க்கப் பயன்படுத்திக் கொண்டது பாரதிமேதை.

பாஞ்சாலியின் சபதம் பாரதப்போருக்கு இன்றியமையாதது. இந்தப் போர் நடந்தே தீரவேண்டும் என்பது கண்ணன் திருவுள்ளம். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே தாயாதிக் காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. இந்தக் காய்ச்சலைப் பாரதப் பெரும் போராகக் கண்ணன் வளரவிட்டதற்குக் காரணம் தான் என்ன?

பாரதப் பேரின் பொருள்

பாண்டவர்களுடனும் கௌரவர்களுடனும் கண்ணனும் கண்ணனைச் சேர்ந்தவர்களும் விவாகங்களால் உறவு பூண்டிருந்தனர். அப்படியிருந்தும் கௌரவ பாண்டவ சகோதரவத யுத்தத்தைக் கண்ணன் தடுக்கவில்லை. இந்தப் போராட்டம் நடைபெறவேண்டுமென்றே திட்டமிட்டிருந்தான் என்றும் தெரியவருகிறது. காரணம் அசுரர்களின் அசுர பலமும் அதர்ம ஆவேசமும் அழியவேண்டும் என்ற கருணை தான்.

இரண்டு கட்சிகளிலும் பெரும்பாலோர் அழிந்து போயினர் என்றே மகாபாரதம் தெரிவிக்கிறது. இந்த அழிவைத்திட்டமிட்டு நிறைவேற்றியது கடவுளுடைய சித்தம்தான் என்ற தத்துவம் ஆலோசனைக்குரியது. தருமம் அதர்மம் என்ற இருவகைச் சக்திகளும் ஒன்றையொன்று பிரிக்கமுடியாத நிலையில் ஒரே காலத்திலும் இடத்திலும் சந்திக்க வேண்டுமென்று குறிதவறாத சூழ்ச்சித் திறனுடன் திட்டமிட்டு அந்தத் திட்டத்தை அப்படியே தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில் நிறைவேற்றிவைத்தான் கண்ணன் என்பதில் இந்துக்களின் அவதாரதத்துவம் தனக்குரிய முழுப்பொருளும் பெற்றிருக்கிறது.

பூபாரம் தீர்ந்ததா?

போரின் தொடக்கத்திலே பாண்டவர் கட்சியில் ஏழு அட்சௌகிணி சேனையும் இருந்தனவாம். இன்றைய கணக்கில் நல்லவர்களான பாண்டவர் கட்சியில் 1 இலட்சம் பேரும் எதிரிகளின் கட்சியில் 25 இலட்சம் பேரும் படையினராக இருந்தார்கள். தருமக் கட்சியில் தப்பிப் பிழைத்தவர்கள் ஏழுபேர் என்றால் அதர்மக் கட்சியில் மூவர் தப்பிப் பிழைத்தார்கள் என்று சொல்லும் விகித ரீதியில் போராட்டம் முடிவுபெற்றதாம். இதனால் அவதார நோக்கம் நிறைவேறியதா? அதாவது பூபாரம் தீர்ந்ததா? பூபாரம் தீரப்பிறந்தவன் தானே கண்ணன்.

குருக்ஷேத்திரத்தில் பூபாரம் தீர்க்கும் நோக்கம் முற்றும் நிறைவேறியது என்று சொல்லமுடியாது. துவாரகைக் கடற்கரையில் பிரபாதக்ஷேத்திரம் என்ற இடத்தில் கண்ணனுடைய உறவினர்களில் ஐந்து இலட்சம் பேர்கள் கள்ளுண்டு வெறிகொண்டு-இராணுவ வெறியும் அதிக அளவில் கொண்டு தங்களுக்கிடையே போரிட்டு அழிந்து போனார்களாம். இந்த அழிவிலே தான் பூபாரம் தீர்க்கும் நோக்கம். அக்காலத்திலே மூன்றும் நிறைவேறியது என்பது குறிப்பு.

இத்தகைய அழிவு நேர்ந்துவிடாதபடி அன்பு மயமான அவதார மூர்த்தி திட்டமிட்டிருக்கலாகாதோ? காந்தியடிகளின் அஹிம்சா தர்மக்கொள்கை உலகமெங்கும் அறியப்பட்டிருக்கும் இந்நாளில் அன்புக் கடவுள் கொலை நிகழாமலே தீமை என்ற பூமி பாரத்தைஏன் குறைத்திருக்கலாகாது? என்ற கேள்வி எழுவதில் அதிசயமில்லை. ஆனால் அவதார மூர்த்திகளின் செயல்களையும் நோக்கங்களையும் நம்முடைய உரைகல்லைக்கொண்டு சோதிக்க முடியுமா? என்பது இதிகாச புராணங்களில் நம்பிக்கையுள்ளவர்களின் எதிர்க் கேள்வி. அப்படியானால் வேறு உரைகல் இருக்கிறதா?

அவதார உரைகல்

கடவுள் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கிறார், தீமை திருந்தி வருகிறதா என்று. இந்தப் பொறுமைக்கும் எல்லை இருக்கத்தான் செய்கிறது. தெய்வமே இல்லை என்று துணிந்து அதர்மம் மேலும் மேலும் ஆவேசம் கொண்டு பூபாரத்தை அதிகரிக்கச் செய்யும் நிலையும் ஏற்படும். ஆம்; தீமைதானே பூமிக்குப் பாரம். இந்தப் பாரத்தைத் தாங்கமுடியாமல் பூமி-இயற்கையன்னை-கதறுவது எங்கும் கண்களாய் எங்கும் செவிகளாய் இருக்கும் அன்புக்கடவுளின் காதில் விழுகிறது. காலம் வந்து கைகூடும் தருணத்தை எதிர்பார்த்திருக்கிறது ஆண்டவன் உள்ளம். அதுவரை உறங்குவது போலக் காணப்படுகிறது தெய்வசக்தி. தருணம் வந்ததும் தெய்வ சக்திக்கும் ஆவேசம் வந்துவிடுகிறது. தர்மாவேசம் என்ற கோபம் இதுதான். இதன் விளைவாகத் தீமையை ஒழிக்கும் சக்தி, அல்லது தீமை தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளுமாறு செய்யும் திவ்ய சக்தி பிறந்து விடுகிறது அல்லது இறங்கிவருகிறது. இந்தப் பிறப்பு அல்லது இறங்கி வருதலே அவதாரம் என்று சொல்லப்படுகிறது.

தெய்வத்தின் பயங்கர அதிகார முத்திரை தரித்துவருகிறான் அவதார மூர்த்தி. அமிர்தமாயிருக்கும் தெய்வ அருள் இப்போது கொடிய விஷமாய்ச் சீறுகிறது. உலகத்தைக் காப்பாற்ற வந்திருப்பவன் உலகத்தையே அழித்துவிடுவானோ என்று சொல்லும்படி விரைவில் இயங்குகின்றன சக்திகள். ஆனால் சாதுக்களுக்குப் பயம் இல்லை, அபாயம் இல்லை, தீமை வேரடி மண்ணும் இல்லாமல் அழிந்து போய்விட்டது என்று நம்பும்படி அவதார மூர்த்தியின் செயல்கள் துரிதப்படுகின்றன. இந்நிலையில் அழிவு என்பது தோற்றம்தான்; ஆனால் உண்மையில் நிகழ்வது அருளின் திருவிளையாடலே, இது அவதாரதத்துவம் என்பர்.

இந்தத் தத்துவத்திலே புத்தர், கிறிஸ்து போன்ற ஜீவகாருண்ய மூர்த்திகளுக்கும் இடம் கொடுக்கிறது இந்து சமயம்; துஷ்ட நிக்கிரகத்துடன் சிஷ்டபரிபாலனம்செய்தஇராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் சிறப்பான இடம் கொடுத்திருக்கிறது. இந்துக்களுடைய இதயத்தை இராமனும் கிருஷ்ணனும் பங்குபோட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். இந்த இருவரிலும் கண்ணனிடம் ஒரு அந்தரங்க அன்பு உண்டு இந்து மக்களின் இதயத்திலே.

நான் எனும் ஆணவம் ஒரு சிறிதும் இன்றி உலகமே தான் என ஒழுகுகின்றான் அவதார மூர்த்தி என்று பாரதியார் கூறியுள்ளார். இந்த அவதார மூர்த்தியின் செயல்கள் எல்லாம் நடுநிலையில் நிகழ்வனவே என்றும், மாரி எவரையும் விலக்கிப் பெய்யாதது போல் அவதார மூர்த்தியின் அருளும் அனைத்துயிர்க்கும் பொதுவாகும் என்றும் தொடர்ந்து கூறுகிறார் பாரதியார். இத்தகைய கொள்கையின் சிகரமாக இவர் கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது. அதாவது, பிறர் தன்னை எப்படி ஹிம்சித்த போதிலும் அவதார மூர்த்தியின் உள்ளம் அருளிலேயே இயங்குகிறதாம்.

இந்த உரைகல் புத்தர், கிறிஸ்து என்ற தியாக மூர்த்திகளுக்குப் பொருந்துவதுபோல் கிருஷ்ணவதாரத்திற்கும் பொருந்தும் என்பது பாரதியார் கருத்து. எனவே கண்ணன் கம்சன் முதலான துஷ்டர்களைக் கொன்றதெல்லாம் அருளின் விளைவேதான் என்பது குறிப்பு. கோபியரின் காதலைவியாஜமாகக் கொண்டு, உயிர்களையெல்லாம் காதலிக்கும் பெருமான் கம்சனைப் போன்ற அசுராவேசம் கொண்டவர்களைத் தன் காதலுக்கும், கருணைக்கும் புறம்பாக ஒதுக்கி வைத்தான் என்று கருதுவது சரியன்று. எனவே அவதார மூர்த்திகளின் சிஷ்டபரிபாலனம் போல் அசுரவதங்களும் காதலின் விளைவுதான், கருணையின் விளைவுதான்.

இத்தகைய அவதார உரைகல்லில் உரைத்துப்பார்க்கவேண்டும் கண்ணபிரானின் செயல்களையும் கதைகளையும். இவற்றைச் சாதாரண வரலாற்றுச் செய்திகளாக மதிப்பது பொருத்தமன்று. இந்த நிகழ்ச்சிகளில் சில புராண பாஷையில் மகத்தான உண்மைகளை வெளியிடக்கூடியன. வேறு சில பக்தர்களின் பக்திக்காதலைப் பெரிதும் தூண்டிவிடத்தக்கவை. இன்னும் சில கவிகளின் கற்பனைகளைத் தூண்டி மக்களுக்கு ஆறுதலும் ஆனந்தமும் அளிக்கக்கூடியவை. பல துணுக்குகள் பகுத்தறிவுக்கு அப்பாலும் இப்பாலும் போய்விடலாம்; ஆனால் அவதார உரைகல்லில் மாற்றுயர்ந்த தங்கமாக வெளிப்படு

வனவே அவதாரமூர்த்தியின் வரலாறுகள், கதைகள் எல்லாம்.

அழகுத்தெய்வம், காதல்-தெய்வம்

சர்வாங்க சுந்தரன் என்றும், ஜகன் மோகன பாலகோபாலன் என்றும் கண்ணனை வருணிப்பது உண்டு. உள்ளம் கவர்கள்வன் என்று தெய்வத்தைக் குறிப்பிடுவது கண்ணனுக்கே சிறப்பாகப் பொருந்தும் என்பர். பாரதப் பெருங்கிழவரான பீஷ்மரும் சாகும்போது கண்ணனுடைய அழகைப் பெரிதும் போற்றியதாகப் பாரதம் தெரிவிக்கிறது. பரமாத்மாவின் அதிசூட்சம அழகே தனக்கு இசைந்த ஸ்தூல உருவில் கண்ணனாக வெளிப்பட்டது என்பர்.

ஜகன்மோகன பாலகோபாலன், ஜகன் மோகன இராஜகோபாலன், ஜகன்மோகன வேணுகோபாலன் என்ற நிலைகளில் அன்று போல் இன்றும் கண்ணனின் வசீகர சக்தி தொண்டர்களுக்கும், கவிஞர்களுக்கும் புலனாகத்தான் செய்கிறது, கண்ணனின் இளமையழகு வயது முதிர்ச்சியால் சிறிதும் பாதிக்கப்படவில்லை என்று கதைகள் தெரிவிக்கின்றன. வேணுகானம் செய்த உதடுகள் அதே வசீகர சக்தியுடன் கீதையையும் கானம் உலகை வாழ்வித்திருக்கும் அதிசயத்தை எண்ணி எண்ணி அன்பர்களின் உள்ளம் பரவசமாகிறது.

கண்ணனைக் காதலனாகப் பேசும் கதைகளே இந்த அவதாரத்தை நித்திய பிரமசாரியாகவும் பேசுகின்றன. இளங் கோபியர்களின் உள்ளத்தையும் வெண்ணெயையும் ஒருங்கே திருடியவன் துறவிகளின் உள்ளங்களையும் ஞானிகளின் எண்ணங்களையும் திருடிக்கொள்வதையும் காண்கிறோம். மாடுமேய்த்தபிள்ளை இராஜதந்திரியாக அரசர்களையும் ஆட்டி வைக்கிறான். பேரரசர்களுக்கும் எட்டாத மாட்சியுடன் திகழ்பவன் கழுத்திலே ஓலை கட்டிக்கொண்டு பாண்டவ தூதனாகப் போகிறான்; பார்த்தசாரதி ஆகிறான். கடைசியாகக் கீதாசாரியனாகி ஜகத்குருவாகவும் காட்சி வழங்குகிறான். எல்லாம் 'கண்ணன் காதல் கண்ணனின் அழகு' என்பது கிருஷ்ணபக்தர்களின் உள்ளம்.

கண்ணனின் காதலையும் அழகையும் இரகசியங்களுக்கெல்லாம் இரகசியமானவை என்று கூறுவதுண்டு. கண்ணனையே புருஷோத்தமனாகக் கொண்டு காதலிப்பதே சரணாகதி செய்வதற்கு உரிய பரம இரகசியமும் எளிமையும் பொருத்திய முறை என்பர். பாசத்தைவிட்டு பதியை (தலைவனாகிய கடவுளை) அடையவேண்டும் என்று சமயங்களெல்லாம் சாராம்சத்தில் வற்புறுத்துகின்றன அல்லவா? கிருஷ்ண பக்தியோ பாசத்தைக் கொண்டே ஆத்மாவை பரமாத்மாவுடன் கட்டிவைப்பது சாத்தியம் என்கிறது.

அன்பே கடவுள் என்கிறோம். கண்ணன் உயிர்கள் மீது கொண்டிருக்கும் அன்போ காதலி மீது காதலன் கொள்ளும் அன்பை நினைவூட்டித் தவித்துக்கொண்டிருக்கும் அந்தக் காதல் உள்ளத்தையும் ஞாபகப்படுத்துகிறது என்பர்.

செய்திகள்

சென்னை, சென்னமல்லீசுவரர் கோயிலில் 16-3-60ல் சம்பந்த சரணாலயத்தம்பிரான் (சிவக்கவிமணி C. K. S.) அவர்கள் இயற்றிய 'சேக்கிழாரும் சேயிழையாரும்'' என்ற நூலை சென்னை சென்னமல்லீசுவரர் கோயிலில் அர்ச்சிட்டு அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் வெளியிடப்பட்டது. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் 'காரைக்கால் அம்மையார்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

✦ ✦ ✦ ✦

இரத்தினகிரி என்னும் சிவாயமலை, இத்தினகிரீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 30—4—60 முதல் 11—5—60 வரை நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

அரியக்குடி என்கிற தென்திருப்பதி, திருவேங்கடமுடையான் கோயிலில் 1—6—60 முதல் 13—6—60 வரை பிரம்மோற்சவம் நடைபெறும்.

கண்ணப்ப நாயனார்

கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
—சுந்தரர்.

நிலத்திற் றிகழ்திருக் காளத்தி
யார்திரு நெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணிற்
குருதிகண் டுள்நடுங்கி
வலத்திற் கடுங்கணை யால்தன்
மலர்க்கண் இடந்தப்பினுன்
குலத்திற் கிராதனங் கண்ணப்ப
னுமென்று கூறுவரே
—நம்பியாண்டார் நம்பி.

போத்தப்பி நாட்டில் உள்ளது உடுப்பூர். அந்த நாட்டில் வேடர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு அரசன் நாகன் என்பான். அவன் மனைவி தத்தை என்பவள். இருவர்க்கும் மகப்பேறின்றி முருகப் பெருமானை வழிபட்டுத் தவம் கிடந்தனர். அவன் திருவருளால் தத்தையும் வயிறு வாய்க்கப்பெற்று ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தை திண் என்றிருந்தமையால் **திண்ணன்** என்ற பெயரிட்டனர். திண்ணனார்க்குக் குழந்தைப் பருவம் கடந்தது. வேடர்க்குரிய வில்வித்தை பயிற்றுவிக்கப் பெற்றது. பதினாறு வயது நிரம்பி இளஞ் சிங்கம்போல் திகழ்ந்தனர்.

நாகன் மூப்படைந்தமையால் வேடர்களை அழைத்து அவர்களுக்குத் தலைவனாகத் திண்ணனாரைக் கொள்ளும்படி சொன்னான். வேடர்குல வழக்கப்படி திண்ணனாரைக் கன்னிவேட்டைக்கு அனுப்பினர். வேடர்கள் பலர் உடன்செல்ல, திண்ணனார் வேட்டைக்குச் சென்றார். வேடர்கள் கொடிய மிருகங்களைக் கொன்றனர். பல திசைகளிலும் சென்றனர். திண்ணனார் ஒரு காட்டுப் பன்றியைப் பின்தொடர்ந்து ஓடினார். அவரைத் தொடர்ந்து அவரது மெய்காப்பாளர்களான **நாணன், காடன்** என்ற இருவரும் விரைந்தனர். பன்றியைத் தொடர்ந்து வெகு தொலைவு சென்றனர். அது ஓடிய இளைப்பினால் ஒரு மரச்சூழலில் ஒதுங்கி நிற்க, திண்ணனார் அதனை அணுகிச்சென்று உடைவாளால் வெட்டி வீழ்த்தினர்.

அவ்வளவில் திண்ணனாருக்கு நீர் வேட்கைமிக "நல்ல தண்ணீர் எங்கு கிடைக்கும்" என்று தோழர்களைக் கேட்டார். அவர்கள் "இதோ இருக்கும் தேக்குமரச் சோலையைத் தாண்டினால் ஒரு மலையிருக்கிறது; அதன் பக்கலில் பொன்முகலி யாறு ஓடுகிறது" என்றார்கள். கொன்ற பன்றியை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். குன்றைக் கண்ணுற்றதும் திண்ணனார் நாணனை அங்கு போகலாம் என்றார். நாணன், "அங்கு போனால் நல்ல காட்சி கிடைக்கும். திருக்காளத்தி மலைமீதுள்ள குடுமித்தேவரைக் கும்பிடலாம்" என்றான். இவ்வாறு பேசிக்கொண்டு பொன்முகலியடைந்தனர். பன்றியைச் சுடுவதற்காகக் காடனைத் தீமூட்டச் சொல்லிவிட்டு, திண்ணனாரும் நாணனும் மலையேறிச் சென்றனர். திருக்காளத்தியப்பரைக் கண்டதும் திண்ணனார் அன்பே உருவமானார்; ஓடிச்சென்று தழுவினார்; உச்சிமோந்தார்; பெருமூச்சு விட்டார்; நெஞ்சம் நெக்குருகினார்; கண்ணீர் ஆறாகப் பெருகியது. "அடியேனுக்கு இங்கே இவர் அகப்பட்டார், வனவிலங்குகள் திரியும் இடத்தில் இவர் தனியே இருப்பதோ" என்று உளம் வருந்தினார். கையிலிருந்த வில் நழுவி விழுந்தது. "இவர்க்குப் பச்சிலையோடு பூவிட்டு நீர் வார்த்திருப்பது எவர் செய்தது" என்று நாணனைக் கேட்டார். "இது நான் அறிவேன்; முன்னொருகால் உன் தந்தையுடன் வேட்டையாடிக்கொண்டு இம்மலைக்கு வந்தேன். பார்ப்பனன் ஒருவன் இவரை நீராட்டி, பூச்சூட்டி, உணவூட்டிச் சென்றதைப் பார்த்தேன்; அவனே இன்றும் அப்படிச் செய்திருக்க வேண்டும்" என்று நாணன் கூறினான், தாமும் அவ்வாறே கடைப்பிடித் தொழுகத்

துணிந்த திண்ணனார், இறைவரிடம் பிரியா விடைபெற்று, அவருக்கு உணவு கொணர்தற்குப் புறப்பட்டார். பொன்முகலியாற்றங் கரையில் காத்திருந்த காடன் காலம் தாழ்த்த தன் காரணத்தை வினவினான். நாணன், "திண்ணன் நமது குலத்தலைமையை விட்டான்; குடுமித்தேவர்க்கே ஆட்பட்டான்" என்று சொன்னான். திண்ணனார் பன்றியின் இறைச்சியைத் தீயில் காய்ச்சி, சுவைப்பகுதி யறிந்துகொள்ள தசையைத் தன் வாயிற் போட்டு அதுக்கி, நல்லவற்றையெடுத்துத் தேக்கிலைக் கல்லையில் இட்டார். இவர் செய்கைகளைக் கண்ணுற்ற நாணனும் காடனும், 'திண்ணனார் தேவர் மயக்கம் கொண்டார்; தீர்க்கும் வழியறியோம்; நாகனைத் தேவராட்டியுடன் அழைத்துவந்தே தீர்க்க வேண்டும்" என்று சொல்லியகன்றனர். அவர்கள் போனதை இவர் அறியார். திருமஞ்சனத்துக்காகப் பொன்முகலி யாற்றின் நீரை வாயில் முகந்துகொண்டு, பூ இலைகளைத் தமது குடுமியில் செருகிக்கொண்டு, கல்லையில் எடுத்த ஊனமுதத்துடன் குடுமித் தேவரை யண்மினார்; தேவர்பசியால் இளைத்திருப்பாரே என்று இரங்கினார்; அவர் முடியிலிருந்த மலர்களைக் கால் செருப்பால் அகற்றினார்; அவர் வாயில் கொண்டுவந்த நீரை இறைவன்மீது உமிழ்ந்தார்; குஞ்சியில் அணிந்திருந்த பூக்களை பெருமான் திருமுடிமேல் சாத்தினார். ஊனமுதத்தைத் திருமுன்னர்ப் படைத்து, "நான் சுவை பார்த்துத் தேர்ந்தெடுத்த இறைச்சி; மிகவும் இனிமையுடையது; தேவரீர் அமுது செய்தருளல் வேண்டும்" என்று கூறித் தேவர்க்கமுதூட்டினார்.

இரவு வந்தது. இறைவனுக்கு வன விலங்குகளால் தீமை நேராவண்ணம் வில் தாங்கிய கையராய் உறக்கமில்லாது அவர் பக்கல் நின்று காவல்புரிந்தார் வேடர் குரிசில். பொழுது விடிந்தது. திண்ணனார் பெருமானுக்கு உணவுதேடச் சென்றனர். காளத்திநாதரை ஆகமப்படி பூசித்துவரும் சிவகோசரியார் என்பவர் வழக்கம்போல் அங்கு வந்து எலும்பு, இறைச்சி கிடக்கக்கண்டார். இவ்வநுசிதம் செய்தார் யாரோ என்று துன்புற்றார். அவைகளையகற்றி, பொன்முகலியில் மூழ்கிவந்து வழக்கம்போல் பூசனை முடித்துப் போய்விட்டார். திண்ணனாரோ முன்னாள் செய்ததுபோல் ஊன், தேன், நீர், பூ முதலியன கொண்டு குடுமித்தேவர்பால் மீண்டார். முன்போலவே நீராட்டி, பூச்சூட்டி, அன்புரைகூறி இறைவனுக்கு அமுது செய்வித்தனர்.

மூன்றாவது, நான்காவது நாட்களிலும் வேடர் குலச்செம்மல் அவ்வாறே செய்து வழிபட்டார். சிவகோசரியாரும் மனம் நொந்து தம்முடைய வழக்கப்படி பூசனை புரிந்துசென்றனர். நாணன், காடன் இவர்கள் நாகனிடம் போய் உற்றது கூறினர். நாகனும் தேவராட்டியுடன் வந்து திண்ணனாரை அழைத்துச் செல்லப் பார்த்தனர். முயற்சி பலிக்கவில்லை யாதலால் அவரை விட்டுப்போய்விட்டனர்.

ஐந்தாம் நாள் திண்ணனார் வழக்கம் போல் வழிபாடு செய்தார். அன்றுவந்த சிவகோசரி முனிவர், தீமையை ஒழித்தருள வேண்டுமென இறைவனிடம் முறையிட்டார். அன்றிரவு அவ்வந்தணர் கனவில் கடவுள் தோன்றி "அவனை வேடன் என்றெண்ணாதே; அவன் வடிவமெல்லாம் நம்மிடம் கொண்ட அன்பேயாம்; அவன் செயல்களெல்லாம் நமக்கு மிக இனியனவாம்; நாளை காலை ஒளித்திருந்து அவன்தன்மை காண்பாயாக" என்று கூறி மறைந்தார்.

ஆறாம் நாட் காலை. திண்ணனார் வழக்கம்போல இறைவனுக்கு ஆவன கொண்டுவரப் போய்விட்டனர். சிவகோசரியார் வந்து, பூசை முடித்து ஆண்டவன் ஆணையிட்டவண்ணம் பின்புறம் ஒளிந்திருந்தனர். திண்ணனார் பூசைக்குரியன கொண்டு மீள்கிறார். தீச்சகுனங்களைக் காண்கிறார்; இறைவனுக்கு என்ன இன்னல் நேர்ந்ததோ என்றெண்ணி விரைகிறார்; அண்ணலாரை அணைகிறார். அந்தோ! அவர் கண்டதென்ன? இறைவனது வலக்கண்ணிலிருந்து உதிரம் பாய்கிறது. கானவர் தலைவர் கண்டார்; பதை பதைத்தார்; வாய் நீர் சிந்திற்று; கையிலிருந்த ஊனமுதம் கீழே விழுந்தது; இரத்தத்தைத் துடைத்தார்; வீழ்வது நிற்கவில்லை. 'இச்செயல் செய்தவரை ஒறுப்பேன்' என்று வில்லும் அம்பும் கைக்கொண்டார். யாரையும் காணவில்லை. கதறினார்; பதறினார். வனமூலிகைகளைக் கொண்டுவந்து பிழிந்தார். பெருமான் கண்ணிலிருந்து ஒழுகும் குருதி

நின்றபாடில்லை. எண்ணி எண்ணிப் பார்த்தார் திண்ணனார். "ஊனுக்கு ஊன்" என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. அவ்வளவில் தமது வலக்கண்ணை அம்பினால் தோண்டி காளத்தியப்பர் கண்ணில் அப்பினார். குருதி நின்றது. வேடர் தலைவர் மகிழ்ந்தார்; ஆடினார்; தம் செய்கை நன்றென நகைத்தார். கானவர்குரிசிலின் அன்புத்திறனை வெளிப்படுத்துவான் திருவுளங்கொண்ட குடுமித்தேவர் இடக்கண்ணினின்றும் குருதிவழியச் செய்தார். திண்ணனார் கண்டு "இனி அஞ்சேன்; மருந்து கைகண்டேன்; எனக்கு இன்னமோர் கண்ணும் உண்டு" என்றுகூறி, சரியாகப் பொருத்த எண்ணித் தமது இடது காலை இறைவன் கண்ணில் ஊன்றி, தமது இடது கண்ணைத்தோண்ட அம்பை ஊன்றினார். பெருமானுக்கு மனந்தரிக்கவில்லை. அவரது திருமேனியினின்று நீண்ட திருக்கரம் திண்ணனாரின் அம்புடன் கூடிய கையைப் பற்றியது. "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத்தோன்றல் நில்லு கண்ணப்ப!" என்று பெருமானின் திருவார்த்தை மும்முறை எழுந்தது. சிவகோசரியார் இவையனைத்தும் கண்டார். சிவம் பெருமான், கண்ணப்பர் கையைப் பிடித்துக் கொண்டு "மாறில்லாய்! என்வலத்தில் நிற்க" என்று பேரருள் புரிந்தார்.

இனி, கண்ணப்ப நாயனாரின் திருநாடு, ஊர், காலம், அவரைப்பற்றிய நூல்கள், அவர் பெயரைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் முதலியன பற்றி ஒருவாறு கூறுதல் நலம். திருக்காளத்திக் கண்ணப்பரின் திருநாடு பொத்தப்பிநாடு என்பது சேக்கிழார் கூற்று. அவ்வூர் இப்போது கடப்பை மாவட்டத்தில் புல்லம்பேட்டைப் பகுதியிலுள்ளது. பழங்காலத்தில் தெலுங்கச் சோழர்களுக்குத் தலைநகராக இருந்திருக்கிறது. சேக்கிழார் கூறும் உடுப்பூர் என்ற பெயருடைய ஊர் இல்லை. ஆனால் அந்த புல்லம்பேட்டைப் பகுதியிலேயே உடுக்கூர் என்ற ஊர் இருக்கிறது. உடுப்பூரே பிற்காலத்தில் உடுக்கூர் என்று திரிந்தது போலும். இவ்வூருக்கு மேற்கே மலைகளும் காடுகளும் இருக்கின்றன. இப்பகுதியில்தான் வேடர்குலத் தலைவனான நாகன் இருந்திருக்கவேண்டும். அக்காலத்தில் இப்பகுதி தமிழ்நாட்டுடன் சேர்ந்திருந்தமையின் நாகன், தத்தை, நாணன், காடன், திண்ணன் முதலிய தமிழ்ப் பெயர்கள் வழங்கியிருக்கின்றன. திண்ணனார் உடுப்பூரிலிருந்து வேட்டையாடிக் கொண்டு வெகுதொலைவு வந்து காளத்திமலை யடைந்தார் என்று பெரியபுராணம் கூறுகிறது. உடுக்கூருக்கும் காளத்திக்கும் 40 கல் தொலைவு இருத்தலால் பெரியபுராணக் கூற்று உண்மை புலனாகிறது.

கண்ணப்பநாயனாரின் காலத்தை அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. ஆனால் சமய குரவர் நால்வருக்கும் முற்பட்டவர் என்பதில் ஐயமில்லை. மாணிக்கவாசகர் காலத்தை தேவார முதல்வர் மூவருக்கும் முற்பட்டவர் என்று கொண்டால், கண்ணப்பர் காலம் அதற்கும் முற்பட்டது என்று கொள்ள இடமிருக்கிறது. தேவார முதலிய திருமுறைகளிலும் கண்ணப்பரைப் பற்றிக் கூறப்பெற்றிருக்கிறது. நக்கீரர், பரணர் முதலிய சங்கப் புலவர்களும் அவரைப் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர். ஆதிசங்கரர் வடமொழியில் இயற்றிய சிவானந்த லஹரியில்,

மார்க்கா வர்த்தித பாதுகா பசுபதே
ரங்கஸ்ய கூர்ச்சாயதே
கண்டூஷாம்பு நிஷேசனம் புரரிபோர்
திவ்யா பிஷேகாயதே
கிஞ்சித் பட்சித மாம்ஸ சேஷ கபலம்
நவ்யோப ஹாராயதே
பக்தி: கிம் நகரோதி அஹோ வனசரோ
பக்தாவதம் சாயதே

என்ற சுலோகத்தால் பாராட்டியுள்ளார். இதில் பின்வரும் சம்பந்தர் தேவாரக் கருத்தையும் காண்கிறோம் :—

வேயனைய தோளுமையோர் பாகமது
வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடினட மாடிமலை
தன்னை வினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும்
வேடன்மல ராகுநயனம்
காய்கணையி னாலிடந் தீசனடி
கூடுகா ளத்திமலையே.

ஆதிசங்கரர் கி. பி. 788-ல் இருந்தவர் என்றும். கி. மு. 41-ல் இருந்தார் என்றும் இரு

வேறு கொள்கை நிலவுகிறது. எவ்வாருயினும், அவர் கண்ணப்பரைச் சிறப்பித்துப் பாடியிருப்பதால் அவருக்கு முன்னரே கண்ணப்பநாயனுர் திகழ்ந்த காலம் என்று கூறவேண்டும்.

பெருந்துறவியான தாயுமானுர்,

''பாரனைத்தும் பொய்யெனவே
பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந்துறத்தல் அரிது''

என்று முற்றத்துறந்த முனிவரான பட்டினத்தடிகளைச் சிறப்பித்துக் கூறினுர். அந்த திருவெண்காட்டடிகளே கண்ணப்பரைப் புகழ்ந்து கூறினுர் என்ருல் வேறென்ன கூற வேண்டும். அவர் பாட்டு :—

வாளால் மகவரிந் தூட்ட
வல்லேனல்லன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க
வல்லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடந் தப்ப
வல்லேனல்லன் நான்இனிச்சென்
ருளாவது எப்படியோ
திருக்காளத்தி யப்பனுக்கே.

நாயன்மார் அறுபத்துமூவருள் பட்டினத்தார் பாராட்டிய மூவரில் ஒருவர் கண்ணப்ப நாயனுர்.

கண்ணப்பநாயனுர் வரலாற்றை விரிவாகச் சேக்கிழார்பெரியபுராணத்திலும்,சிவப்பிரகாச சுவாமிகள் சகோதரர்களின் சீகாளத்திப்புராணத்திலும், ஆனந்தக் கூத்தரியற்றிய திருக்காளத்திப்புராணத்திலும் காணலாம். இன்னும், தேவார திருவாசகங்கள் நக்கீரர்—பரணரின் திருக்கண்ணப்ப தேவர் திருமறம், கல்லாடம், திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணசாரம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், திருக்குற்ருலபுராணம், திருப்பெருந்துறைப் புராணம், வீரவனப்புராணம், அருணுசல புராணம், காஞ்சிப்புராணம், திருவொற்றியூர்ப்புராணம், காசிக்கலம்பகம், அன்பர் போற்றிக் கலிவெண்பா, பிரபுலிங்க லீலை, சோமேசர் முதுமொழிவெண்பா, முதுமொழி மேல்வைப்பு, திருவிடைமருதூர் உலா, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், நெஞ்சுவிடுதூது, திருக்காளத்திநாதர் இட்டகாமியமாலை, ஷை கட்டளைக் கலிப்பா, ஷை பதிகம், பல தனிப்பாடல்கள் முதலியவற்றில் நாயனுரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. பொதுவாகச் சொன்னுல் இவரைப்பற்றிச் சொல்லாத சைவ நூல்கள் இல்லையென்றே சொல்லிவிடலாம். முக்கியமான சில குறிப்புக்களை ஈண்டு கூறுவது பொருத்தமாக இருக்கும்.

சம்பந்தர், ''கண்ணப்பர்க் கருள்செய்த கயிலை யெங்கள் அண்ணல்'' என்றும், திருத்தென்குடித் திட்டைத் தேவாரத்தில் ''கானலைக்கும்மவன் கண்ணிடந்தப்ப'' என்றும் கூறியிருக்கிருர்.

அப்பர், திருக்கழிப்பாலைத் தேவாரத்தில், ''கண்ணப்பன் கண்ணப்பக் கண்டு உகந்தார் கழிப்பாலைமேய கபாலப்பனுர், வண்ணப் பிணிமாய யாக்கைநீங்க வழிவைத்தார்க் கவ் வழியே போதுநாமே'' என்றும், திருச்சாய்க்காடு பதிகத்தில்,

குவப்பெருந் தடக்கைவேடன்
கொடுஞ்சிலை இறைச்சிபாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால்நீக்கித்தூய
வாய்க் கலசமாட்ட
உவப்பெருங் குருதிசோரஒரு
கணையிடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவுசெய்தார்
சாய்க்காடுமே வினுரே

என்றும், திருக்குறுக்கைத் தேவாரத்தில்,

காப்பதோர் வில்லும்அம்பும்
கையதோர் இறைச்சிபாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலசம்ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக்கொண்ட
குறுக்கைவீரட்ட னுரே

என்றும், திருமழபாடிப் பதிகத்தில் ''கண்ணப்பர்க் கருள்செய்த காளைகண்டாய்'' என்றும், திருச்சிவபுர பாசுரமொன்றில் ''கானவனுக்கருள் செய்தான்காண்'' என்றும், திருத்தாண்டகத்தில், ''காமனையும்

உடல் கொண்டார் கண்ணுல் நோக்கிக் கண்ணப்பர் பணியும் கொள்கபாலி யாரே'' என்றும் அருளியிருக்கிருர்.

சுந்தரர், திருத்தொண்டத்தொகையில் கூறும் ஒன்பது நம்பிகளில் ஒருவராகக் கண்ணப்பரைக் "கலைமலிந்தசீர் நம்பி" என்று போற்றுகிருர். இன்னும் திருநின்றியூர்த் தேவாரத்தில் "கணைகொள் கண்ணப்பனென்றிவர் பெற்ற காதலின்னருளா தரித்தடைந் தேன்" என்றும், திருவீழிமிழலைப் பதிகத்தில் "எறிந்த சண்டி இடந்த கண்ணப்ப னேத்து பத்தர்கட் கேற்ற நல்கினீர்" என்றும் ஓதியுள்ளார்.

மாணிக்கவாசகர், திருக்கோத்தும்பியில் "கண்ணப்ப னெப்பதோர் அன்பின்மை கண்ட பின்'' என்றும், திருத்தோணுக்கத்தில்

பொருள்பற்றிச் செய்கின்ற
பூசனைகள் போல்விளங்க
செருப்புற்ற சீரடிவாய்க்
கலச மூனமுதம்
விருப்புற்று வேடனர்
சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா
தோணுக்கமா டாமோ

என்றும் பாடியருளி யிருக்கின்றனர்.

சேக்கிழார், பெரியபுராணத்தில் 181 செய்யுட்களால் கண்ணப்பர் வரலாற்றை மிக அழகுபடக் கூறியுள்ளார். நாட்டுவர்ணனை, காட்டுவர்ணனை, வேடர்குலப் பழக்கவழக்கங்கள், திண்ணனர் குழந்தைவிளையாட்டு, வெறியாட்டயர்தல், கன்னிவேட்டை, திண்ணனர் அன்புமாட்சி முதலியவைகளை விதந்தோதியுள்ளார். ஆகம வழிபாடு, அன்பு வழிபாடு இவைகளின் விளக்கங்களைக் காணலாம்.

கச்சியப்ப சிவாசாரியர், கந்தபுராணத்தில் மேகங்கள் மலைகளில் தங்கி மழைபொழிவது, கண்ணப்பர் வாயில் கொண்டுவந்த நீரைக் குடுமித்தேவர்க்கு ஆட்டுவித்ததை யொக்கும் என்பர்.

திருக்குற்ருலபுராண அவையடக்கத்தில் தான் சொல்லப்போகும் நூலை, கண்ணப்பர் ஊனை அமிழ்தின் மிக்கதென ஆண்டவன் கொண்டதுபோல், தன் புன்சொற்களைக் கொள்வர் என்று ஆசிரியர் கூறுகிருர்.

திருப்பெருந்துறைப்புராணத்தில், கண்ணப்பர் ஊன் அமுதளித்ததை மடமை யொன்று காளத்தியார் செயல் பார்த்தும் இகழ வாயுண்டோ என்று கூறப்பட்டிருக்கிறது.

வீரவனப்புராணத்தில், வீரசேகரர் திருமுடித்தழும்புற்ற படலத்தில், "மழுவாளி தழும்புற்ருன் என்று கவலைப்பட வேண்டாம். முன்னலேயே பிரம்படித்தழும்பும், வில்லடித்தழும்பும், கல்லடித்தழும்பும், செருப்படித்தழும்பும், வாள்வெட்டுத்தழும்பும் முதலியனவும் இருக்கின்றனவே'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சோமேசர் முதுமொழிவெண்பா ஆசிரியர், ஊனுக்கு ஊன் என்ற உரைகண்டு கண்ணப்பர் மகிழ்ந்தாராகையால் கற்காவிட்டாலும் கேட்கவேண்டும் என்று திருவள்ளுவர் கூற்றைக் கையாளுகிருர்.

முதுமொழி மேல்வைப்பில், கண்ணுதலோன் கண்ணேவு கண்டு கண்ணப்பர் கண்ணீர் சோரக்கதறினர். அதற்கு 'அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்'' என்ற குறட் பொருத்தத்தை எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது

தனிப்பாடல் ஒன்று நகைச்சுவைபடக் கூறுவதைப் பார்க்கலாம் :—

முக்கண்ண னென்றரனை
முன்னேர் மொழிந்திடுவார்
அக்கண்ணற் குள்ளது
அரைக்கண்ணே—மிக்க
உமையாள்கண் ஒன்றரை
மற்றூன் கண்ணேன்(று)
அமையு மிதனலென்றறி.

கண்ணப்பநாயனரைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புக்கள் சிலவற்றைப் பார்க்கலாம். காளத்தியிலுள்ள வடமொழிக் கல்வெட்டில் அவர் வரலாறு கூறப்படுகிறது. அதே ஊர்த்தமிழ்க் கல்வெட்டொன்றில் திருக்கண்ணப்பதேவர் பெயரால் கமுகுத் தோப்பு ஒன்றுவைக்க ஏற்பாடு செய்ததைக்

குறிக்கிறது. யோகிமல்லாபுரம் கல்வெட்டில் திருக்கண்ணப்பதேவர் காவணம் என்ற பெயர் காணப்படுகிறது. திருவலஞ்சுழிக் கல்வெட்டில் திருக்கண்ணப்பதேவர் படிமத்திற்குப் பூதானம் செய்ததைக் கண்டிருக்கிறது.

வேடரதி பதியுடுப்பூர் வேந்த னுகன்
விளங்கியசேய் திண்ணனூர் கன்னி வேட்டைக்
காடதில்வாய் மஞ்சனமும் குஞ்சிதரு மலரும்
காய்ச்சினமென் றிடுதசையுங் காளத்தி யார்க்
தேடருமன் பினிலாறு தினத்தளவு மளிப்பச் [குத்
சீறுசிவ கோசரியும் தெளியவிழிப் புண்ணீ(ர்)
ஓடவொரு கண்ணப்பி யொருகண் ணப்ப
வொழிகவெனு மருள் கொடரு குறநின்ருரே
—உமாபதி சிவாசாரியார்.

செய்திகள்

கீழ்வேளூர், அட்சயலிங்கசுவாமி விமான கும்பாபிஷேகம் 17-4-60 காலை 8-30 மணிக்கு நிகழ்ந்தது. தஞ்சை, அறநிலையத்துறை துணை ஆணையாளர் திரு. கே. சோமசுந்தர தேசிகர், எம்.ஏ., நாகை உதவி ஆணையர் திரு. என். சி. நாராயணசாமி நாயுடு, பி.ஏ., ஆகியோர் வந்திருந்து சிறப்பித்தனர். அட்சயலிங்கசாமி திருப்பணி வேலைகளை 22-4-60 காலை 9-30 மணிக்கு சென்னை அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் துவக்கிவைத்து, உரையும் நிகழ்த்தினுர்கள். ஷை கோயில் தர்மகர்த்தர் திரு. எம். டி. தியாகராஜப்பிள்ளை, எம்.எல்.ஏ., அவர்கள் வந்திருந்தோரை வரவேற்ருர். தர்மகர்த்தாக்கள் குழுத் தலைவர் திரு. ஜி. முத்துகிருஷ்ண நாயுடு வரவேற்புரை வாசித்தளித்தார்கள். தர்மகர்த்தர் திரு. குப்பு வி. மழவராயர் நன்றிகூறிக் கூட்டம் முடிவுற்றது.

✦ ✦ ✦ ✦

சிதம்பரம், தில்லையம்மன் கோயில் வாகனமண்டபத் திருப்பணித் துவக்கவிழாவிற்கு தென்னுற்காடு அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. ரா. அ. வரதராஜன், பி.ஏ., அவர்கள் 2-5-60ல் தலைமை வகித்தார்கள். 'சமயத்தொண்டில் மறுமலர்ச்சி' என்பதுபற்றி திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினுர்கள்.

✦ ✦ ✦ ✦

விளாகம், சுந்தரவிநாயகர் கோயில் கும்பாபிஷேகம் 2-5-60ல் காலை 9 மணி முதல் 10-30 வரை நடைபெற்றது. 11 மணிக்கு நூல்நிலையத்தை கடலூர் அறநிலையத்துறைஉதவி ஆணையர் திரு. ரா. அ. வரதராஜய்யர் அவர்கள் திறந்து வைத்தார்கள். வித்துவான் ச. சேது சுப்பிரமணியம் அவர்கள் விநாயகர் தத்துவம் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள்.

✦ ✦ ✦ ✦

திருக்கள்ளம், திருக்கள்ளீசுவரர் கோயிலுக்கு 6-3-60ல் சென்னையிலிருந்து தருமபுர ஆதீன சைவப்பிரசார சபையினர் சுமார் 60 பேர் வந்திருந்து வழிபாடு நடாத்தினுர்கள். கிராமத்தார் பலர் வந்திருந்து சைவ விளக்கங்களைக் கேட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான்சுவாமிகளால் புத்தாண்டின் பஞ்சாங்கம் இலவசமாக வழங்கப்பட்டது. 31-3-60 கிருத்திகையன்று திரு. வி. ஆர். துரைசாமி முதலியார் தன் குடும்பத்தினர் சிவனடியார்களோடு வந்து ஷை ஆலயத்திலுள்ள பாலசுப்பிரமணிய சுவாமிக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்து "வெற்றிவேல்" சாத்துப்படி செய்யப்பட்டது.

✦ ✦ ✦ ✦

மதுரை, மீனுட்சியம்மன் சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 272-ஆவது ஆண்டு மகேசுவர பூசைத் திருநாளன்று திருமுறைத் திருவிழா 11-6-60 அன்று நடைபெறும். அன்று அந்தணர்களுக்கும் அடியார்களுக்கும் அன்னம் பாலிப்பு நடைபெறும்.

✦ ✦ ✦ ✦

மதுரை, மீனுட்சிசுந்தரேசுவரர் கோயில் சித்திரைப்பெருவிழா 27-4-60 முதல் 9-5-60 வரை நடைபெற்றது.

நவ திருப்பதி அநுபவம்

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L.]

1583

நவ திருப்பதிகளின் தல வரலாறுகளை ஒருவாறு பார்த்தோம். அவை புராணங்களோடு ஒட்டியனவா அன்ரு என்பது நமக்கு விஷயமல்ல. ஆனல் அவ்வரலாறுகள் எந்த அடிப்படையில் எழுந்தன என்பதை நாம் காணவேணும். வரலாறுகள் பின்புள்ளார் கற்பனைகள் என்று கொண்டாலுமே எத்தகைய உணர்வோடு அக்கற்பனைகள் எழுந்தன என்பது நாம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

இவ்வொன்பது திருப்பதிகளும் நம்மாழ்வார் ஒருவராலேயே பாடப் பெற்றவை என்பது முன்னமே கூறப்பட்டது. நம்மாழ்வாரைப் பிரபன்னஜன கூடஸ்தர் என்று வைணவ உலகம் போற்றும். மற்றைய ஆழ்வார்களில் காட்டில் நம்மாழ்வார் பால் எம்பெருமான் வேருக இனியனுய் அவருக்கு விசேஷ கடாட்சம் பண்ணினன். இதனை அவர் வாக்காலேயே நாம் அறிகிருேம்.

"பெருங்கே ழலர் தம் பெருங் கண்
மலர்ப் புண்டரீகம் நம்மேல்
ஒருங்கே பிறழ வைந்தார்"

என்று அவரே தாம் பேறு பெற்றதைக் கூறுகிருர். நம்மாழ்வார் அவதரித்தது திருக்குருகூரிலே. அது வராக க்ஷேத்ரம் என்றும் பெயர் பெறும். வராக மூர்த்திபால் நம்மாழ்வாருக்குள்ள ஈடுபாடு சொல்லும் தரமன்று. "எறிதிரைவையம் முற்றும் ஏனத்துருவாய் இடந்த பிரானை," ஆழ்வார் "ஞானப்பிரான்" என்றே கூறுவர். அந்த ஞானப் பிரான்சந்நிதியில் கிடத்தப்பட்டபோது அவன் தன் நீண்டு பரந்த திருக்கண் மலர்களை மலர விழித்து இவரை நோக்க அந்த ஞானப்பிரான் சக்ஷுர்தீக்ஷையில் மயர்வற மதி நலம் பெற்ருர் ஆழ்வார். இப்படிப் பேறுபெற அவர் அவர் பக்கல் கைமுதலாக நோற்ற நோன்புமில்லை நுண்ணறிவுமில்லை. நாட்டு மானிடமற்றைக் குழந்தைகள் போல் எவ்வித சேஷ்டிதமுமின்றி ஒன்றுமறியாது உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டிருந்த மாமிசபிண்டம் போன்றிருந்த தசையிலே காணும் இவரை அவன் நோக்கியது. அதனுலேதான் அவர் "இவ்வகாலம்" என்று கூறினர். நிர்ஹேதுகமாயிற்று அவன் கடாக்ஷித்தது. இறையறிவுமட்டுமின்றி உலகவறிவும் இல்லாத காலத்திலே அருளினன். "அறியாக்காலத்துள்ளே அறியாத மாமாயத்து அடியேனை அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாய்" என்று ஆழ்வார் தன் நன்றி தோன்றக் கூறுகிருர் பெற்ற அறிவு அகல் ஞாலத்தறிவு மட்டுமல்ல; மயர்வறு மதிநலம். அப்பேறு பெற்ற மகிழ்ச்சியிலே தாம் பெற்ற பேற்றைத் தாமே சம்மதித்து "ஒருவர் நம்போல் வருங்கேழ்பவருளரோ. தொல்லை வாழியம் சூழ்பிறப்பு மருங்கே வரப்பெறுமே சொல்லு வாழி மட நெஞ்சமே" என்று தம் மனத்தோடு உசாவுகிருர். கேழாலர் நோக்கால் தான்பெற்ற பேறு இது என்று தம் மனத்தோடு கூறுவது போல உலகத்தார்க்கும் கூறி, தம்போல உயிர்கள் யாவும் நன்மைபெற வேண்டும் என்று கருதுகிருர். தன் அநுபவமும் பிறவுயிர்களின் இழவும் கண்டு அவற்றின் துயரம் தம் மனத்தே உறுத்த அவர்வனை நோக்கி "எறிதிரை வையம் முற்றும் ஏனத்துருவாய் இடந்த பிரானை யன்றி வானத்தவர்க்கும் மற்றெல்லாயவர்க்கு ஞானப்பிரான்" இல்லை. இது நான் கண்ட நல்லது நீங்களும் இந்நன்மையைக் கண்டு பலனடையுங்கள் என்று பறை சாற்றுகிருர்.

இப்படி மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார் இறைவனை இவ்வொன்பது திருப்பதிகளிலும் சேவித்து அனுபவித்த அனுபவங்கள் என்ன? இப்படி இவரை விசேஷகடாக்ஷம் பண்ணித் தன்பக்கல் ஒரு மையலை உண்டாக்கி அவரை இறைவன் அனுபவித்

தது எப்படி? இவற்றை நம் ஆசார்யர்கள் எப்படி அனுபவித்தார்கள். இவ்வனுபவங்களை யெல்லாம் காணும் நம் அனுபவம் என்ன என்பனவே நமக்கு இப்போது விஷயம்.

"அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண்
அன்பு செய்வித்து
அறியாத மாமாயத்து
அடியேனை வைத்தாயால்"

என்ற ஆழ்வாரின் அடிகளை மேலே பார்த்தோம். அறிவிலாக் காலத்தே அவன் அறிவளித்தான். அறிவளித்ததும் அவர் தன்னை முதலில் அறிந்து கொள்ளும் விதம் தாம் என்னே. மயர்வற மதிநலமாகையாலே தன்னை அடிமைப் பொருளாகவே காண்கிறார் ஆழ்வார். "மாமாயத்து என்னை" என்னுமல் "மாமாயத்து அடியேனை" என்று ஆழ்வார் கூறியது பன்னிப்பன்னி மகிழ்தற்குறியது. ஞானத்தில் மயர்வு கழிந்தால் ஆன்மா தன் சொரூபம் சுதந்தரமல்ல என்பதை உணரும் என்பது குறிப்பு. தன் சொரூபம் அடிமை என்பது கண்டார். யாருக்கு என்ற கேள்வி பிறக்கிறது. ஆன்மாவின் வாழ்வின் குறிக்கோள் என்ன என்பது அடுத்த கேள்வி. அதையடைய உபாயம் என்ன, அதற்குத் தடையாயுள்ளது எது இவ்வைந்து பற்றிய அறிவுதான் அர்த்தபஞ்சகம் என்னப்படுவது.

ஆழ்வார் அருளிய திருவாய்மொழியின் முதற் பாசுரத்திலே இவ்வைந்து அர்த்தங்களையும் அருளிச் செய்கிறார்.

உயர்வற உயர்நலமு டையவன் யவன்
அவன்
மயர்வற மதிநலம் அருளி னன்யவன்
அவன்
அயர் வறும் அமரர்கள் அதிபதி யவன்
அவன்
துயரறு சுடரடி தொழுது எழு
என் மனனே

என்ற இப்பாசுரத்திலே மேற் சொன்ன ஐந்து பொருளும் பொதிந்திருப்பதைக் காணலாம். ஆன்மா எழுந்து அவனைப் பின்னுவது புருஷார்த்தம். அப்படி எழவேண்டுமானல் ஆன்மா தொழுதே எழவேண்டும். அதனல் அதன் தாஸத்துவம் காட்டப்பெற்றது அப்படி எழ உபாயமாகப் பற்றவேண்டியது அவன் திருவடிகளே. இது துயர் அறுசுடரடி என்பதால் காட்டப்பட்டது. இதற்குத்தடையாகவுள்ளன பிறவியடியாக வரும் இன்பதுன்பங்கள். இது துயர் என்ற பதத்தால் காட்டப்பெற்றது. இறைவன் அநந்த கல்யாண குணமுடையவன். அவன் இமையோரதிபதி. இது உயர்வற உயர் நலமுடையவன், அமரர்கள் அதிபதி என்பதால் காட்டப்பெற்றது. இவ்வைம்பொருள்களையும் உணர்ந்துவிட்டால் ஆன்மா தன் வாழ்க்கைப் பாதையையும் குறிக்கோளையும் தெரிந்து கொண்டதாகிறது.

சரி, மதிநலம் இறைவன் ஒருவன் உண்டு என்பதை அறிவித்தது. அவன் உயர்நலமுடையவன். அதிபதி என்றும் காட்டியது: அவன் யார்? மதிநலம் பயக்கும் வேதம் எத்தனையோ பெயர்களை இறைவன் போலக் கூறுகிறதே எது உண்மை என ஆராய்ந்தார். "வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே" என முடித்தார். அவ்வதிபதி தான் இறைவன். அவன்தான் புருஷார்த்தம் என்றார். நம் துயரை அறுக்கும் சுடரடி என்று முன் சொன்னரே அது நாரணனுடைய 'திண்கழல்' என்றார். ஏன் நாராயணன் இறைவன்! எனெனில் அவன்தான் நம்மையும் உலகங்களையும் ஆக்கிய முதற்காரணன், நம்மை வைத்துக் காப்பவன். ஆன்ம கோடிகளின் தங்கிடம். அவை உலகில் தோன்று முன்பும், உலகெலாம் அழிந்த பின்னும் அவற்றின் தங்கிடமாக இருப்பவன். அது மட்டுமல்ல எல்லா ஆன்ம வஸ்துக்களையும் தனக்குத் தங்கிடமாகக் கொண்டவன். இப்பொருள் அந்தப் பதத்திலேயே கிடக்கிறது. [நாரம்-ஆன்ம வஸ்துக்கள், அயனம்- தங்கிடம், இது இருவகையாகப் பொருள்படும் நாரங்களுக்கு அயனமாயிருப்பவன், நாரங்களை அயனமாக உடையவன் என்று]

பரசொரூபம் நாராயணன் என்றால் பின் ஏன் சிலர் அவனை வணங்காமல் வேறு தெய்வங்களை வணங்குகின்றனர்? எனில் அது அவரவர் அறிவின் அளவைக் காட்டுகின்றது. யார் யாரைப் பரதெய்வம் என்று அவர்கள் அறிவு காட்டுகின்றதோ அவரை அந்த அப்பாவிகள் வணங்குகின்றனர். வேதங்களில் அந்தத் தெய்வம் என்ன பலன் கொடுக்கும்

என்று விதிக்கிறதோ அப்பலனை அவர்கள் பெறுவார்கள் என முடித்தார்.

அவரவர் தம தம தறி
வுஅறி வகை வகை
அவரவர் இறையவர் என
அடி அடைவர்கள்
அவரவர் இறையவர்
குறைவிலர் இறையவர்
அவரவர் விதி வழி
அடைய நின்றனரே.

சரி, இஷ்டம்போல் வணங்கி அற்பப் பலன் பெற்றுப் போகட்டும். ஆனால் பர தெய்வத்தை இகழவும் செய்கிறார்களே. அப்படி இகழ்ந்து கொடிய பாவத்தை ஏன் சம்பாதிக்கிறார்கள். குறுநில மன்னன் குடி களுக்கு அம்மன்னன் தான் யாவும் என்றா லும், அவனுக்கு மேல் ஒரு சக்ரவர்த்தி உண்டென்பதை உணராமலிருக்கலாமா இம் மதியிலிகள் என்று அவர்கள் பக்கல் இரங் கினார். அதன் பலனாக அவர்களுக்கு வேத, புராண வாயிலாகவே உண்மையுணர்த்த முற்படுகிறார். இம்முயற்சியே ஒன்றுந் தேவும் என்ற குருகூர்ப்பதிகம்.

1) ஒன்றுந் தேவும் உலகும் உயிரும்
மற்றும் யாதும் இல்லா
அன்று நான் முகன் தன்னொடு
தேவருலகோடு உயிர் படைத்தான்
குன்றம்போல் மணி மாட நீடு
திருக்குருகூரதனுள்
நின்ற ஆதிப்பிரான் நிற்க
மற்றைத் தெய்வம் நாடுதிரே.

நாராயணனே பரதெய்வம் என்ற உண் மையை முன்னே இரண்டிடங்களில் நிலை நாட்டினார். 'உயர்வற உயர் நலம்' என்ற பதிகத்தில் அவனது பரமபத நிலையைக் கூறி அவன்பரத்துவத்தைத்தாபித்தார். 'திண்ணன் வீடு' என்ற திருவாய்மொழியில் அவன் விபவ நிலையான அவதாரங்களைக் காட்டி அவன் பரத்துவத்தைக் காட்டினார். அவன் மேன்மையைக் காட்டினார் உலகர் உணர்ந் தாரில்லை. அம்மேன்மையை மறந்து அவன் தன்னைத் தாழவிட்டதைக் காட்டினார் நன்றி யில் உலகர் அவனை நயந்தாரில்லை. அந்நிலை களெல்லாம் இக்காலத்தவர் புலன்வழி நுகரக் கூடாததாய் விட்டன எனவே தன்னை உளனாக என்றும் காட்டும் வகையில் அர்ச் சையாக நிற்கிறான் இப்போது. இதைக் கண்டாவது தெளிவு பெறுங்கள் என்று அர்ச்சை மூலம் அவன் பரத்துவத்தைப்பல தடைவிடைகள் மூலம் விளக்குகிறார் ஆழ் வார்.

'ஏகோ ஹவை நாராயண ஆஸீத் நப்ரும்ம நேசான:' (நாராயணன் ஒருவனே இருந்தான் பிரம்மாவோ ஈசானனோ இல்லை) என்ற வேதவாக்கியத்தை வைத்துத் தொடங் குகிறார். சிருஷ்டிக்குமுன், தேவரும், மனி தரும் உயிர்களும் பொருள்களும் உலகும் யாதும் இல்லாத இக்காலத்து இறைவன் இருந்தான் தனியனாக. மீண்டும் உலகைப் படைக்க உன்னி பஹுஸ்யாம் என்று சங் கல்பம் செய்தான். உலகைப் படைக்க வென்றே நான்முகனைத் தன் கொப்பூழிலே தோற்றுவித்தான். அவனை உலகைப் படை என விதித்தான். நித்தியமான ஆன்மவஸ்துக் களை அப்படிப்படைக்கப்பட்ட பொருள் களிலே புகவிட்டான். முடிவில் அவ்வநித்தி யப் பொருள்களினின்றும் விடுபட்டு ஆன்மா தன்னையடைய வேண்டி அப்பொருள்களைச் சம்மாரம் செய்ய ஒரு மூர்த்தியைப் பிரம்மா வைக் கொண்டே படைப்பித்தான். அவ்வான் மாக்கள் உலகிலே வடிவோடு வளையவரு பவற்றைக் காக்கும் தொழிலைத்தானே ஏற் றான். எனவே இறைவன் உலகைப் படைப் பித்து, காத்து, அழிவிக்கிறான். அவனே தலைவன். எவனால் இவை செய்யப்படுகின் றனவோ அவன்தான் தலைவனாகவும் முடியும். அவன் நாராயணன் என்று வேதம் கூறுகின் றதே. இந்த எளிய விஷயத்தைப்புரிந்து கொள்ளாது மயங்குகிறீர்களே என்று தொடங்குகிறார். அந்த உலகத்தை படைத்த நான்முகனையும் அவன் மூலமாக இதரதேவ தைகள், மனிதர், உலகம் இவற்றையும் படைத்து அவற்றுள் தானும் நின்றியங்கு கின்ற அந்த நாராயணன், ஆதிப்பிரான் எங் குள்ளான் என்று தேடவேண்டாம். இதோ குருகூரிலே ஆதிநாதன் என்ற திருப்பெய ரோடு அர்ச்சாவதாரனாய் நிற்கிறான். நம் ஊனக்கண்ணுக்குப் புலனும் வண்ணம்

அழகிய உருவோடு நிற்கிருன். உயர்ந்தமாட மாளிகைகள் சூழ்ந்த திருநகரியிலே "நன் னெடுங்குன்றம்" நின்ற தொக்க நிற்கிருன். உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? குன் றும் தெரியாத குருடராகிவிட்டீர்களா? அப்படிப்பிறர் அசைக்க முடியாதபடி வேதப் பிரமாணங்களாலே திண்ணியனாய் நிற்கும் ஆதிப்பிரானை விட்டு மற்றைத்தெய்வத்தைத் தேடுகிறீர்களே என்ன பேதைமை என்று பரிவோடு வியக்கிருர். (தொடரும்)

செய்திகள்

இளையனூர்வேலூர், பாலசுப்பிரமண்யசுவாமி கோயிலில் 29-4-60 முதல் 11-5-60 வரை பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

பரம்பக்குடி, சந்திரசேகரசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 28-4-60 முதல் 10-5-60 வரை நடைபெற்றது.

பரம்பக்குடி, சுந்தரராஜப்பெருமாள் கோயில் கோடைத்திருநாள் என்னும் சைத்ரோத்சவம் 6-5-60 முதல் 17-5-60 வரை நடைபெற்றது.

சோளசிம்ஹபுரம், நரசிம்மசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 29-4-60 முதல் 14-5-60 வரை நடைபெற்றது,

திருப்புகலூர், அக்கினீசுவரர் கோயிலில் திருநாவுக்கரசர் பெருவிழா 12-4-60 முதல் 21-4-60 முடிய 10 நாட்கள் நடைபெற்றது. 19-4-60 முதல் 21-4-60 வரை மூன்று தினங்கள் திருமுறை மகாநாடு நடைபெற்றது. மாவட்டத்திலுள்ள எல்லா ஓதுவார்களும் கலந்து கொண்டார்கள். கடைசி தினமாகிய 21-4-60ல் அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையில் தேவாரப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு ரூ. 1000/- மதிப்புள்ள தங்கமெடல்களைப் பரிசாக அளித்தார்கள். தஞ்சை அறநிலையத்துறை ஆணையர் திரு. கே. சோமசுந்தரதேசிகர். எம். ஏ., அவர்களும் பிச்சைக்கட்டளை எஸ்டேட் அதிபர் திரு. கே. கனகசபைப்பிள்ளை அவர்களும், மணலி திரு. இ. ராமகிருஷ்ணமுதலியார் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலரும் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்கள்.

நாகப்பட்டினம், காயாரோகண, நீலயதாட்சி அம்மன் கோயில் கோபுரம் திருப்பணி விழா 24-4-60ல் அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் துவக்கி வைக்கப்பெற்றது.

நாகப்பட்டினம், சௌந்திரராஜப்பெருமாள் கோயிலில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பாசுரக்கல்வெட்டை 24-4-60 காலை 9 மணிக்கு அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பழனி, தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் மலைக்கோயிலில் பங்குனி உற்சவ உண்டியல்கள் பார்க்காமணி 29-4-60ம் தேதியில் நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தினதயாளு, பி.எஸ்ஸி., பி.எல்., டிரஸ்டிகள் திரு. பி. எஸ். சீனிவாசன் செட்டியார், திரு. ஏ. எஸ். மாணிக்கம் பிள்ளை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. உண்டியல்மூலம் வரவு ரூ. 1,01,642—22.

காட்டுப்பரூர், ஆதிகேசவப்பெருமாள் பிரம்மோற்சவம் 4-6-60 முதல் 13-6-60 வரை நடைபெறும்.

* திருஏடகம் *

பொய்கையின் பொழிலுறு புதுமலர்த்
தென்றலார்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்(து)
ஐயனை அடிபணிந் தரற்றுமின் அடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே
—திருஞானசம்பந்தர்.

தேவாரப் பாடல் பெற்ற பாண்டிப் பதினுலு பதிகளில் ஒன்று திரு ஏடகம். இது மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டைப் பகுதியிலுள்ளது. மதுரையிலிருந்து நிலக்கோட்டைக்குச் செல்லும் சாலையில் 12-ஆவது கல்லில் இருக்கிறது. சோழவந்தான் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து சுமார் மூன்று கல் தொலைவு. இப்பதியின் பெயர் **வில்வவனம்** என்பது. திருஞானசம்பந்தர் சமணர்களுடன் வாது செய்தபொழுது "வாழ்க அந்தணர்" என்ற திருப்பதிகம் எழுதி மதுரையில் வையை யாற்றிலிட அந்த ஏடு நீரை எதிர்த்துச் சென்றது. சம்பந்தப் பெருமான் "வன்னியு மத்தமும்" என்று தொடங்கும் பதிகம் பாடியவுடன் இத்தலத் தருகில் நின்றது. ஏடு தங்கிய இடமானபடியால் ஏடகம் என்ற பெயர் உண்டாயிற்று. ஆளுடைய பிள்ளையாரே தமது அருமைத் திருவாக்கால்

"கோடுசந் தனமகில் கொண்டிழி
வைகை நீர்
ஏடுசென் றணைதரும் ஏடகத் தொருவனை"

என்று கூறியருளியுள்ளார். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில்,

விரைவோ டிகலா விடுமே டெதிர்போய்க்
கரைசேர் தலினு லுறைகா ரணனைப்
பரவே டகனென் றிடவே பதியுந்
திருவே டகமென்று சிறந் ததுவே

என்று கூறப்பட்டிருக்கிறது. இன்னும் இத்தலத்திற்குப் புன்னாக வனம், ஆதிசேடபுரம் என்ற பெயர்களும் உண்டு.

இத்தலம், "பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார் வைகையின் வடகரை மருவிய ஏடகம்" என்று தேவாரத்தில் கூறியபடி வையை யாற்றின் கரையில் அமைந் திருக்கிறது. கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. ஒரே பிரகாரம் தான் இருக்கிறது. அதற்குள் சுவாமி சந்நிதி, அம்பாள் சந்நிதி இவைகளிரண்டும் கிழக்கு நோக்கியிருக்கின்றன. ஒவ்வொன்றின் முன் வாயிலை ஐந்து நிலையுள்ள இரண்டு புதுக் கோபுரங்கள் அழகு செய்கின்றன. வெளியே கிழக்கில் ஒரு இராய கோபுரமும், பின்புறம் ஒரு பழைய கோபுரமும் உள்ளன.

இத்தலத்து இறைவன் திருநாமம் ஏடகநாதர். பார்த்தப்பிரஹாரம் என்னும் அடையாளமுள்ள இலிங்கமூர்த்தி. தேவியின் திருப்பெயர் ஏலவார்குழலி என்பது. "ஏலமார்தரு குழல் ஏழையோடு எழில் பெறும் கோலமார் தருவிடைக் குழகனுர்" என்பது சம்பந்தர் தேவாரம். **வில்வ மரம்** இத்தலவிருட்சம். **வையையாறும்,** பிரமதீர்த்தமும் இத்தலத்தின் தீர்த்தங்கள். வையையாறு கோயிலுக்குப் பின்புறம் வடக்கேயிருந்து தெற்கு முகமாக (தட்சிண வாகினியாக) ஓடுகிறது. பிரம தீர்த்தம் அம்பிகை சந்நிதிக்கெதிரிலுள்ள திருக்குளம். அதில் நீராடி இறைவனை வழிபட்டால் சித்தப்பிரமை முதலியன நீங்குவதாக இப்போதும் கூறப்படுகிறது. கோயிலில் ஆறுகால பூசையும், மாதத்திருநாட்களும் நடைபெறுகின்றன. திருமால், கருடன், ஆதிசேடன், சாத்தனுர் இத்தலத்திறைவனை வழிபட்டதாகக் கூறப்படுகிறது. இதை,

"உன்னி மாலும் உவணனும் சேடனும்
மன்னு சாத்தனும் நான்குகம் வாழ்த்தகம்"

என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்திறைவன் பேரில் பதினொரு பாசுரங்களையுடைய திருப்பதிகம் ஒன்று ஓதியருளியுள்ளார். "கொடி நெடு மாளிகை கோபுரம் குளிர்மதி வடிவுற அமைதர மருவிய ஏடகம்" என்பர். இப்பதி இறைவனை அன்பினால் வழிபட்டால் "இடி படும் வினைகள் போய் இல்லையதாகுமே" என்றும், "கண்டு கைதொழுதலும் கவலை நோய் கழலுமே" என்றும் கூறுகின்றார்.

திருவேடகத்தைப் பற்றிய தேவார வைப்புக் குறிப்புக்கள் பின்வருவன:-

"உண்ணீரோ ரேடகமும்"
"தெற்றென்ற தெய்வம் தெளியார்
கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங் கெதிர் வினீரவும்".

க்ஷேத்திரக் கோவைத் திருத் தாண்டகத்தில் "உறையூர் கடலொற்றியூரூற்றத்தூர் ஓமாம் புலியூர் ஓர் ஏடகத்தும்" என்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

சேக்கிழார், பெரிய புராணத்தில் "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும் திருப்பதிகத் திற்கு விரிவுரையாகவுள்ள பாடல்கள் அரிய கருத்துக்கள் பொதிந்தவை. ஏடு ஆற்றிலிட் டது எதிர் நோக்கிச் சென்றதை,

"திருவுடைப் பிள்ளையார்தந் திருக்கையால்
இட்ட ஏடு
மருவுறும் பிறவியாற்றில் மாதவர் மனம்
சென்றாற்போல்"

என்ற அழகிய உவமானத்தால் அமைத்துக் காட்டுகிறார்.

அருணகிரிநாதர், திருப்புகழில்
"செம்புகேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ
செகநாதம்"

என்று கூறியிருக்கிறார்.

தஞ்சை-சதாவதானம் சுப்பிரமணிய அய்யர் என்பார் தலபுராணம் இயற்றியுள்ளார். பாயிரம், நாட்டுப்படலம், நகரப்படலம், நைமிசப்படலம், பிரமன் சிருட்டிபெறுபடலம், வியாசர் வரம் பெறுபடலம், பராசரப்படலம், குசகேதுப்படலம், திருஞானசம்பந்தப்படலம், ஏடெதிர்ந்தபடலம், பிரம தீர்த்தப்படலம், தலவிசேடப்படலம், முனிவர் பூசனைப் படலம் ஆக 13 படலங்களில் 649 செய்யுட்கள் இருக்கின்றன. நகரப்படலத்தில்,

செய்யதா மரைமகள் சேர்ந்துறை
வீடுவெண்
மெய்யதா மரைமகள் மேவிவா ழில்லகம்
உய்யலா மெனவசித் துள்ளவ
ரெண்ணியாங்(கு)
எய்தலா மெனுந்திரு வேடக மாநகர்

என்று கூறுகிறார்.

மருவே டகங்கொண்டு மலர்வில்வா
ரணியதலம்
கருவே டகங்கொள்ளாக் கழுமலத்தா
ரிட்டதெய்வத்
திருவே டகங்கொண்ட சீர்மருவு
காரணத்தால்
திருவே டகமெனுமோர் திருநாம
நண்ணியதே

என்று தலப்பெயர் ஏற்பட்ட காரணத்தைச் சொல்கிறார்.

திருஞானசம்பந்தப்படலத்தில் பிள்ளையார் திருவவதாரம் முதல் ஏடெதிர் சென்ற அற்புதம் நிகழ்த்தியதற்கு முன் வரையுள்ள வரலாற்றைச் சுருக்கமாக 90 பாடல்களில் பெரிய புராணத்தை அடியொற்றி அழகுபட இவ்வாசிரியர் அமைத்திருப்பது படித்தின் புறத்தக்கது.

இன்னும் இத்தலத்தைப்பற்றி, இரண்டு திருவிளையாடற் புராணங்கள், சேதுப்புராணம், திருக்காளத்திப் புராணம், திருப்பெருந்துறைப்புராணம் முதலியவைகளில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வூரில் வாது வென்ற விநாயகர் கோயில் என்ற ஒன்றும் இருக்கிறது.

இக்கோயிலில் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கோபுரங்களின் வாயில்களிலும், மதிற் சுவர்களிலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1216-35), பராக்கிரம பாண்டியன், ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1190-1217), விஜயநகர - கிருஷ்ண

தேவ மகாராயன் முதலிய மன்னர்களின் காலத்தவை. பாகனூர்க் கூற்றத்துத்திருவேடகம் என்றும், இறைவன் பெயரை, திருவேடக முடைய நாயனுர் என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பெரும்பாலும் எல்லாக் கல் வெட்டுக்களும் நிலதானத்தையே குறிக்கின்றன. ஒரு கல் வெட்டு திருமால் கோயில் ஒன்றைச் சொல்கிறது. மற்ருென்றில் திரு ஞான சம்பந்தர் மடத்தில் இருபது தவசியார் களுக்கு உணவளிப்பதற்கு நிலம் விடப்பட்டதைக் கூறப்படுகிறது. வேருென்றில் ஜடாவர் மன் திரிபுவனச்சக்கரவர்த்தி ஸ்ரீவல்லபதேவன் நிலக்கொடையை மீண்டும் பதிவு செய்வதைக் காண்கிருேம்.

வரியணி நயனிநன் மலைமகள் மறுகிடக்
கரியிணை உரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினே டாணலி யாகிய
எரியவன் உறைவிடம் ஏடகக் கோயிலே

—திருஞானசம்பந்தர்.

செய்திகள்

பெரும்பேறுகண்டிகை, சுப்பிரமண்யசுவாமி கோயில் விமானத்தைப் புதுப்பித்தல், பிரகாரங்களுக்குத் தளவரிசை செய்தல், அடிவாரத்திலுள்ள நவக்கிரஹ சந்நிதி பழுதுபார்த்தல், முதலிய திருப்பணி நடைபெறவிருப்பதால் அன்பர்கள் இயன்றளவு பொருளுதவி திரு. எஸ். முத்தையன், சுப்பிரமண்யசுவாமி கோயில் திருப்பணிக் கமிட்டி, பெரும்பேறு கண்டிகை, மதுராந்தகம் தாலூகா, செங்கற்பட்டு மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பும்படி வேண்டப்படுகிருர்கள்.

✦ ✦ ✦ ✦

பெரும்மேறுகண்டிகை, ஆறுமுகப்பெருமானின் திருமலைப்படிகளை புதியதாக மூன்று மண்டபங்களுடன் ரூ. 32000/- செலவில் அமைப்பதற்கான கால்கோள்விழாவை சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் 12-5-60ல் ஆரம்பித்து வைத்தார்கள்.

✦ ✦ ✦ ✦

திருப்பனந்தாள், காசி மடத்தின் ஆதரவில் சிதம்பரம் கூத்தப்பெருமான் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் 22—5—60 முதல் 30—5—60 வரை பேரறிஞர்கள் ஒன்பதின் மரால் பெரியபுராணச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. பெரியபுராணத்தின் எல்லாச் சருக்கங்களும் முறையே எடுத்து விளக்கப்பட்டன.

✦ ✦ ✦ ✦

சென்னை, வடபழநி, வடபழநிஆண்டவர் கோயில் 10-5-60 சித்திரா பௌர்ணமி யன்று சென்னை உயர்நீதிபதி திரு. கே. வீராசுவாமி நாயுடு அவர்கள் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கிரீடம் ஒன்று மூலவருக்கு நன்கொடையாக வழங்கினுர்கள். அதுபோது நீதிபதி திரு.என். சோமசுந்தரம் அவர்களும், துணைகல்விஅதிகாரி திரு. வடிவேலு பிள்ளை அவர்களும் கலந்துகொண்டார்கள். சித்திரா பௌர்ணமி விழா நுங்கம்பாக்கம் ஜெயம் அண்டு கம்பெனி அதிபர் அவர்களால் நடத்தப்பெற்றது. 12-5-60ல் திருநெல்வேலி கா. கோமதி அம்மையாரால் "பிறவிப்பயன்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

✦ ✦ ✦ ✦

எடமிச்சி கிராமம், முத்தீசுவரர் கோயில் கும்பாபிஷேகம் 8-5-60ல் நடைபெற்றது அன்று இரவு சுவாமி வீதியுலாக்காட்சி தேவாரப் பஜனைக்கோஷ்டிகளுடன் நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

இலஞ்சி, திருஇலஞ்சி குமாரசுவாமி கோயில் சித்திரைப் பெருந்திருவிழா 30-4-60 முதல் ஆரம்பித்து9-5-60 வரைச் சிறப்பாக நடைபெற்றது. சைவசமயச் சொற்பொழிவுகளும் சுவாமி வீதியுலாக் காட்சியும் நடைபெற்றன.

திருவலிதாயம்

(பாடி)

புந்தியொன்றிநினை வார்வினையாயின
தீரப்பொருளாய
அந்தியன்னதொரு பேரொளியான்அமர்
கோயில்அயலெங்கும்
மந்திவந்துகடு வன்னெடுங்கூடி
வணங்கும்வலிதாயம்
சிந்தியாதஅவர் தம்மடும்வெந்துயர்
தீர்தலெளிதன்றே

—திருஞானசம்பந்தர்.

பண்டைத் தமிழர் நாட்டை நான்கு வகை நிலங்களாகப் பிரித்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. முல்லைநிலத்து ஊர்களைப் பெரும்பாலும் பாடி என்று கூறப்படும் என்பது இலக்கணம். திருஆப்பாடி, திருஎதிர்கொள்பாடி, திருமழபாடி என்பன போன்றவை இவ்வகையினவே. இராமநாதபுரம் மாவட்டத்தில் திருச்சுழியில் என்ற பாடல்பெற்ற தலத்தருகே "தமிழ்ப்பாடி" என்றே ஒரு சிற்றூர் இருக்கிறதே. ஆனல் பாடி என்ற பொதுப் பெயரே சிறப்புப் பெயராக வழங்கி வருகிற ஊர் தொண்டை நாட்டில் இருக்கிறது. அதுவே பாடல்பெற்ற சிவப்பதியான திருவலிதாயம் என்பது. இது செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டைப் பகுதியில் இருக்கிறது. வில்லிவாக்கம் என்ற இருப்புப் பாதை நிலையத்திலிருந்து இரண்டுகல் தொலைவிலுள்ளது.

பாடி என்று வழங்கும் திருவலிதாயத்திற்கு முல்லைவனம், இந்திரபுரி, பிரமபுரி, பங்கயபுரம், தருமபுரம், அஷ்டாக்ஷரப்பதி, மிளிநகர், வன்னீசுவரம், ஆதித்தபுரம், நிசிமதி நகரம், பஞ்சாக்கரப்பதி, முத்திநகர் என்ற வேறு பெயர்களும் உண்டு. பரத்துவாசமுனிவர் வலியன் என்ற கரிக்குருவி உருவெடுத்து இத்தலத்து இறைவனை வழிபட்டதால் வலிதாயம் என்ற பெயர் உண்டாயிற்றென்று தலபுராணம் கூறுகிறது.

திருக்கோயில் ஊர்க்குடியிருப்புக்குக் கிழக்கே தனியான ஒரு இடத்தில் அமைந்திருக்கிறது. அழகிய சிறுகோயில். மூன்று நிலைக்கோபுரமொன்று கிழக்கு வாயிலை அணிசெய்கிறது. தெற்கிலும் மேற்கிலும் சிறுவாயில்கள் உள்ளன. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கிறது. அம்பிகை சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. இறைவன் திருநாமம் **திருவலிதாயநாதர்**; தேவியின் திருப்பெயர் **தாயம்மை** என்பது. கர்ப்பக்கிரகம் தூங்கானைமாடம் (யானைப் பின்புறம்) வடிவத்தில் அமைந்திருக்கிறது. விமானமும் கஜப்ருஷ்ட விமானமே. க்ஷேத்திரபால விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் கூடிய முருகன், காசிவிசுவநாதர், சரசுவதி முதலியவர்களுக்குத் தனித்தனி சந்நிதிகள் இருக்கின்றன. மற்றபடி, தென்முகக்கடவுள், திருமால், துர்க்கை, சூரியன், பைரவர் முதலியோர் திருவுருவங்களைக் காணலாம். சுவாமி அம்மன் சந்நிதிகளுக்குமுன் முகமண்டபத்தில் மேலே நவகோணமான ஒரே கல்லில் தேவமூர்த்தங்கள் அடங்கிய அழகிய சிற்பம் இருக்கிறது.

இத்தல விருட்சம் பாடலம் அல்லது பாதிரிமரம். தீர்த்தங்கள் ஐந்து. கோயிலுக்குத் தெற்கேயுள்ள **பரத்துவாச தீர்த்தம்** என்னும் திருக்குளம்; வடகிழக்கில் விநாயகர் கோயிலை அடுத்துள்ள **அனுமத் தீர்த்தம்**; வடமேற்கில் **பிரமதீர்த்தம்**; வடக்கில் நெடுஞ்சாலைக்கு அண்மையில் **அகத்திய தீர்த்தம்**; தெற்கேயுள்ள பழம்பாலாருன **கூவம் ஆறு**. இவைகளைப் பற்றித் தலமான்மியம் கூறுகின்றது.

இத்திருத்தலத்துப் பெருமான்பேரில் **திருஞானசம்பந்தர்** பதினெரு பாடல்களை

யுடைய ஒரு பதிகம் பாடியருளியுள்ளார். "வண்டுவைகும் மணமல்கியசோலை வளரும் வலிதாயம்'' என்று இயற்கை எழிலைக் கூறுகிறார். இறைவன் திருவுருவச் சிறப்பையும், அம்மையோடமர்ந்துள்ள காட்சியையும் அழகுபடப் பேசுகிறார். பெருமானை நினைப்பவர்க்கு வினை, கவலை, துன்பம் இவைகள் அடையாவென்றும், பாடும் அடியார்க்குப் புகலிடம் வலிதாயம் என்றும், வலிதாயத்தை வணங்கும் பக்தர்களையே உலகம் பெரியோர் என்று நினைக்கும் என்றும் சொல்லியுள்ளார். மனத்தைக் குரங்குக்கு ஒப்பிடுவர். ஒரு இடத்தில் நில்லாது அலையும். அத்தகைய மனத்தை ஒருவழிப்படுத்தி இறைவனை எண்ணவேண்டுமென்று கூறவந்த ஆளுடைய பிள்ளையார்,

> புந்தி ஒன்றிநினை வார்வினை யாயின
> தீரப் பொருளாய
> அந்தி யன்னதொரு பேரொளி யான்அமர்
> கோயில் அயல்எங்கும்
> மந்தி வந்துகடு வன்னெடுங்கூடி
> வணங்கும் வலிதாயம்

எனப் பெண் குரங்குகள் ஆண் குரங்குகளோடு வந்து வலிதாயத்தை வணங்குகின்றன என்று நயம்படக் கூறியிருப்பது சிந்தித்து மகிழத்தக்கது; பெண்களோடு ஆண்மக்களும் சென்று இறைவனை வழிபட வேண்டுமென்ற படிப்பினையும் கூட.

அருணகிரிநாதர் பின்வரும் திருப்புகழைப் பாடி யிருக்கின்றார் :—

> மருமல்லி யார்குழலின் மடமாதர்
> மருளுன்னி நாயடியன் அலையாமல்
> இருநல்ல வாகுமுன தடிபேண
> இனவல்ல மானமன தருளாயோ
> கருநெல்லி மேனியரி மருகோனே
> கனவள்ளி யார்கணவ முருகேசா
> திருவல்லி தாயமதில் உறைவோனே
> திகழ்வல்ல மாதவர்கள் பெருமாளே.

அஷ்டாவதானம் பூவை - கலியாணசுந்தர முதலியார் (கலியாணசுந்தர யதீந்தரர்) என்னும் பெரும்புலவர் 21 சருக்கங்கள் அடங்கிய தலபுராணம் ஒன்றை இயற்றியிருக்கின்றார். பிரமபுத்திரிகளான கமல வல்லியர் திருவலிதாயமுடையாரை வழிபட்டு விநாயகரை மணந்தது, பரத்துவாசமுனிவர் வலியன் என்ற கருங்குருவி உருவத்தில் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றது, வியாழபகவான் தவம்கிடந்து காமத்தியிலிருந்து விடுபட்டது, திருமால், அனுமான், சுக்கிரீவன், அகத்தியர், வாயுதேவன், காமன், இந்திரன், அக்கினி பகவான், சூரியன், சந்திரன், காலன் இவர்கள் இறைவனை வணங்கிப் பேறு அடைந்தது முதலிய செய்திகளை இத்தல புராணவாயிலாக அறியலாம்.

வடலூர்—இராமலிங்க அடிகள் இத்தலத்துப் பெருமானை வழிபட வந்த காலத்தில் இறைவன்மேல் கந்தை ஆடை சாத்தியிருப்பதைக் கண்டு சிந்தை நொந்து பத்துப் பாடல்களை அருளியிருக்கின்றார். அவைகளில் ஒன்று:—

> துன்னு மாமருந் தேசுட ரேஅருள்
> மன்னு மாணிக்க மேவல்லி கேசரே
> துன்னு கந்தையைச் சுற்றிநிற் பீர்எனில்
> என்ன நீர்ஏமக் கீயும் பரிசதே.

அரசாங்கத்தார் இக்கோயிலிலிருந்து பல கல்வெட்டுக்களைப் படியெடுத்திருக்கின்றனர். பார்த்திவேந்திரன் (கி. பி. 956-969), இராஜராஜன் I (கி. பி. 995-1013), இராஜராஜதேவன் III, மதுராந்தக பொத்தப்பிச் சோழன், விசயநகர தேவராய மகாராயன் I, வீர ஹரிஹரராயன், வீரப்பிரதாப விருபாட்சதேவ மகாராயன், தேவராய மகாராயன் II, விஜயகண்ட கோபாலன் முதலிய மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் அவை. திருவெண்காட்டு அந்தணர் ஒருவர் கோயிலில் அழகியதிருச்சிற்றம்பலமுடையார் திருவுருவம் அமைத்துப் பூசை நைமித்திகங்கட்கு நன்கொடை யளித்தார்; பாடி, சந்திரகிரி என்ற ஊர்களிலுள்ள வன்னியர்கள் செலுத்தவேண்டிய இடங்கை வரியைக் கோயிலுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது; பாடி ஊரினர் ஒருவர் க்ஷேத்திரபால பிள்ளையாருக்குப் பூசை வழிபாட்டுக்குப் பொருள் அளித்தார்; காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் தேவரடியாள் ஒருத்தி திருவீதி நாச்சியாருக்கு நாண்மங்கலம்செய்து இறைவன் இறைவிக்கு அணிகலன்கள்

அளித்தாள். இரண்டு நந்தவனங்கள், இரண்டு வீடுகள் இவைகளைச்சளுக்கி நாரணன் யாதவ ராயன் தானமாகக் கொடுத்தான். பரமேசு வரமங்கலத்துச் சிலம்பணிந்தான் யாதவ ராயன் என்பவன் கோயில் விளக்குக்காகப் பணம் வழங்கினன். பாடி ஊர் மக்கள் கோயிலில் விளக்குகள் போடுவதற்காக நில தானம் செய்தார்கள். பாடி பதினெட்டு வகுப்பினர் செலுத்தவேண்டிய தொழில் வரியைக் கோயிலுக்கு அளிக்கப்பட்டது. கோயிலைப் பழுதுபார்த்துத் திருப்பணி செய்யவும், மாகேசுவரர்களுக்கு உணவளிப்பதற்கும் திருவலிதாய ஊரைத் தானமாகவிடப் பட்டது. இரண்டு விளக்குகளுக்காக நிலம் வாங்கி அளிக்கப்பட்டது. நுளம்பியாற்றுப் பெருஞ்சேரி அல்லது நியாய பரிபாலனப் பேட்டை என்ற ஊரைக் கோயிலுக்காக விலைக்கு வாங்கியது. குறட்டூர் சபையார் கோயில் விளக்குக்காக நிலம் விற்றது. தொண்ணூறு ஆடுகளை விளக்கெரிப்பதற் காக வழங்கியது. செங்கண்கிழான் என்பான் இக்கோயிலில் கட்டிய சந்நிதிக்குப் பூசை நைமித்திகங்களுக்கு நெல் வழங்கினன். ஒரு கல்வெட்டில் **திருஞானசம்பந்தநாழி** என்ற முகத்தலளவைக் கருவி குறிக்கப்படுகிறது. ஜயங்கொண்ட சோழமண்டலத்து விக்கிரம சோழ வளநாடு என்ற புழற்கோட்டத்து அப்பத்தூர் நாட்டுத் திருவலிதாயம் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இக்கோயில் இருக்குமிடத்தைச் **சிந்தாமணிபுரம்** என்ற பெயரால் ஒரு கல்வெட்டு அழைக்கிறது. இறைவன் பெயரைத் திருவலிதாயமுடைய நாயனர், திருவலிதாயமுடைய மகாதேவர் என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

கடலின் நஞ்சம்அமு துண்டிமையோர் தொழு
தேத்த நடமாடி
அடலி லங்கைஅரை யன்வலி செற்றருள்
அம்மான் அமர்கோயில்
மடல்இ லங்குகமு கின்பல வின்மது
விம்மும் வலிதாயம்
உடல்இ லங்குமுயிர் உள்அள வும்தொழ
உள்ளத் துயர்போமே

—திருஞானசம்பந்தர்.

செய்திகள்

எடமிச்சி கிராமம், சௌமியநாராயணப்பெருமாள் கோயில் மகா சம்ப்ரோட்சணம் 19-6-60ல் நடைபெறும்.

கீழப்பெருமழை, ஸ்ரீ ஆத்மனுசுவாமி கோவிலில் 8 5-60 ஞாயிறு காலை புதிதாகச் செய்யப்பட்ட சோமாஸ்கந்தர், அம்மன், சிவகாமி, அஸ்திரதேவர் முதலிய விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

பொன்னிவாடி கிராமம், பகவான் கோயில் அக்கினிநட்சத்திரத் திருவிழா 16—5—60 முதல் 20—5—60 வரை நடைபெற்றது.

திருநாராயணபுரம், வேதநாராயணப்பெருமாள் பிரம்மோற்சவம், 5-6-60 முதல் 15-6-60 வரை நடைபெறும். 13-6-60 காலை 5-50 முதல் 7-00 மணிக்கு இரதாரோஹணம்.

ஸ்ரீவில்லிபுத்தூர், மடவார்விளாகம் வைத்தியநாதசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 28-5-60 முதல் 7-6-60 வரை நடைபெறும். அவ்வமயம் சிறந்த சொற்பொழிவுகளும், கதா காலக்ஷேபங்கள், இன்னிசை நாதவஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறும்.

பின்னத்தூர், கோதண்டராமசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 7—5—60 முதல் 17—5—60 வரை நடைபெற்றது.

திருக்குடந்தை, சாரங்கபாணி சுவாமி கோயில் சைத்ரோத்சவம் 29-4-60 முதல் 22—5—60 வரை நடைபெற்றது.

திருவாதவூர்

நீதிமா மதூக நீழல் நெட்டிலே
        இருப்பை என்றோர்
காதல்கூர் பனுவல் பாடும்
        கபிலனுர் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுள நீழல்
        சிலம்பொலி துலங்கக் காட்டும்
வேதநாயகனுர் வாழும்
        வியன்திரு வாத வூரால்

—பழைய திருவிளையாடல்.

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டிலேயுள்ளது திருவாதவூர் என்னும் பெரும்பதி. மதுரை மாவட்டத்தில் மேலூர்ப் பகுதியிலிருக்கிறது. மதிமலி புரிசை மாடக்கூடலான மதுரை மாநகரிலிருந்து பதினறு கல் தொலைவிலுள்ளது. முல்லைக்குத் தேரீந்த வள்ளலான பாரி மன்னனின் உயிர்த் தோழரும், குறிஞ்சிப் பாட்டு முதலியவைகளை ஆக்கியவரும், 'தோலா நாவிற் கபிலன்' 'பொய்யா நாவிற் புலவன்' என்று புகழப்படுபவருமான கபிலர் என்ற பெரும் புலவர் பிறந்த இடம் திருவாதவூர். தெவிட்டாத தெள்ளமுதமான திருவாசகத்தை உலகுக் களித்த வள்ளலான மாணிக்கவாசகப் பெருமான் திருவவதாரம் செய்யும் பேறுபெற்றதும் இத்திருவாதவூரே. கடவுள் மாமுனிவர் தாம் இயற்றிய திருவாதவூரர்ப் புராணத்தில்,

பொய்ம்மை யாமுலகின் மாயப்
        பொங் கிருளகல வன்னோர்
தம்மையாழ் நரகிற்றள்ளுஞ்
        சமயதாரகை மழுங்க
எம்மையாளுடையனன்
        பரிதயதாமரைகளெல்லாம்
செம்மையாய் மலரஞான
        தினகரர் உதயஞ் செய்தார்

என்று மணிவாசகப் பெருந்தகையாரின் திருஅவதாரச் சிறப்பை எடுத்து ஓதுகிறார்.

வாதவூர், வாதபுரம், சமீரணபுரம், பாண்டியபட்டணம், வயிரவபுரம் முதலிய பெயர்கள் இவ்வூருக்கு வழங்குகின்றன.

'அழுதடி யடைந்த அன்பர்' அவதரித்த புண்ணியப் பதியான திருவாதவூரில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. ஊருக்குப் புறம்பான ஒரு இடத்திலுள்ளது. அவ்விடத்



திருவாதவூர் கோயில்

தைக் **கோட்டை** என்று வழங்குகின்றனர். கோட்டை மதிலிருந்த சின்னங்களும் காணப்படுகின்றன. கோயிலின் கிழக்கு வாயிலைக் கோபுரம் அழகு செய்கிறது. வாயிலுக்கு வலப் புறத்தில் ஏழாம் திருநாள் மண்டபம் இருக்கிறது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. கிழக்கு வெளிப் பிரகாரத்தில் அற்புத சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இதை மாணிக்கவாசக சுவாமிகளே கட்டிய தென்பர். தெற்கு வெளிப் பிரகாரத்தில் அம்பாள் சந்நிதி கிழக்கு பார்க்க இருக்கிறது. சாதாரணமாக எல்லா சிவன் கோயில்களிலும் அம்பிகை சந்நிதி இறைவன் சந்நிதிக்கு இடது புறம் இருக்கும். ஆனால் மதுரையில் மீனாட்சியம்மை எழுந்தருளியிருப்பது போல் திருவாதவூரிலும் இறைவன் சந்நிதிக்கு வலது புறமாக அம்பாள் சந்நிதி அமைந்திருக்கிறது. ஆதலின் தனிச்சிறப்புடையதென்பர். இறைவி சந்நிதிக்குப்பின் புறம் மேற்கு வெளிப் பிரகாரத்தில் காளீசர் சந்நிதி இருக்கிறது.

உட்பிரகாரத்தில் தென் கிழக்கில் மாணிக்கவாசகர் உற்சவமூர்த்தி எழுந்தருளியிருக்கின்றார். தெற்கு உட்பிரகாரத்தில் ஆறுகால் மண்டபம் ஒன்றிருக்கிறது. அதன் நேர்த்தியான சிற்பத்திறனும், அழகிய கொடுங்கையும் நம் மனதைக் கவர்வன. தென் மேற்கு மூலையில் மாணிக்கவாசகர் மூலவர் சந்நிதியிருக்கிறது. பின்னர் கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ள பதினாறு கால் மண்டபத்தை யடைகிறோம். இம்மண்டபத் தூண்களில் அனுமார், மாணிக்கவாசகர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. சோமவார மண்டபத்தைத் தாண்டி இறைவர் மூலவர் சந்நிதியடைகிறோம். சுவாமியின் திருப்பெயர்கள் **ஆத்மநாதர், வாதபுரீசர், திருமறை நாயகர், வேதநாயகர், திருமறைநாதர்** என்பன. அம்பிகையின் திருநாமம் **ஆரணவல்லியார்** என்பது.

மாணிக்கவாசகர்

இத்தலத்தில், சிவதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், பிரம தீர்த்தம், வாயுதீர்த்தம், அக்கினி தீர்த்தம், பயிரவ தீர்த்தம், கபில தீர்த்தம் என ஏழு தீர்த்தங்கள் உள்ளன. கோபுரத்திற்கு எதிரில் திருக்குளம் இருப்பது பிரம **தீர்த்தம்**. நடைபாவிக் கிணறுகக்கோயிலுள் இருப்பது **பயிரவ தீர்த்தம்** உள்ளே திருமஞ்சனத்துக்குப் பயன்படும் கிணறு கபில தீர்த்தம். **விஷ்ணு தீர்த்தம்** என்பது ஒரு ஏரி (கண்மாய்) கோயிலுக்குப் பின்புறம் தெற்கு-வடக்காக இருக்கிறது. திருமறைநாதர் கோயிலுக்கு வடக்கே ஏரிக்குள் கம்பத்தின் மேல் **புருஷாமிருகத்தின்** உருவத்தைக் காணலாம். இதை ஏரிக் காவல் தெய்வம் என்பர். மழை இல்லாத காலங்களில் மக்கள் தேனு

காய்களைக் கறுக்கி, மேள தாளத்துடன் சென்று புருஷாமிருகத்தின் மேல் பூசுவர். இப்படிச் செய்த பின்னர் மழை பெய்கிறதாம்.

இத்தலத்தின் விருட்சம் மகிழமரம். இம்மர நிழலில் தான் சிவபெருமான் மாணிக்கவாசகருக்குச் சிலம்பொலி காட்டிய தென்பதை "சோதிசேர் வகுள நீழல் சிலம் பொலி துலங்கக் காட்டும் வேதநாயகனுர் வாழும் வியன்திருவாதவூர்" என்று பழைய திருவிளையாடற் புராணம் கூறும். மணிவாசகப் பெருந்தகையாரே திருவாசகம்- கீர்த்தித் திருவகவலில்,

வாதவூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்

என்று அருளிச் செய்திருக்கின்ருர்.

இத்தலத்திலேயே மாணிக்கவாசகர் பிறந்ததாகச் சொல்லப் படும் இடத்தில் அவருக் கென ஒரு தனிக்கோயில் இருக்கிறது திருமறை நாதர் கோயிலுக்குத் தென்கிழக்கே கால் கல் தொலைவி லுள்ளது. திருவாதவூர் குடியிருப் புக்குக் கிழக்கே ஒரு தனியான இடத்தில் இருக்கிறது. திருமறை நாதர் கோயிலுக்குத் தெற்கே ஏழு வீட்டுக்கறுப்பண்ணர் கோயில் ஏழு சந்நிதிகளுடன் இருக்கின்றது அதற்கும் சிறிது தெற்கே, விஷ்ணு தீர்த்தம் என்று சொல்லப்படும் ஏரிக்கரையில் முழிச்சிப் பிள்ளையார் கோயில் இருக்கிறது. வாதவூரடிகளின் பெற்ருேர்கள் கண்ணொளி மழுங்கியபோது இந்த விநாயகரை வழிபட்டு நலனடைந்ததாகக் கூறப் படுகிறது. இவ்வூர் திரௌபதியம்மன் கோயிலில் பங்குனி மாதத்தில் நடைபெறும் பூக்குழி (தீமிதித்தல்) திருநாளன்று ஏராளமான மக்கள் கூடுகின்றனர்.

திருமறைநாயகர் கோயிலில் நாலுகால பூசை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம். ஐந்தாம் திருநாள் சுவாமி மேலூருக்கு எழுந்தருளுவார். விசாகத்தில் தீர்த்தம். ஆவணி மாதம் பிட்டுத்திருநாளுக்கு மாணிக்க வாசக சுவாமி மதுரைக்கு எழுந்தருளுவார்.

இத்தலத்தைப் பற்றி வட மொழியிலிருக்கும் மகாத்மியத்தை பிரம ஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் மொழி பெயர்த்திருக்கின்றனர். சென்னை, குகஸ்ரீ. ரசபதியவர்கள் "திருவாதவூர்த்தல வரலாறு" என்ற நூலை எழுதியிருக்கின்ருர்கள். தேவஸ்தானத்தார் வெளியிட்டிருக்கின்றனர். தல மான்மியத்தில் வரத நாரணர், நான்முகன், அக்கினிபகவான், வாயுதேவன், கௌதமர், கபிலர், பயிரவர், இயமன், சனிபகவான், அரஜை, நாதசன்மன், புருஷாமிருகம், இராஜசேகர பாண்டியன், மகாசேன பாண்டியன் முதலியோர் இத்

புருஷாமிருகம்



ஸ்ரீமாணிக்கவாசகர் தனிக்கோயில்

தலத்து இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற தாகக் கூறப்பெற்றிருக்கிறது.

திருவாதவூரிலிருந்து அரசாங்கத்தார் இரண்டு கல்வெட்டுக்களைப் படியெடுத்திருக்கின்றனர். ஒன்று ஊரிலுள்ள கல்லில் இருக்கிறது. அது மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவனின் (கி. பி. 1216-35) பதினாறும் ஆட்சியாண்டில் பொறித்தது. தவசியர்க்கு அமுதளிப்பதற்காக நிலம் விடப்பட்டதைக் கூறுகிறது. இந்தக் கல்வெட்டில் இறைவன் திருப்பெயர், ''திருவாதவூர்ப் பெருமாள்'' என்று குறிக்கப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு பெரியகுளத்தில் கிடக்கும் ஒரு கல்லில் இருக்கிறது. அது மதுரை விசுவநாத நாயக்க மன்னரின் காலத்தது. முத்து வீரப்பநாயக்கர் அய்யன் புண்ணியமாக தேவதானம் அளித்ததைக் கூறுகிறது. இதில் இறைவன் திருநாமம், ''திருவாதவூர் திருமறைநாத தேவர் தம்பிரானார்'' என்று காணப்படுகிறது.

பண் சுமந்த பாடல்
பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன்
பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி
வியன்மண்ட லத்தீசன்
கண் சுமந்த நெற்றிக்
கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்
டக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி
பாடுதுங்காண் அம்மானாய்

—மாணிக்கவாசகர்.

சிதம்பரம், தில்லையம்மன்கோயில் பிரமோற்சவம் 16—5—60 முதல் 29—5—60 வரை நடைபெற்றது.

செய்திகள்

குன்றத்தூர், சேக்கிழார் மடாலயத்தில், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவியுள்ள பேரறக் கட்டளை நிதியிலிருந்து அன்பர்களுக்கு அன்னம்பாலிப்புவிழா 30—5—60 அன்று நடைபெற்றது.

சிக்கல், நவநீதிசுவரசுவாமி கோயில், மகா கும்பாபிஷேகம் 28-8-60ல் நடைபெறும். அன்று மாலை இன்னிசைக் கச்சேரியும் உண்டு.

மதுரை, கூடலழகர் கோயில் வைகாசி பிரம்மோற்சவம் 30-5-60 முதல் 13-6-60 வரை நடைபெறும்.

கைலாசபுரம், கைலாசநாதசுவாமி கோயில் வைகாசிப் பெருந்திருவிழா 25—5—60 முதல் 3-6-60 முடிய நடைபெறும்.



திருவாதவூர் :
கோயில் விக்ரகங்கள்

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

22-4-60	கீவளூர் : அட்சயலிங்கசுவாமிகோயில்	திருப்பணி துவக்கவிழா.
,,	திருப்பனையூர் : சுந்தரேசுவரர்கோயில் ...	திருமுறைக்கோயில் நிறுவுதல்.
24-4-60	நாகை : காயரோகணசுவாமிகோயில் ...	கோபுரத்திருப்பணி துவக்குவிழா (வெள்ளிக்கரணையை திரு. வி. பி. ஜி. கோவிந்தராஜ பிள்ளை அவர்கள் ரூ. 1111-க்கு ஏலத்தில் எடுத்தார்கள்.)
,,	நாகை : சவுந்தரராஜப்பெருமாள் கோயில் ...	திருமங்கையாழ்வார் பாசுரக் கல்வெட்டு திறப்புவிழா.
25-4-60	திருமீயச்சூர் : மேகநாதசுவாமிகோயில் ...	திருமுறைக்கோயில் நிறுவுதல்.
,,	திருப்பாம்புரம் : சேஷபுரீசுவரர்கோயில்...	திருமுறைக்கோயில் நிறுவுதல்.
,,	திருமெய்ஞ்ஞானம் : ஞானபுரீசுவரர் கோயில் ...	திருமுறைக்கோயில் நிறுவுதல்.
,,	சிறுபுலியூர் : கிருபாசமுத்திரப்பெருமாள் கோயில் ...	திருமங்கையாழ்வார் பாசுரக் கல்வெட்டுத் திறப்புவிழா — திருக்குளத் திருப்பணித் துவக்குவிழா.
2-5-60	கும்பகோணம் : காளத்தீசுவரர்கோயில் ...	குடமுழுக்குவிழா.
,,	கும்பகோணம் : கரும்பாயிரவிநாயகர் கோயில் ...	குடமுழுக்குவிழா.
,,	கும்பகோணம்: வாணபுரீசுவரர்கோயில்...	திருப்பணிக் கால்கோள்விழா. டாக்டர் வி. ஆர் மூர்த்தி அவர்கள் வெள்ளிக்கரணையை ரூ. 311-க்கு ஏலத்தில் எடுத்தார்கள்.
,,	திருவாரூர் : தியாகராஜசுவாமி கோயில்...	தெப்பவிழாவை அறநிலையத்துறை அமைச்சர் துவக்கி வைத்தல்—கமலாலயத்தில் மண்டபத் திறப்புவிழா.
12-5-60	பெரும்பெயர்கண்டிகை : சுப்பிரமணிய சுவாமி கோயில் ...	திருப்பணித் துவக்கவிழவா.

கடலூர், திருப்பாதிரிப்புலியூர் வீர ஆஞ்சநேயசுவாமி கோயிலில் சென்னை ஏ.டி.(எம்) பிரைவேட் லிமிடெட், மானேஜிங் டைரக்டர் திரு. கே. ஜே. லிங்கம் அவர்களால் சுமார் ரூ. 2500 மதிப்பு செலவில் கட்டப்பட்டிருக்கும் அலங்கார மண்டபத்திறப்பு விழா கடலூர் அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. ரா. அ. வரதராஜப்பர், பி.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஷை கோயிலில் இலட்சதீப மகோற்சவம் 13-4-60 அன்று நடைபெற்றது. மேலும் ஷை கோயிலில் 15-4-60 முதல் 26-4-60 வரை பிரம்மோற்சவமும் நடைபெற்றது.

துறைமங்கலம் - சிவப்பிரகாசர்

"கல்வியிற் கரையிலாக் காஞ்சிமாநகர்" என்றும், "முத்திதரும் நகர் ஏழுள் முக்கிய மாம் கச்சி" என்றும் ஆன்றோர் உச்சிமேல் மெச்சிடும் கச்சியம்பதியென்னும் காஞ்சி புரம். இப் பெருநகரிலே பதினேழாம் நூற் ருண்டிலே குமாரசாமி தேசிகர் என்ற வீர சைவர் வதிந்தார். அவர் வேளாளர்களுக்குத் தீட்சா குருவாகவும் இருந்தார். அவருக்கு மூன்று ஆண்மக்களும், ஒரு பெண்மகவும் இருந்தனர். **சிவப்பிரகாசர், வேலையர், கருணைப் பிரகாசர், ஞானம்பிகை** என்பன அவர்களின் பெயர்கள். மூன்று பிள்ளைகளும் தந்தையா ரிடமே இலக்கண இலக்கியங்களையும், சமயக் கல்வியையும் இளமையில் கற்றனர். இவர்கள் சிறுவராய் இருக்கும்போதே தந்தையார் விண்ணுலகடைந்தனர். மனம் நொந்த சிவப் பிரகாசர் தம்பியரை அழைத்துக்கொண்டு திருவண்ணமலை சென்றனர். மலையை வலம் வரும்போதே நூறு செய்யுள்கள் கொண்ட **"சோணசைலமாலை"** என்ற நூலைப் பாடினர். அதில் ஒரு பாடல்,

மெய்த்தவரடிக்குற் றேவலின் திறத்தும் விளங்கு
மாகம உணர்ச்சியினும்
புத்தலர் கொடுநிற் பரவு பூசையினும் பொழுது
போக்கெனக் கருள்புரிவாய்
முத்தமு மரவ மணிகளு மெறிந்து முதிர்தினை
புனத்தெயின் மடவார்
தத்தைகள் கடியும் சாரலஞ் சோண சைலனே
கைலை நாயகனே.

'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்பதை யுணர்ந்த சிவப்பிரகாசர் இலக்கண இலக்கியங்களில் வல்லவரான ஒரு பேராசிரியரிடம் மேலும் கற்க வேண்டுமென் றெண்ணினர். அவ்வித தகுதியுடையார் யார் எனத் தேடினர். திக்கெலாம் புகழ்த் திருநெல்வேலியில் சிந்து பூந்துறையில் இருந்த **வெள்ளியம்பலத் தம்பிரானர்** அத்தகையவர் என்றறிந்தார். தம்பிரானர் தருமபுரி ஆதி னத்து நாலாம் பட்டத்தில் அருளாட்சி செய்த மாசிலாமணி தேசிகர்பால் சிவதீட்சை பெற்றவர்; காசிக்குச் சென்று குமரகுருபர அடிகளாரிடம் கற்றவர்; நூல்கள் சிலவும் இயற்றியவர். அவரை நாடிப் புறப்பட்டார் சிவப்பிரகாசர். பலநாள் நடந்து துறைமங் கலம் என்னும் ஊரை அடைந்தார். அவ் வூருக்கதிபதி அண்ணமலை ரெட்டியார் என் பவர்; ஒழுக்கமிக்கவர்; அடியார்பால் அன் புள்ளவர்; பாவலரைப் போற்றும் பண்புள் ளவர்; கல்வி கேள்விகளிலும் வல்லவர். தம் மூரில் தங்கியிருந்த சிவப்பிரகாசரைப் போய்க்கண்டார். சிவப்பிரகாசரின் இளமை எழிலும், முகப்பொலிவும், தெய்வக் களையும் ரெட்டியாரின் மனதைக் கவர்ந்தன. சிவப் பிரகாசரைத் துறைமங்கலத்திலேயே இருக் கும்படி வேண்டினர். அவரும் இசைய அவ ருக்கு ஒருமடமும் அமைத்துக் கொடுத்தார். இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து சிவப் பிரகாசர் பின்னர் திருநெல்வேலிக்குச் செல்ல வேண்டுமென்ற விருப்பத்தை ரெட்டியா ரிடம் தெரிவித்தார். ரெட்டியாரும் முந்நூறு பொன் கொடுத்து வழியனுப்பினர்; திரும்பி வந்து தம்மூரிலேயே தங்க வேண்டும் என் றும் வேண்டிக்கொண்டார்.

சிவப்பிரகாசர் தம்பியருடன் புறப்பட் டுத் தாம்பிரவருணி யாற்றின் கரையிலுள்ள சிந்துபூந்துறையை அடைந்தார், வெள்ளி யம்பலத் தம்பிரானரைக் கண்டார்; வணங் கினர்; எழுந்தார். "உயிரும் உடலுமாய் உள்ள செந்தமிழ் எழுத்தே, அவ்வெழுத்துக் கள் சேர்ந்த சொல்லே, அச்சொல்லின் பொருளே, பொருள் பொதிந்த யாப்பே (பாட்டே), அதற்கு ஒளிசெய்யும் அணியே, தங்கள் அடியார் திருக்கூட்டத்தில் எங்களை யும் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று விண்ணப்பித்தார். தம்பிரானர் சிவப்பிரகா சர் வேண்டுகோளில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்க ணங்களை அமைத்துச் சொல்லியிருப்பதற்கு

மகிழ்ச்சி தெரிவித்தார். சிவப்பிரகாசர் தங்கள் வரலாற்றைக் கூறி, கல்வி கற்பதற்காக வந்ததையும் தெரிவித்தார். வெள்ளியம்பல வாணர், சிவப்பிரகாசரை, 'கு' என்று தொடங்கி 'கு' என்று முடியும்படி ஒரு பாடல் பாடும்படி கூறினார். உயர்ந்த கருத்துக்கள் நிறைந்த பாடலைச் சிவப்பிரகாசர் உடனே பாடினர். தம்பிரானார் மிக மகிழ்ந்து அவருக்கும் அவர் தம்பியர்க்கும் இலக்கண இலக்கியச் செல்வங்களை வாரி வழங்கினார்.

சிலகாலம் சென்றபின் சிவப்பிரகாசர் அண்ணாமலை ரெட்டியார் கொடுத்த முந்நூறு பொன்னையும் வெள்ளியம்பல சுவாமிகளின் முன்பு வைத்து, குருதட்சிணையாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். சுவாமிகள் அதை ஏற்க மறுத்து, "திருச்செந்தூரில் ஒரு புலவன் நம்மைச் சிறுமை பேசித் திரிகிறான். அவனை வாதத்தில் வென்றடக்குவதே நீர் எமக்குத்தரும் குரு காணிக்கை" என்று சொன்னார். விடைபெற்றுப் புறப்பட்டார் சிவப்பிரகாசர்; திருச்செந்தூரை யடைந்தார்; முருகப் பெருமானை வணங்கி வழிபட்டார். இவர் வருகையையறிந்த போலிப்புலவன் இவரை எதிர்ப்பட்டான்! 'நீர் யார்?' என்றான் சிவப்பிரகாசரை நோக்கி. 'அடியேன் வெள்ளியம்பலத் தம்பிரானின் திருவடிப் புழுதி' என்று பதில் எழுந்தது. "அப்படியாயின் அப்புழுதி என் புலமைக்காற்றில் பறந்தோடுமே" என்றான் செந்திற்புலவன். "திருவடிக்கீழுள்ள புழுதி போலிப்புலமைக் காற்றில் எங்ஙனம் பறக்கும்" என்று சிவப்பிரகாசர் வாக்கு பிறந்தது. இச் சொற்கள் புலவனைத் திணற வைத்துவிட்டது. நிரோட்டக யமக அந்தாதி முப்பது பாடல்களை எவர் முதலில் பாடுகிறாரோ அவரே வென்றவர்; அவருக்குத் தோற்றவர் அடிமை என்ற நிபந்தனையுடன் இருவரும் பாட ஆரம்பித்தனர். சிவப்பிரகாசர், திருச்செந்தூர் முருகன்மீது நிரோட்டகயமக அந்தாதி முப்பது பாடல்களைப் பாடி முடித்தார். (மேலுதடும் கீழுதடும் படாமல் பாடுவது நிரோட்டகம்). போலிப்புலவன் பாட முடியாமல் சிவப்பிரகாசரை அடிபணிந்தான். சிவப்பிரகாசர், "நீர் எமக்கடிமை யல்லீர். எங்கள் ஆசிரியர் வெள்ளியம்பலத்தம்பிரானாருக்கு அடிமை. வாருங்கள் அவரிடம் போகலாம்" என்று அழைத்துச் சென்றார், சிந்து பூந்துறை யடைந்து செந்திற் புலவராம் காணிக்கையை அம்பலவாணர் திருமுன் படைத்தார். தம்பிரானாரும் அகமிக மகிழ்ந்தார்.

சிவப்பிரகாசர் தம்மூர் செல்ல எண்ணினார். ஆசிரியரிடம் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டார். வருகிற வழியில் பூவிரி பொழில்சூழ் காவிரிக் கரையிலுள்ள திருக்காட்டுப்பள்ளி யென்னும் திருத்தலத்தை யடைந்தார். "உப்போ உப்பு" என்று விலை கூறிவரும் ஒரு பெண்ணைப் பார்த்தார். அவள் புலமை நிறைந்தவள் என்று சிவப்பிரகாசரின் மனதிற்பட்டது. அவளை நோக்கி,

நிறைய வுளதோ வெளிதோ கொளுவோம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா—னுறையும்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு

என்ற பாடலைப் பாடினார். "பிறைமுடிப் பெருமான் எழுந்தருளியுள்ள திருக்காட்டுப் பள்ளியில் திரிகின்ற பெண்ணே! நீ இங்கு இரு. எமக்கு உப்பை அள்ளிக்காட்டு. நிரம்ப உப்பு இருக்கிறதா? வெண்மை யானதா? அப்படியானால் வாங்குவோம்" என்பது பாட்டின் பொருள். உப்பு விலை பகரும் மாதின் மனதில் உவகைபூத்து ஒரு பாட்டாக வெளிவந்தது. அது பின்வருமாறு :-

தென்னோங்கு தில்லைச்
சிவப்பிரகாசப் பெருமான்
பொன்னோங்குஞ் சேவடியைப்
போற்றினோம்—அன்னோன்
திருக்கூட்ட மத்தனைக்கும்
தெண்டனிட்டோம் தீராக்
கருக்கூட்டம் போக்கினோம் காண்.

அவளது பாடும் புலமையையும், பக்திப் பெருமையையும் கண்டவர் திகைத்தனர். சிவப்பிரகாசர் அவளுக்கு ஞானோபதேசம் செய்தார். பல தலங்களையும் வணங்கி வழிபட்டு விட்டுத் துறைமங்கலம் சேர்ந்தார். அண்ணாமலை ரெட்டியார் அன்புடன் வரவேற்றார்; மடத்தில் தங்க வைத்தார்.

ஒருநாள் அண்ணாமலை ரெட்டியார் சிவப்பிரகாசரை அண்மி "தங்களுக்குத் திருமணம் செய்துகாண ஆவல். அதை நிறை

வேற்றி வைக்கவேண்டும்" என்றிறைஞ்சினார். சிவப்பிரகாசர் தம்முடைய மனம் துறவறத்தை நாடுவதைத் தெரிவித்து மணம் செய்துகொள்ள மறுத்தார். ரெட்டியார் அவர் உடன்பாட்டுடன், தம்பியர்களான வேலையர், கருணைப்பிரகாசர் இருவருடைய திருமணத்தையும் சிறப்பாகச் செய்து முடித்தார். அத்திருமணங்களில் சிவப்பிரகாசர் அரிசி சேஷை யிடும்போது பாடிய பாடல்கள் மிகவும் நகைச்சுவைப் பொதிந்தவை.

மேலும் தலயாத்திரை செய்ய சிவப்பிரகாச சுவாமிகளின் மனம் விழைந்தது. ரெட்டியாரிடம் விடைபெற்றுக் காஞ்சியை அடைந்தார். காஞ்சிப் பெருமக்கள் அவரை வரவேற்று உபசரித்தனர். அங்கு அப்போது திருப்போரூர்ச் சாந்தலிங்கர் வந்திருந்திருந்தனர். இருவரும் அளவளாவினர். சாந்தலிங்கர், பொம்மபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவஞான பாலையசுவாமிகளைப் பார்க்கப் போவதாக அறிவித்தார். தாமும் உடன் வருவதாக சிவப்பிரகாச அடிகள் தெரிவித்தார். பொம்மபுரம் அடைந்து பாலையரைக் கண்டு வணங்கினர். சிவப்பிரகாசர் அவர் மீது நெஞ்சுவிடுதூது, தாலாட்டு என்ற இரண்டு நூல்களைப் பாடினார். சிவஞான பாலையரின் திருவுளக் குறிப்பின்படி சிவப்பிரகாசர் தம் தங்கையாகிய ஞானம்பிகையை சாந்தலிங்கருக்கு மணம்செய்து கொடுத்தனர்.

பின்னர் அண்ணாமலை ரெட்டியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி வாலிகண்டபுரத்திற்கு வடமேற்கிலுள்ள வெங்கனூரில் தங்கினார். அத்தலத்திறைவன்மீது திருவெங்கைக் கோவை, கலம்பகம், உலா, அலங்காரம் என்னும் நூல்களை யியற்றினார்.

பிறகு சிதம்பர தரிசனம் செய்ய எண்ணிய சுவாமிகள் அங்கு சென்றடைந்தார். இறைவனை வழிபட்டு அங்கு தங்கியிருந்த போது சிவப்பிரகாசவிகாசம், தர்க்கபரிபாஷை, சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை முதலிய நூல்களை இயற்றினார். நால்வர் நான்மணிமாலை, சமயகுரவர் நால்வருடைய பாடல்களின் அருமைகளைத் தெரிவிப்பதோடு அவர்களைப் போற்றி வழிபடும் தோத்திர நூலாகவும் அமைந்திருக்கிறது. அதில்,

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை உலகின் மற்றைய ரிலரே

என்று மாணிக்கவாசகரின் திருவாசகத்தைப் பற்றிக் கூறும் பகுதி இன்பம் பயப்பது.

இன்னும், சிவப்பிரகாச சுவாமிகள் நீதிநூலான நன்னெறி, பிரபுலிங்கலீலை, திருக்கூவப்புராணம், சித்தாந்தசிகாமணி, வேதாந்த சூடாமணி, நிரஞ்சனமாலை, கைத்தலமாலை, அபிஷேகமாலை, இஷ்டலிங்கப் பெருங்கழிநெடில்விருத்தம், இஷ்டலிங்கக் குறுங்கழிநெடில்விருத்தம், பெரியநாயகிக் கட்டளைக் கலித்துறை, பிட்சாடன நவமணிமாலை, பெரியநாயகி விருத்தம் முதலிய எல்லாமாக முப்பது நூல்களை இயற்றியுள்ளனர். சுவாமிகளைக் கற்பனைக் களஞ்சியம் என்று கூறுவர் ஆன்றோர். வெங்கனூரிலிருந்த தம்பியாகிய கருணைப்பிரகாசர் பதினெட்டாவது வயதில் மண்ணுலக வாழ்வை நீத்தார் என்று சுவாமிகள் அறிந்து, அங்கு அடைந்து அவர் சமாதிக் குழியிடம் பாடிய பாடல்கள் கல்மனதையும் கரையவைப்பவை. கருணைப்பிரகாசர், சீகாளத்திப் புராணம் பாடத்தொடங்கி சீகாளத்தி சருக்கம் வரையில் பாடி, சிவலோகம் அடைந்தார். சிவப்பிரகாச சுவாமிகள் கண்ணப்பச் சருக்கம், நக்கீரர் சருக்கம் என்ற இரண்டையும் இயற்றியருளினார். நக்கீரர் சிவபெருமான் விழித்தீயால் வெந்து, அந்நோய்தீரக் கயிலை நோக்கிப் புறப்படுகிறார். சங்கப் புலவர்களை விட்டுப்பிரிய மனமில்லை. பிரிவாற்றாமையைக் காட்டும் சிவப்பிரகாச அடிகளாரின் நக்கீரச் சருக்கப் பாட்டொன்று :

என்றினி மதுரை காண்பேம்;
எப்பகல் சவுந்தரேசன்
தன்திருவடிகள் காண்பேம்;
தாயையெஞ்ஞான்று காண்பேம்;
வென்றிவேல் தருமவேந்தர்
வேந்தனை எந்நாட்காண்பேம்;
ஒன்றுயிர்த்துணையாம் சங்கத்துறவை
எப்பொழுது காண்பேம்.

சிவப்பிரகாசர் சீகாளத்திப் புராணத்தில் இரு சருக்கங்களைப் பாடிய பின்னர் தமது முப்பத் திரண்டாவது வயதில் சிவசாயுச்சிய பதவி அடைந்தனர். பின்னர் வேலையர் அந்நூலைப் பாடி முடித்தனர். துறைமங்கலம்—சிவப் பிரகாசர் தமிழன்னைக்கு அணிந்து மகிழ்ந்த அணிகலன்கள் முப்பது. அவைகளில் திரு வள்ளுவரின் நீதியும், இளங்கோவடிகளின் இயற்கையழகும், கம்பரின் கவித்திறனும் கண்டு மகிழலாம். நால்வர் நான்மணிமாலை யைப் பற்றிய பாடல் பின்வருவது :—

பிள்ளையார்க்கு வெண்பா
அரசுக்குக் கட்டளைதான்
நள்ளுங் கலித்துறை
நம்பிக்குக்—கொள்விருத்தம்
நம்அடிகட் காம்அகவல்.
நாமுய்யத் தாம்நவின்றூர்
செம்மைச் சிவப்பிரகாசர்.



பெரும்பேறு கண்டிகை - சுப்பிரமணியசுவாமி கோயில்
திருப்பணிக் கால்கோள் விழாவை ஆணையர் துவக்கி வைத்தல் (12-5-60)

அழகிய மணவாளதாசர்

'அஷ்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் புலவன்'' என்று நமது நாட்டில் ஒரு பழமொழி நிலவி வருகிறது. அஷ்டப் பிரபந்தம் என்பது எட்டு வைணவ நூல்களின் தொகுதி. நாலாயிரப் பிரபந்தத்தின் பின்னர் வைணவச் சார்பில் எழுந்த சிறந்த சிற்றிலக்கிய நூல்கள் அடங்கியவையாதலின் அதற்கு இப்பெயர் ஏற்பட்டது. திருஅரங்கக் கலம்பகம், திருஅரங்கத்துமாலை, திருஅரங்கத்து அந்தாதி, சீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்து அந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்பன அவை எட்டும். இந்த நூல்களை இயற்றிய புலவர் பிள்ளைப்பெருமாளையங்கார் என்னும் வைணவ அந்தணர். அவருக்கு அழகிய மணவாளதாசர் என்ற பெயரும் உண்டு. அந்தாதிச் செய்யுட்களும், யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகளும், சொல்நயம், பொருள்நயம் இவைகளும் பொதிந்துள்ள பாடல்களும் இயற்றி யுள்ளாரான படியால் இவரைத் 'திவ்விய கவி' என்றும் அறிஞர் போற்றுவர்.

பிள்ளைப் பெருமாளையங்கார் திருமங்கையில் தோன்றியவர். திருவரங்கத்திலேயே வாழ்ந்தார். கூரத்தாழ்வான் என்னும் ஆசாரியரின் மாணவரான பட்டரிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றார். ஆகலின் இவரதுகாலம் ஸ்ரீபராசரபட்டரின் காலமான கி. பி. 12ஆம் நூற்றாண்டென்பர். வேறு சிலர், இவர் திருமலைநாயக்கரிடம் அரசாங்க அலுவலராக இருந்தமையால் அவர் காலத்தவர் என்பர். இவர் தென்மொழி வடமொழிவல்லுநர்; திருவரங்கத்து எம்பெருமானிடம் பேரன்பு பூண்டவர்; தமது வாழ்நாட்களில் பெரும்பகுதியைத் திருவரங்கத்திலேயே கழித்தவர்.

மணிதக்கவி மொழியா மங்கை வாழ்
மணவாள வள்ளல்

என்றும்,

குணவாள பட்டர் இருகோகனத் தாள்சேர்
மணவாள தாசன்

என்றும் இவர் சிறப்பித்துப் பேசப்படுகிறார். எட்டு நூல்களையன்றி, 'திருநறையூர் நம்பி மேக விடுதூது', 'பரப்பிரம்ம விவேகம்' என்ற இரண்டு நூல்களையும் இயற்றினார் என்றும் சிலர் கூறுவர். வேறு சிலர் இவர் எழுதியவை அல்ல அந்த நூல்கள் என்றும் கருதுகின்றனர்.

அஷ்டப் பிரபந்தம் என்ற பெயர் நூலாசிரியர் இட்டதன்று. பின்னால் தொகுத்து வைத்தவர் எவரோதான் அப்பெயர் சூட்டியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. எட்டு நூல்களினும் 751 செய்யுட்கள் உள்ளன. அவையடக்கம், காப்புச் செய்யுட்கள் முதலிய 39 பாடல்களையும் சேர்க்க, தொகை 790 ஆகும்.

சொல் நோக்கும் பொருள் நோக்கும்
தொடை நோக்கும் நடை நோக்கும்
துறையின் நோக்கோடு
எந்நோக்கும் காண இலக்கியம் ஆவது

என்று திருவரங்கக் கலம்பகத்தைச் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இந்தப் பாராட்டு இத்தொகுதியின் மற்ற நூல்களுக்கும் பொருந்தும்.

திருவரங்கக் கலம்பகத்தில் அழகான ஒரு காட்சி. வேடர்கள் குலப்பெண்ணை மணம்பேச மன்னனின் தூதுவர் ஓலை கொண்டுவந்து, திருமுகம் கொண்டு வந்திருக்கிறோம் என்ன, திருமுகம் என்றால் ஓலை என்று பொருள் தெரியாத வேடர்கள் முகம் (உடலிற் சிறந்த உறுப்பு) என்றே கொண்டு பின்வருமாறு பேசக் காண்கிறோம் :—

கொற்றவன்தன் திருமுகத்தைக்
கொணர்ந்த தூதா!
குறை உடலுக்கோ மறவர்
கொம்பைக் கேட்டாய்

அற்றவர்சேர் திருஅரங்கப்
பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலம்
என்று அறியாய்போலும்

மற்றதுதான் திருமுகமே
ஆனால் அந்த
வாய்,செவி, கண்,மூக்கு
எங்கே? மன்னர்மன்னன்

பெற்றஇள அரசுஆனால்
ஆலின் கொம்பைப்
பிறந்த குலத்தினுக்கு
ஏற்கப் பேசுவாயே!

[திருஅரங்கப்பெருமாள் தோழன்—இராமனின் தோழனை குகன் என்னும் வேடர்குலத் தலைவன்]. இப்பாடலில் ஆல், அரசு என்ற மரப்பெயர்களை அமைத்துக் காட்டியிருக்கும் ஐயங்காரின் வாக்குநலம் நோக்கத்தக்கது. மறவர்கள் மேலும் கூறு கிறார்கள் :—

பேசவந்ததூத! செல்அரித்த
ஓலை செல்லுமோ?
பெருவரங்கள் அருள்
அரங்கர்,பின்னை கேள்வர்தாளிலே

பாசம்வைத்த மறவர்பெண்ணை
நேசம்வைத்து, முன்னமே
பட்டமன்னர் பட்டது எங்கள்
பதிபுகுந்து பார்அடா!

வாசலுக்கு இடும்படல்
கவித்துவந்த கவிகை;மா
மகுடகோடி தினைஅளக்க
வைத்தகாலும், நாழியும்

வீசுசாமரம் குடில்தொடுத்த
கற்றை; சுற்றிலும்
வேலிஇட்டது, அவர்கள்இட்ட
வில்லும்,வாளும், வேலுமே.

இப் பாட்டு மிடுக்கு நடையில் செல்வதைப் படித்துப் படித்தின்புறலாம். ஓலையில் எழுத்துக்கள் பொறித்திருப்பதைச் செல் (கறையான்) அரித்தது என்கின்றனர் வேடர்கள். "திருவரங்கப் பெருமானிடம் காதல்வைத்த எங்கள் பெண்ணைவிழைந்து வந்த அரசர்களின் கதியென்ன ஆயிற்று என் பதை எங்கள் வீட்டில் வந்து பாருங்கள். அரசர்கள் குடைகள் எங்கள் வீட்டுவாயில் படல்கள்; அவர்களின் மணிமகுடங்கள் நாங் கள் தினையளக்கும் மரக்கால்களும் படிகளும்; அவர்களின் சாமரங்களை எங்கள் வீட்டிற் குக் கூறைவேய்ந்திருக்கிறோம்; அவர்கள் போட்டுவிட்டுச் சென்ற வில், வாள், வேல் முதலியவற்றைக் கொண்டு வீடுகளைச் சுற்றி வேலி போட்டிருக்கிறோம்" என்று வீரத் துடன் தூதர்களிடம் பேசுகின்றனர்.

பிள்ளைப் பெருமாளையங்காரின் அழகர் அந்தாதியில் அழகிய கருத்துடைய பாடல் ஒன்று பின் வருவது :—

தெய்வம்பல, அவர்நூலும்பல,
அவைதேர் பொழுதில்
'பொய்வம்புஅல' என்றுதோன்றும்,
புல்லோர்கட்கு; போதநல்லோர்
'உய்வம், பலனும்அவனே'என்று
ஓதிஉணர்வர்—நெஞ்சே!
கொய் வம்புஅலர் சொரியும்
சோலை மாமலைக் கொண்டலையே.

அவருடைய நூல்களில் ஆழ்வார்களின் பிரபந்தக் கருத்துக்களும், சொற்றொடர்களும் மிக்குபயின்று வருகின்றன. ஆதலின் அவை கள் ஆழ்வார்களின் அருளிச்செயல்களின் சாரமாகவும், ஆசாரியர்களின் இரகசிய கிரந் தங்களின்பொருள்பொதிந்தும் திகழ்கின்றன. சீரங்கநாயகர் ஊசல் என்னும் நூலில் ஆழ்வார்கள் ஆசாரியர்கள் இவர்களைப் போற்றிப் புகழ்ந்திருப்பது டன் அவர் கள் மொழிந்துள்ளதைப் பொன்னே போல் போற்றி எடுத்துக் கையாண்டிருக்கும் திறமையைக் காண அவருக்கு **திவ்வியகவி** என்ற பட்டப்பெயர் கொடுத்திருப்பது முற் றிலும் தகும் என்பதை உணர்த்துகின்றது.

செய்திகள்

விருத்தாசலம், விருத்தகிரீசுவரர் கோயில் வசந்த மகோற்சவம் 29—5—60 முதல் 7-6-60 வரை நடைபெறும்.

சங்ககிரி, சென்னகேசவப்பெருமாள் கோயில் இரதோத்சவம் 3-5-60 முதல் 14-5-60 வரை நடைபெற்றது.

குமாரவயலூர், சுப்பிரமணியசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 28-5-60ல் தொடங்கி 9—6—60 வரை நடைபெறும்.

திருநெல்லிக்காவல், நெல்லிவனநாதசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 29-4-60 முதல் 11-5-60 முடிய ஒவ்வொரு நாளும் சமயச்சொற்பொழிவு, இன்னிசை அரங்கு இவைகளுடன் நடைபெற்றது.

மதுரை, மீனுட்சிசுந்தரர் திருக்கோயில் திருப்பணித் தொடக்கவிழா, திரு கே. பாலசுப்பிரமணிய ஐயர், எம். எல். சி. அவர்கள் தலைமையில், சென்னை அறநிலையத் துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் கலந்து கொண்டு விளக்கவுரை ஒன்றும் நிகழ்த்தினுர்கள்.

நயினுர்கோயில், நாகநாதசுவாமி கோயில் வசந்தோற்சவம் 28-5-60 முதல் 9-6-60 வரை நடைபெறும்.

சென்னை, நுங்கம்பாக்கம் அகத்தீசுவரர் வகையருக் கோயில்களில் வசந்தோற்சவம் 30-5-60 முதல் 1-6-60 வரை நடைபெற்றது.

சிவகாசி, விசுவநாதசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 25-5-60 முதல் 5-6-60 வரை நடைபெறும்.

பிக்ஷாண்டார் கோயில், உத்தமர் கோயில் பிரம்மோற்சவம் 28-5-60 முதல் 8-6-60 வரை நடைபெறும்.

நாட்டரசன்கோட்டை, கண்ணுடையநாயகி அம்மன் கோயில் பிரம்மோற்சவம் 29—5—60 முதல் 8—6—60 வரை நடைபெறும்.

திருப்புன்கூர், சிவலோகநாதசுவாமி கோயில் வைசாக மகோற்சவம் 28—5—60ல் தொடங்கப்பெற்று 8-6-60 வரை நடைபெறும். சமயச்சொற்பொழிவுகளும் நடைபெறும்.

தேரழுந்தூர், ஆமருவியப்பன் கோயில் பிரம்மோற்சவம் 5-6-60 முதல் 19-6-60 வரை நடைபெறும்.

மதுரை, கள்ளழகர் வகையருக்கோயில், ஊழியர் குடியிருப்பு மனை, ஸ்ரீகள்ளழகர் தேவஸ்தான அலுவலகம் ஆகியவற்றை தமிழவேள் திரு. பி.டி. இராஜன். பார்-அட்-லா, எம். எல். ஏ., அவர்கள் தலைமையில், சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் 27—5—60ல் திறந்து வைத்தார்கள். சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களும் கலந்து கொண்டார்கள்.

திருத்தம் : இவ்விதழ் 19 ஆம் பக்கத்திலுள்ள தலைப்பு **"கண்ணப்ப நாயுயர்"** என்பதை **"கண்ணப்ப நாயனுர்"** என்று வாசிக்கவும்.

அம்பாசமுத்திரம், கிருஷ்ணசாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருந்திருவிழா 29—5—60 முதல் 8—6—60 வரை நடைபெறும்.

பேட்டவாய்த்தலை, மத்யார்ச்சுனேசுவரசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 1—6—60 முதல் 5-6-60 வரை நடைபெறும். ஒவ்வொரு நாளும் சமயச்சொற்பொழிவுகளும் நடைபெறும். 8-6-60ல் சுவாமி முத்துப்பல்லக்கில் புறப்பாடு நடைபெறும்.

திருக்காருயில், கண்ணாயிரநாதசுவாமி, ஆதிவிடங்கத்தியாகராசசுவாமி கோயில் பிரமோற்சவம் 19—5—60ல் தொடங்கி 9-6-60 வரை நடைபெறும். சமயச்சொற்பொழிவுகளும் நடைபெறும்.

பரதூர், அகத்தீசுவரர் கோயில் மின்சார விளக்குத் திறப்புவிழாவை கடலூர் அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு, ஆர். ஏ. வரதராஜய்யர் அவர்கள் 27—5—60-ல் துவக்கி வைத்தார்கள். அதுபோது வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியம் அவர்கள் நமிநந்தியடிகளின் பெருமை பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

ஸ்ரீபழனியாண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரி, பழனி.

பழனி ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்தாரால் **ஸ்ரீ பழனியாண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரி**" என்ற பெயருடன் கல்லூரியொன்று 1960 ஜூலை மாதம் முதலில் தொடங்கப்பெறும். அது சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. முதலில் பி. ஏ. வகுப்புக்குரிய கீழ்க்காணும் பாடத் திட்டத்தின்படி கற்பிக்கப்படும்:—

பகுதி I—ஆங்கிலம்
பகுதி II—தமிழ், சம்ஸ்கிருதம்
பகுதி III—கீழ்த்திசைக்கலை
பகுதி IV—வானநூல், நிலநூல், மானிடநூல்.

15834

இந்துமதச் சார்புடைய பையன்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் பல்கலைக் கழகப் புகுமுகத்தேர்ச்சி (Pre-university) பெற்றவர்களாக இருக்கவேண்டும். கல்லூரிக் கட்டணம் இல்லை. உணவும், உறைவிடமும் இலவசமாக அளிக்கப்படும். கல்லூரியில் சேர விரும்புகிறவர்கள் கீழ்க்காணும் விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை (இரண்டு நகல்களாக) அடியிற் கையொப்பமிட்டவருக்கு 15—6—1960-க்குள் அனுப்பவேண்டும்:—

(1) விண்ணப்பதார் பெயரும், முகவரியும். (ஊர், மாவட்டம் முதலியன).
(2) தகப்பனார் பெயரும், தொழிலும்.
(3) பிறந்த தேதி.
(4) எந்தக் கல்லூரியிலிருந்து புகுமுகப் பல்கலைத் தேர்வுக்கு எழுதியது (Pre-University Examination)—தேர்வு பதிவு எண்ணும், தேர்வு பெற்ற தேதியும்.
(5) விண்ணப்பதாருக்கு சமயக் கல்வி கற்க விருப்பமுண்டென்பதைக் காட்ட மதிப்பு வாய்ந்த இருவரிடம் நற்சான்றுச் சீட்டுகள் பெற்றனுப்பவேண்டும்.

P. S. K. இலட்சுமிபதிராஜு M. L. A.,
தர்மகர்த்தக் குழுத்தலைவர்,
ஸ்ரீதெண்டாயுதபாணி தேவஸ்தானம், பழனி.

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

திருப்பள்ளியெழுச்சி

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
    புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
    எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்
    திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
    எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

[எனது வாழ்விற்கு மூலமாகிய பொருளே! திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே! இடபக்கொடியுடையவனே! என்னை அடிமை கொண்டவனே! என்தலைவனே! வணக்கம். பொழுதுவிடிந்தது. திருவடிகள்மீது மலர்தூவி உனது திருமுகத்தில் பூக்கும் புன்னகையைக்கண்டு நினது திருவடிகளைத் தொழுவோம். படுக்கையினின்றும் துயிலுணர்ந்தெழுந்தருள்க.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
    மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
    ஊற்றமுடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்றசுடரே துயிலெழாய்
    மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்து உன்னடிபணியு மாபோலே
    போற்றியாம்வந்தோம் புகழ்ந் தேலோ ரெம்பாவாய்.

[பாத்திரங்கள் பொங்கி வழியும்படி இடைவிடாமல் பால்சுரக்கும் பெரிய பசுக்களை மிகுதியாக வுடைய நந்தகோபன் மகனே! அடியார்துயர் களைவதில் முயற்சி யுடையவனே! பெருமைமிக்கவனே! உலகில் அவதரித்த ஒளிவடி வானவனே! எழுந்திருப்பாயாக. பகைவர் உன்னை எதிர்க்க வலியிழந்து ஆற்றாது உன் வாயிற்கண் வந்து உனது திருவடிகளை வணங்குவதுபோல நாங்களும் உன்னைப் புகழ்ந்து போற்றி வந்தோம்.]

அடியவர் திருநட்சத்திரங்கள்

சார்வரி—ஆனி

சைவம்

15உ—மாணிக்கவாசக சுவாமிகள்   17உ—அமர்நீதிநாயனார்
32உ—ஏயர்கோன் கலிக்காமநாயனார்

வைணவம்

21உ—பெரியாழ்வார்

திருவாரூர்த் தெப்பத்தின் தோற்றம்

திருவாரூர்க் கமலாலயத்தில் ரூ. 50,000 செலவில் புதிதாகச் செய்யப்பெற்ற தெப்பததை அறநிலைய அமைச்சர் கனம் M. பக்தவத்சலம் அவர்கள் 2-5-60-ல் இயக்கி வைத்தார்கள். அன்றும், 3-5-60, 4-5-60 மூன்று நாட்களிலும் தெப்ப விழா சிறப்பாக நடை பெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6